
ராணி முத்து
விஜி விக்னேஷ்
ரூ.6
உன்னிடம் மயங்குகிறேன்

## 1

அழகான, அகன்ற வெண்கலப் பாத்திரத்தில் உள்ள நீரில் பல வண்ணப் பூக்களின் இதழ்களைத் தூவி– விசாலமான ஹாலின் நடுவில் வைத்துவிட்டு, ஒரு ரசனையான சிரிப்போடு

விஜி விக்னேஷ்



# உன்னிடம் மயங்குகிறேன்



திரும்பிய வசீகரியை முறைத்துப் பார்த்தான்... நெடிய பாறாங்கல்!

அந்த நிமிடம் அவனைப் பார்ப்பவர்கள், பாறாங்கல்லைத் தவிர, வேறு எதையும் உவமையாகக் கூற மாட்டார்கள். அப்படியொரு 'கடுகடு' முகத் தோற்றத்துடன் நின்றிருந்தான் அவன்.

"அவ்வளவு தூரம் நான் சொல்லிய பிறகும், அங்கே இங்கேன்னு நின்று பார்த்ததோடு நில்லாமல்... என்ன திமிர் இருந்தால் வீட்டுக்குள்ளேயும் நுழைந்திருப்பாய்? கழுதை! யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் இங்கிருந்து ஓடுகிறாயா? அல்லது, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளட்டுமா?" என்று தயவு தாட்சண்ணியமின்றித் திட்டி, தன் கடுங்கோபத்தை வெளிப்படுத்தினான் அவன்.

நல்லவேளையாக காலை ஆறு மணிக்கெல்லாம் வீட்டைத் துடைத்து, கிரானைட்ஸை பளபளக்க வைத்துவிட்டு வெளிப்பக்கம் இருக்கும் வேலைகளைப் பார்க்கச் சென்றுவிட்டனர் பணியாட்கள். அந்தத் தெனாவட்டில்தான், இவ்வளவு அலட்சிமாகப் பேசுகிறானோ?

அன்றி, யாராவது இருந்திருந்தாலும் இப்படியேதான் அவமதித்திருப்பானா? செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை! கர்வம் பிடித்தவன்!

வெகு இளமையான இவள் முகம் சிவந்து சீற நினைத்தபோது, மனக்கண் முன் அன்பே உருவான தாயின் முகம் தோன்றவும், ஒரு பெருமூச்சோடு கண்களை அழுந்த மூடித் திறந்தாள் வசீகரி.

"என்ன... வாயடைத்துப் போயிற்றா? அல்லது பேச முடியாதபடி கடவுள் உன்னை ஊமை ஆக்கிவிட்டாரா?" என்று நையாண்டி செய்தான், அந்த நெட்டையன்.

முதலில், கழுதை! அடுத்து, ஊமையா?

இனியும் பொறுத்திருக்க அவளென்ன பூமாதேவியா?

அவள் கூட அடிக்கடி வெடித்து, தன் கோபத்தை வெளிப்படுத்துகிறாளே!



எனவே...

"கழுதையிடம் ஒழுங்காக நடந்து கொள்ளவில்லை என்றால், பின்னங்காலாலே ஓங்கி உதைத்துவிடும் என்பது தெரியாது போல! மேலும், நீங்கள் என்ன கடவுளை குத்தகைக்கு எடுத்திருப்பதாக எண்ணமா? அப்படியே நீங்கள் ஆசைப்பட்டுவிட்டீர்கள் என்பதற்காக, என்னை ஊமை ஆக்கிவிட?" என்று ஏளனமாக கேட்டாள்.

அவளின் குரலில் மறைந்து கிடந்த உதாசீனத்தை அலட்சியப்படுத்திவிட்டு, "என்னது... உதைப்பாயா? எவ்வளவு தைரியமிருந்தால், எங்கள் வீட்டிலேயே நின்றுகொண்டு இதைச் சொல்வாய்? உன் அம்மாவின் திமிர், வழி வழியாக வருகிறது போல?" என்று ஆத்திரமாக மட்டம் தட்டினான்.

"என் அம்மாவைப் பற்றிப் பேசும் தகுதி உங்களுக்கில்லை. இத்தோடு வாயை மூடிக்கொண்டு, மரியாதையைக் காப்பாற்றுங்கள்" என்றாள், அடங்கிய சீற்றமுடன்.

"என் வாயை மூடச் சொல்ல நீ யாரடி?" என அதட்டியதோடு, "உன் மரியாதை இங்கே யாருக்கு வேண்டும்?" என்று துச்சமாக எடுத்தெறிந்தவன், "இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து, எதற்கு உறவாட வந்திருக்கிறாய் என்ற உங்களின் திட்டம் எனக்குத் தெரியாது என்றா நினைத்தாய்? பாட்டியைக் கவனித்துக்கொள்ள ஆள் வேண்டும் என்று கொடுத்த விளம்பரத்தைப் பயன்படுத்தி வேலைக்கு வருபவளைப் போல எப்படியோ உள்ளே நுழைந்துவிட்டாய்.

பாட்டியை அன்பும், அக்கறையுமாகப் பார்த்துக்கொண்டு அவர்களிடம் நல்ல பெயரும் வாங்கிவிட்டாய். போனில் உன் புராணத்தைக் கேட்டு, என் காதே வீங்கிப் போயிற்றே. இந்த அளவிற்குச் சொல்கிறார்களே யார் அது என்று பார்க்க வந்தால், நாயகி மாதிரி நடுவீட்டிலே நிற்கிறாய்.

ஏழு நாட்களுக்கு முன்னதாக வந்திருந்தேன் என்றால், நீ இங்கே நிற்க முடியாது. என் கெட்ட நேரம், நீ உள்ளே நுழைவதற்கு வசதியாக வாய்ப்பு கொடுப்பது மாதிரி அந்த ஜெர்மனி பயணம்

அமைந்து தொலைத்ததே!

சரி... அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்? மெல்ல மெல்ல பழைய உறவைப் புதுப்பிக்கலாம் என்பதுதானே? அதற்கு பிறகு சொத்தில் பங்கு கேட்பது! ஒரு நயா பைசாக்கூட கிடைக்காது, தெரிந்துகொள். அவ்...வளவு லேசில் கிடைக்கவிடவும் மாட்டேன்.

உனக்கொரு தம்பி இருப்பதாக கேள்விப்பட்டேனே? இலவச இணைப்பு மாதிரி அவனும் உடன் வந்திருக்கிறானா? இல்லை, நீ வாங்கிப்போக நினைத்த பண மூட்டையை எடுத்துச் செல்ல, பிறகு வருவானா?" என சிறு ஏளன நகைப்போடு கேட்டான்.

எவ்வளவு கர்வம்... அகந்தை!

இதையெல்லாம் ஒரு நொடியில் பொடிப்பொடியாக்கும் சக்தி அவளுக்கு இருக்கிறதுதான். ஆனால், அப்படிச் செய்ய முடியாமல், தாய்க்கு செய்து கொடுத்த சத்தியம் தடையாக நிற்கிறதே என்று, பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமை காத்தாள்.

"இங்கே யாருக்குமே உன்னை அடையாளம் தெரியாது. உன்னை இதுவரைப் பார்த்ததே இல்லை. ஏன்... உன்னைப் போல ஒருத்தி இருக்கிறாள் என்பதும் தெரியாதே! அதைப் பயன்படுத்திஉள்ளே நுழைந்துவிட்டாயா? என் பாட்டியிடம் என்னென்ன சொல்லி ஏமாற்றினாய்? யார் இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டாலும் அவருக்கு தாங்காதே" என்றான், ஒரு மாதிரியாக.

"அவர்கள் எனக்கும் பாட்டிதான் என்பதை மறந்துவிடாதீர்கள்." என அடிக்குரலில் கூறிவிட்டு, "யாரிடமும், எதற்காகவும் அழுது காரியம் சாதிக்கும் பழக்கம் எங்களிடம் இல்லை. எங்கள் பெற்றோர் அப்படி வளர்க்கவும் இல்லை. மீண்டும் சொல்கிறேன். அடங்கியே பேசுங்கள்" என்று எச்சரித்தாள்.

"என்னையே எச்சரிக்கிறாயா? தைரியம்தான்! இன்னும் என்ன சொன்னாய்? எதற்காகவும் அழமாட்டாயா! அதுதானே, நீங்கள் ஏன் அழப்போகிறீர்கள். வீட்டில் இருப்பவர்களைத்தானே அழ வைத்துவிட்டு ஓடிப் போவீர்கள். அப்படி ஓடிப்போன



# பிரபலங்களின் பயம்


எடிசன்

மின்சார பல்பை கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசனுக்கு இருட்டைப் பார்த்தால் பயப்படும் நோய் ('ஸ்காடோபோபியா') இருந்தது.

இவர் மின்விளக்கை கண்டுபிடித்து எரிய வைத்ததும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தன் மனைவியைக் கூப்பிட்டு காட்டினார். பல்பைப் பார்த்த மனைவி, "என்ன இது? இப்படி கண் கூசுகிறது. உடனே அணையுங்கள்" என்றாராம்.

உலகப் புகழ்பெற்ற 'மிக்கி மவுஸ்' பாத்திரத்தை உருவாக்கிய வால்ட் டிஸ்னி, எலியைக் கண்டால் பயந்து நடுங்கிவிடுவாராம்.



## சிலையின் தத்துவம்

குதிரையோடு இருக்கும் போராட்ட வீரர்களின் சிலையை ஆங்காங்கே பார்த்திருக்கலாம். அதன் அமைப்பே வீரர் எப்படி மரணம் அடைந்தார் என்பதை பறைசாற்றும். இரு கால்களை தூக்கியபடி குதிரை காணப்பட்டால் அந்த வீரர் போரில் வீர மரணமடைந்தவர் என்று அர்த்தம். ஒரு காலை மட்டும் உயர்த்தி இருந்தால், போரில் காயமுற்று இறந்தார். நான்கு கால்களையும் தரையில் பதித்தபடி இருந்தால் அவ்வீரர் இயற்கை மரணம் அடைந்தவர்.

# முசோலினியின் துருப்புச் சீட்டு



முசோலினி

1935-ல் ரோம் நகரில் நடந்த கால்பந்து இறுதி ஆட்டத்தில் இத்தாலியும், ஆஸ்திரியாவும் மோதின. அந்த ஆட்டத்தைப் பார்க்க இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி வந்தார். இடைவேளை வரை ஆஸ்திரியா இரண்டு கோல் போட்டு முன்னணியில் இருந்தது. இத்தாலியோ கோல் எதுவும் போடவில்லை.

முசோலினி மிகவும் வருத்தப்பட்டார். உடனே பாதுகாப்பாளர் மூலமாக தன் அணிக்கு ஒரு செய்தி அனுப்பினார். இடைவேளைக்குப் பிறகு இத்தாலி வேகத்துடன் விளையாடி மூன்று கோல் போட்டது. அனைவரும் வியக்கும்படி கோப்பையை வென்றது.

முசோலினி அனுப்பிய சீட்டில் இருந்த செய்தி இதுதான்: "ஆட்டத்தில் தோற்றால் அனைவரும் ராணுவத்தில் சேர்க்கப்படுவீர்கள்."

– மெர்வின், சென்னை.

## இதய பலம்



★ நமது இதயத்தின் தசை, ரத்தத்தை 10 மீட்டர் தூரத்திற்கு பீய்ச்சி அடிக்கும் சக்தி கொண்டது.

★ நம் உடலின் மிக வலுவான தசை நாக்கு.

★ தாவும் திறன் இல்லாத ஒரே விலங்கினம் யானை.

★ போலார் துருவக் கரடிகள் அனைத்தும் இடக்கை பழக்கம் கொண்டவை.

★ நட்சத்திர மீன்களுக்கு மூளை கிடையாது.



ஒரு மகாராணியின் மகளுக்கு எப்படி அழுகை வரும்?" என எள்ளினான்.

அவன் பேசப் பேச அவளுக்கு மீண்டும் முகம் சிவந்தது.

தீயென பார்த்து, "மரியாதையுடன் பேசப் போகிறீர்களா... இல்லையா?" என்று அதட்டியவளின் குரல், லேசாக நடுங்கவும் செய்தது.

"இதையெல்லாம் வேறு எவனாவது இளிச்சவாயனிடம் வைத்துக்கொள். மரியாதை தரவில்லை என்றால் என்ன செய்துவிட முடியும் உன்னால்? அப்படியே, ஐந்தடி சாட்டையை எடுத்து விளாசிவிடுவாயோ?" என்று உதட்டைச் சுளித்தான்.

"யாரையும், சாட்டையால் அடிக்க நினைக்கும், கீழ்த்தர மிருக புத்தி எங்களிடம் இல்லை. மரியாதை தெரியாத உங்களிடம் எனக்கென்ன பேச்சு?"– என்று வேறு பக்கம் செல்ல முயன்றாள் வசீகரி.

'அவ்வளவு சுலபத்தில், உன்னை விட்டுவிட மாட்டேனடிப் பெண்ணே' என்பது போல அவளை வழிமறித்து நின்றான் அவன்.

கருப்பு நிற ஜீன்ஸ், காலர் இல்லாமல் உடம்பை ஒட்டிப் பிடித்தபடி ஊதா வண்ண 'டீ ஷர்ட்' அணிந்து, திண்ணென்று நெஞ்சை நிமிர்த்தி நின்றவனைப் பார்த்து, உள்ளூர சிறு துளி அச்சம் பரவியபோதும், அதை வெளிக்காட்டாமல் அவனை உறுத்து விழித்தாள்.

அந்த நிமிடம், மற்ற விஷயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, வெகு அருகே நின்றிருந்தவளை அளவிட ஆரம்பித்தான் அவன்.

நேரான நாசி. பளபள கன்னங்கள். பூவிதழ் உதடுகள்– என்று நினைத்தவனின் பார்வை, அவளை ஊடுருவியது! 'அச்சமற்ற துணிச்சலான– அம்சமான பெண்தான்' என்று தன்னை மறந்து முணுமுணுத்துவிட்டு, முதல் தடவையாக மெல்ல முறுவலித்தான்.

இவளுக்கு எது பொருந்துகிறதோ... இல்லையோ? வசீகரி என வைத்திருக்கும் பெயர் மட்டும் மகா பொருத்தம். பார்ப்பவர்களை -

சொக்க வைக்கும் பேரழகு.

"வழியை மறிக்காமல் நகருகிறீர்களா? பாட்டி முழிச்சிட்டாங்களான்னு பார்க்கணும்" என்றாள்.

"பாட்டின்னு உரிமைப் பாராட்டி அழைக்கும் அளவுக்கு வந்துவிட்டாயா? வெரிகுட்! அடுத்து என்ன திட்டம்மா? மொத்தச் சொத்து எவ்வளவு? வழக்கு போட்டால் நமக்கு எவ்வளவு கிடைக்கும் என்ற கணக்குதானே?" என்றான், கோபமுடன்.

ஆனால், அவன் எதிர்பார்த்த அளவிற்கு குரலில் கடுமை வெளிப்படவில்லையோ என்றொரு சந்தேகம்! அதே நேரம், எதிரே இருப்பவளின் முகம் தன்னை தடுமாறச் செய்து, நிதானம் இழக்க வைக்கிறதோ என்றும் தோன்றியது.

"சொத்து... சொத்து... சொத்து! இதைத் தவிர வேறு நினைப்பே வராதா உங்களுக்கு? இப்ப நான் சொல்வதை நன்றாக காதில் வாங்கிக் கொள்ளுங்கள் மிஸ்டர். இந்த வீட்டுப் பணத்தில் இருந்து ஒரு ரூபாயைக்கூட அநாவசியமாக வாங்கிக்கமாட்டோம். அது எங்களுக்குத் தேவையுமில்லை. இது உண்மை, சத்தியம்" என்று மிடுக்கோடு தலை நிமிர்த்திக் கூறிவிட்டு சென்றாள் அவள்.

"நீ உண்மைக்கும், சத்தியத்திற்கும் எந்த அளவிற்கு மதிப்பளிக்கப் போகிறாய் என்று பார்க்கத்தானே போகிறேன்" என்று தோள் குலுக்கி, தன் நம்பிக்கை இன்மையை நேரடியாகவே வெளிப்படுத்தியவன், "அத்தோடு, என் பெயர் தேவவிரதன்" என்றுவிட்டு, ஏனோ அவனையும் மீறி பளிச்சென்று புன்னகைத்தான்.

படிகளின் ஓரத்து சந்தைக் கடந்தவள், சட்டெனத் திரும்பினாள். சில விநாடிகளுக்கு பிறகு...

'இந்த சிடுமூஞ்சிக்கு இப்படியொரு புன்னகையா?' என்ற நினைவை ஒதுக்கிவிட்டு, "உங்களுக்குச் சற்றும் பொருத்தமில்லாத பெயர். உங்களுக்கும் தெரிந்திருக்குமே... இது மகாபாரத பீஷ்மரின் மற்றொரு பெயர் என்பது.

'என் தந்தைக்கு அவர் விரும்பிய பெண்ணை மணமுடித்து வைப்பது என் கடமை. அதற்குத் தடையாக, என் திருமண



வாழ்வு அமையும் என்று நீங்கள் நினைத்தால், இந்தக் கணம் முதல் என்னுடைய ஆயுள் காலம் முழுவதும், நான் நிரந்தர பிரமச்சரிய விரதம் பூணுகிறேன்' என்று கூறியதும்– தேவ விரதனை, 'பீஷ்மர்... பீஷ்மர்' என்று கூறி தேவர்கள் பூமாரி பொழிந்து ஆசி வழங்கினார்களாம்.

சகமனிதர்களுக்குக் கூட மரியாதைத் தர விரும்பாத உங்களுக்குப் போய், தன் சிற்றன்னை சத்தியவதியின் தந்தையிடம்– மன்னவர்கள், விண்ணவர்கள் சாட்சியாக தன் திருமண வாழ்வைத் தியாகம் செய்த, அந்தப் பீஷ்மரின் பெயரை வைத்திருக்கிறார்களே?!" என்றபடி சற்றும் அலட்டாமல் தன் வழியே சென்றாள்.

எவ்வளவு தைரியமாக அவன் பெயரையே விமர்சித்துவிட்டுப் போகிறாள். அதுவும், அவள் யார் என்ற முழு உண்மையையும் தெரிந்த அவனிடமே!

வெளியே கோபமாக முறைத்தபோதும், உள்ளூர அவனுக்கு ஏனோ சிரிப்புத்தான் வந்தது. பாட்டியை இவள் எப்படி மயக்கி இருப்பாள் என்பது இப்போது புரிவது போலிருந்தது.

இவளிடம் சற்று கவனமாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தான் தேவவிரதன்.

## 2

**பா**ட்டி எழுந்து தன் வேலைகளை முடித்து தயாராக இருப்பார் என்று கருதி, ஒன்பது மணிக்கு அவரைக் காணச் சென்றான்.

பேரனைப் பார்த்ததும் முகம் ஒளிற, வாரி அணைத்துக் கொண்டு முதுகை வருடியவர்– "என்னடா, இந்தப் பாட்டியைப் பார்க்க இன்றுதான் வழி தெரிந்ததா?" என்று, தன் ஏக்கத்தை சிறு கிண்டலாக வெளிப்படுத்தினார் மகா தேவியம்மா.

அவரின் கையை மெல்ல வருடி, "ம்... எல்லாம் என் நேரம்தான். எவ்வளவோ முக்கியமான வேலைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, உங்களைப் பார்க்க ஓடோடி வந்திருக்கிறேன். நான் எப்படி இருக்கிறேன், இளைத்திருக்கிறேனா? கறுத்திருக்கிறேனா? குறைந்தபட்சமாக களைப்புடனாவது தெரிகிறேனா என்று பார்வையாலே கண்டு, அதற்கு ஏற்ற மாதிரியாகக் கேட்டு ஏதாவது சாப்பிட கொடுப்பீர்கள் என்று பார்த்தால்..." என்று முறுவலோடு கூறி கண் சிமிட்டினான்.

"போடா வாயாடி" என்று செல்லமாக திட்டி– "சென்னையில் இருந்து திருநெல்வேலி மாஞ்சோலைக்கு வருவதற்குள் அப்படியே களைத்து கறுத்து, இளைத்து விடுவாயாக்கும். அதற்கெல்லாம் உன் அம்மா விட்டுவிடுவாளா என்ன? என் மகனையே கண் கலங்காமல் பார்த்துக்கொள்பவள், உன்னை விட்டுவிடுவாளா?" என்று பேரனின் தலையை ஆசையுடன் வருடிச் சிரித்தார்.

பாவனைக் காட்டிய பேரன், "என் தாத்தா உங்களிடம் மாட்டிக்கொண்டு எப்படியெல்லாம் கஷ்டப்பட்டாரோ? பாவம்..." என்று முறுவலோடு இழுத்தான்.

"அடடா! ஒரு முறை நான் கரண்டியை வீசியபோது, குறிதவறாமல் அது உன் தாத்தாவின் நெற்றியைப் பதம் பார்த்து வீங்கச் செய்ததே" என்று முடித்தபோது,

கடகடவென சிரித்தான் சின்னவன். வாஞ்சையோடு அவன் முகம் வருடிப் புன்னகைத்தார் மூத்தவர்.

"நிஜமாகவே கொஞ்சம் களைத்த மாதிரிதான் தெரிகிறாய் தேவா. குடிப்பதற்கு பழச்சாறு கொண்டுவரச் சொல்லட்டுமா?" என்றார்.

"அப்...பா. ஒரு வழியாக இப்போதாவது இதைக் கேட்டீங்களே?" என்றான், மாறாத முறுவலுடன்.

"போக்கிரி" என்றுவிட்டு, உள்ளிட தொலைபேசி எண்ணை அழுத்தினார் பாட்டி.

அதற்கு அவசியமில்லை என்பது போல, ஆரஞ்சுச் சாறு நிரம்பிய தம்ளரை 'டிரே'யில் வைத்து எடுத்தபடி உள்ளே வந்தாள்



வசீகரி.

"வாம்மா... வசு. உன்னைத்தான் கூப்பிட நினைச்சேன். கெட்டிக்காரி, நீயே பழச்சாறுடன் வந்துவிட்டாய். அதுவும் தேவாவுக்குப் பிடித்த ஆரஞ்சுச்சாறு" என்று பாராட்டினார் பாட்டியம்மா.

சும்மாவே மங்கலமாய் மலர்ந்திருந்த முகம், மேலும் பிரகாசமானது... அவளுக்கு.

இப்போது இவள் பெரிதாக என்ன செய்துவிட்டாள் என நினைத்துக்கொண்டு, இப்படி பிரகாசமாகச் சிரிக்கிறாள் என்று எரிச்சலானான் தேவவிரதன்.

இந்தப் பாட்டிக்கு கண்ணுக்கு குளிர்ச்சியாக வீட்டிலே ஒரு பெண் நடமாடுவதில் மகிழ்ச்சி தாங்கவில்லை போலிருக்கிறது. அதான் தலையிலே தூக்கி வைக்காத குறையாக பாராட்டிவிடுகிறார்.

இனிமேல் இங்கே அடிக்கடி வரவேண்டும். அப்பத்தான், பாட்டி ஒரேயடியாக இந்த வசீகரியின் பக்கம் சாய்ந்துவிடாமல் காப்பாற்ற முடியும்.

தன் சித்தப்பா பிள்ளைகள் ஆணும், பெண்ணுமாக இருவர் இருந்தபோதும் அவர்களுக்கு அவ்வளவு சாமார்த்தியம் போதாது. கல்லூரியில் படித்தபோதும் அவர்கள் இன்னமும் விளையாட்டுப் பிள்ளைகளாகத்தானே இருக்கிறார்கள். அவர்களிடம் இருந்து சின்னச் சின்ன உதவிகளைப் பெற முடியுமே தவிர, பெரிதாக எதையும் எதிர்பார்க்க முடியாது.

இந்தச் சாகசக்காரி அவர்களை 'என்ன சங்கதி?' என்று கேட்டுவிடுவாள். இவளால் இந்த வீட்டின் அமைதியும், நிம்மதியும் கெட்டுவிடாதபடி பார்த்துக்கொள்வது, அடுத்த தலைமுறையின் மூத்தவனான தன் பொறுப்புதான் என்று முடிவு செய்தான் தேவவிரதன்.

அவளோ முகம் மாறாமல் 'டிரே'யை அவனிடம் நீட்டினாள்.

'தேவையில்லை' என்று திருப்பி அனுப்பினால், இவள் முகம் என்ன லட்சணமாக மாறும்? ஆனால், அப்படிச் செய்ய

முடியாமல், பாட்டிதான் 'தேவாவுக்குப் பிடித்த ஆரஞ்சுச்சாறு' என்று சொல்லிவிட்டார்களே!

இவளுக்கும் ஏற்கெனவே தெரிந்திருக்க வேண்டும். இல்லையென்றால் சரியாக எடுத்து வர வாய்ப்பில்லை. எப்படித் தெரிந்திருப்பாள் என்பதைக் கண்டுபிடிக்க, பிரமாதமான மூளை தேவையில்லைதான். சும்மாவே... ஏதாவது பேச்சுவாக்கில், இன்னாருக்கு இது இதெல்லாம் பிடிக்கும் என்று பாட்டிதான் சொல்லி இருப்பார்.

இவளும் சரியாகவே ஞாபகம் வைத்து எடுத்து வந்திருக்கிறாள். அதுவும் புதிதாக தயாரித்திருக்கையில், வேண்டாமென்று மறுப்பது அவ்வளவு சரியாகாது.

எனவே, ஒப்புக்காக ஒரு நன்றியை உதிர்த்துவிட்டு, தம்ளரை எடுத்துக்கொண்டான்.

'டிரே'யை மேசை மீது வைத்துவிட்டு– அந்த அறையின் திரைச்சீலைகளை கவனமாகக் கழற்றி, வேறு மாட்டிக்கொண்டிருந்த வசீகரியைப் பார்த்தும் பார்க்காதது போல பாவித்து, அறையைச் சுற்றிலும் நோட்டம்விட்டான்.

பாட்டி அறை எப்போதுமே சுத்தமாகத்தான் இருக்கும் என்றாலும், இப்போது அதை மீறி பளிச்சிடுவது போல் தோன்றியது. நறுமணம் வேறு வீசுகிறது.

'இதற்கு காரணமானவள் இவள்தான் என்றால், மிகுந்த ரசனை உள்ளவளாகத்தான் இருக்க வேண்டும். இப்படிப்பட்டவள் எப்படி கெட்ட ஆசையோடு இங்கே வந்திருக்க முடியும்?' என்று தன் எதிரே இருந்தவளின் பக்கமாகச் சாய்ந்த மனதைச், சட்டென்று கடிவாளமிட்டு நிறுத்திவிட்டு, தலையை பலமாக ஆட்டினான் அவன்.

இவள் நிச்சயம் நல்லவள் இல்லை! இல்லவே இல்லை!!

சிலகணம்தான் என்றாலும், அவன் மனதையே சற்று தடுமாற வைத்துவிட்டாளே! இப்படிப்பட்டவள் எப்படி நல்லவளாக இருக்க முடியும்?

முகத்தைப் பார்! பார்ப்பவனை விநாடியில் கவிழ்த்துவிடுவது



போல ஏன்தான் பிறந்தாளோ?

இவளை அதிகம் பார்க்காமல் இருப்பதே நல்லது. தொடர்ந்து பார்த்தால்... இவள் மீதும், இவள் குடும்பத்தின் மீதும் இருக்கும் கோபம் குறைய வாய்ப்பு இருக்கிறது.

அப்படி மட்டும் நடக்க விட்டுவிடக் கூடாது.

ஒருவேளை, எனக்குள் கோபம் குறையட்டும் என்றுதான், என் கண்முன்னே இப்படி நடமாடித் தொலைக்கிறாளோ என்னவோ?

செய்தாலும் செய்வாள்! முதன் முதலாகப் பார்த்தபோதே எப்படி வாயடித்தாள்?

சட்டென அவன் முகம் கடுமையாக மாறியது. அவளை சொடுக்கிட்டு அழைத்து, "நான் பாட்டியுடன் தனியாகப் பேச வேண்டும். உன் வேலை முடிந்திருந்தால் நீ கிளம்பலாம்" என்று அதிகார குரலிலே, வீட்டுக்கு உரியவனாகக் கூறினான் தேவவிரதன்.

அவளுக்கு உள்ளூர கோபம் வந்தபோதும், அதைக் காட்டிக்கொள்ளாமல் வெளியே செல்ல முயன்றாள்.

அவளை நிற்கச் சொன்ன மகாதேவி அம்மாள், பேரன் பழரசம் குடித்து முடிக்கட்டும் என்பதற்காகவே காத்திருந்தது போல, "தேவா, இவள்தான் வசீகரி. என் தேவைகளைக் கவனிக்க நான் தேர்ந்தெடுத்துள்ள பெண். தைரியமான, நல்ல பெண்ணப்பா" என்றார்.

இவளின் தைரியம் அவன் அறியாததா?

"தெரியும்! அப்பா சொன்னார் பாட்டி. புது ஆள் எப்படிப்பட்டவர் என்று நேரில் பார்த்து விசாரித்துவிட்டு வரும்படி கூறி இருக்கிறார்" என்றபடி, கொஞ்சம் சவாலாக வசீகரியைப் பார்த்தான்.

முகத்தில் எதையும் பிரதிபலிக்காமல் நின்றாள் வசீகரி.

"அப்ப காரண காரியத்தோடுதான் வந்து இருக்கிறாயாக்கும்?" என்று சிறு கேலியாக கேட்டுவிட்டு, "நான் விசாரித்த வரைக்கும்,



"ஆபரேஷன் வெற்றி"

"அநியாயத்துக்கு புளுகாதீங்க டாக்டர். பேஷன்டோட ஆவி இப்பத்தான் வெளிய போகுது!"

– எஸ்.ஜே.கலைவாணி, சென்னை.



"உங்களைக் காதலித்த பிறகு என் எடை ஏறிடுச்சு."

"காதல் 'சக்சஸ்' ஆன சந்தோஷமோ?"

"விளையாடாதீங்க... நான் கர்ப்பமா இருக்கேன்."

– சி.பி.செந்தில்குமார், சென்னிமலை.



"என்னடா... பரீட்சையில 'ஜீரோ' மார்க் வாங்கி இருக்கே?"

"அது 'ஜீரோ' இல்லப்பா... நான் நல்லா படிச்சதுக்காக 'ஓ' போட்டிருக்காங்க!"

– பி.சந்திரா, நெல்லை.



வசிகரியைப் பற்றிய விஷயங்கள், எனக்கு திருப்தியாக இருக்கு தேவா. சில மாதங்களுக்கு முன் பெற்றோர் இறந்துவிட்டார்கள். ஒரே தம்பி, கடைசி ஆண்டு பொறியியல் படிக்கிறான். மீதி விபரம் போதுமா?" என்றார் பாட்டி.

"போதும்... போதும்" என்று, நெற்றியை யோசனையோடு நீவிவிட்டு, வேறு விஷயங்களைப் பற்றி பேச முற்பட்டான் அவன்.

"நீ போம்மா" என்று முறுவலோடு வசிகரியை அனுப்பி வைத்தார் பாட்டியம்மா.

எல்லா வேலைகளையும் செய்து முடித்தபோதும் வெறுமனே சோம்பி அமர்ந்திருக்கப் பிடிக்காமல், ஒரு பக்கத்து சுவரை அடைத்திருந்த அலமாரியில் இருந்து ஒவ்வொரு பொருளையும் கவனமாக எடுத்து, துணி கொண்டு துடைத்தவளை வெறித்துப் பார்த்தான் தேவவிரதன்.

எவ்வளவு நேரமாக பார்க்கிறான் என்பதை அவள் அறியாள்.

"பரவாயில்லை. எப்படியோ உன் சோகக் கதையைச் சொல்லி, பாட்டியின் பரிவைச் சம்பாதித்துவிட்டாய் போலிருக்கிறதே? அடுத்து, சொத்தில் எப்படி கைவைப்பது என்றும் திட்டம் தீட்டிவிட்டாயா?" என்று எகத்தாளமான குரலிலே கேட்டான்.

அதிலே திடுக்கிட்டபோதும், "தேவை இல்லாமல் உளறும் உங்களைப் போன்றவர்களுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை" என்று திருப்பிக் கொடுக்கும் அளவிற்கு தன்னை திடப்படுத்திக்கொள்ளவும் முடிந்தது அவளுக்கு.

"இப்படிச் சொல்லி தப்பிக்க முடியாதே. வழக்குத் தொடர்ந்தால் எப்படியும் ஒரு பங்கு வருமே! அதை வாங்காமல் நீ இடத்தை காலி பண்ண மாட்டாய் என்று எனக்கு நன்றாகவே தெரியும் பெண்ணே" என்று இகழ்ச்சியாகக் கூறினான்.

இது மாதிரிக் குத்தல்களைக் கேட்டு அலுத்துவிட்டது அவளுக்கு. எனவே... "ஆமாம். நீங்கள் நினைப்பது போலவே

வைத்துக்கொள்ளுங்கள். இரு ஆணும், ஒரு பெண்ணுமாய் பிறந்த வீட்டில், பெற்றோரை எதிர்த்து– உங்கள் பாஷையில் ஓடிப் போய் கல்யாணம் செய்துகொண்டதால், என் அம்மாவிற்கு இந்த வீட்டில் உரிமையில்லை என்று ஆகிவிடுமா? இல்லை, உங்கள் அப்பாவின் தங்கை என்கிற நிலைதான் மாறிப்போகுமா?" என்று ஆவேசமாகக் கேட்டு அவனை அசர வைத்தாள் வசிகரி.

முகத்தில் கோபம் குடிகொள்ள, "ஆக., சொத்தை வாங்கிப் போகத்தான் வந்தாய் என்பதை ஒப்புக்கொள்கிறாய்! உன் அம்மாவின் பங்கு மட்டம் போதுமா? இல்லை, சரிபாதியாக வேண்டுமா? அவ்வளவு கிடைப்பது கடினம்.

ஆனால், அதற்கும் ஒரு வழி இருக்கிறது. என்னவென்று கேட்கிறாயா? ஆள் மயக்கியே! எப்படியாவது என்னை மயக்கித் திருமணம் செய்துவிடு. விள்ளாமல் கொள்ளாமல் அப்படியே உன் கைக்கு வந்து சேர்ந்துவிடும். என்ன சொல்கிறாய்?" என்று உதடுகள் வளையக் கேட்டான்.

ஆள் மயக்கி என்று சொல்ல இவனுக்கு என்ன திமிர் இருக்க வேண்டும்? இருக்கட்டும்... இவனை வேறு மாதிரிதான் சமாளிக்க வேண்டும்.

"உங்களை மணக்க வேண்டிய ஒரு பரிதாப நிலை எனக்கு ஏற்பட்டால், இந்த ஊரைவிட்டே சென்றுவிடுவேன்... தெரிந்துகொள்ளுங்கள்" என்று கூறி, அவன் முகம் கன்ற வைத்தாள் வசிகரி.

மேலும் கீழுமாக அவளை வெறுப்புடன் பார்த்துவிட்டு, "அப்போ உன்னை இங்கிருந்து வெளியேற்றியே வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், நமக்கிடையே திருமணப் பேச்செடுத்தால் போதும் என்கிறாய். அப்படித்தானே?"

அவள் முறைத்தாள்.

"என்ன முறைக்கிறாய்? தேவைப்பட்டால் நான் அதையும் செய்வேன் என்பதை மனதில் பதிய வைத்துக்கொள்" என்று எச்சரிப்பது போல் கூறிவிட்டு, அவ்விடத்தைவிட்டு வேகமாகச் சென்றான்.



கைகள் தன் போக்கில் வேலை செய்ய, உள்ளூர கொதிக்கத்தான் செய்தது அவளுக்கு. வெகுவாக முயன்று தன்னைத்தானே சமாதானப்படுத்த முற்பட்டாள்.

தாயார் கேட்டுக்கொண்ட மாதிரி, 'உன் பாட்டிக்கு கொஞ்ச காலமாவது, என் இடத்தில் இருந்து எனக்குப் பதிலாக நீ பணிவிடை செய்து அவரின் ஆசியைப் பெற வேண்டும்மா' என்றது காதில் ரீங்காரமிட்டது.

யாரால், என்ன மாதிரியான பேச்சுகளைக் கேட்க நேர்ந்தாலும், முடிந்த வரை ஒதுங்கிப் போய்விட வேண்டும். தம்பியின் படிப்பு முடியும் வரை, அதிகபட்சமாக ஆறேழு மாதங்கள்தானே! இதுபோன்ற அவமரியாதைகளை சகித்துத்தான் போயாக வேண்டும். மாறாக, எடுத்த காரியத்தை இடையில் விட்டுச் செல்ல முடியாது.

மனதை உறுதிபடுத்திக்கொண்டு வேலையைத் தொடர்ந்தாள் அவள். ஆனால், அடுத்து வந்த நாட்களில் நடந்த சம்பவங்கள், அவளின் உறுதிக்கு பெரிய சவாலாகவே இருந்தது!

## 3

பொதுவாக மாலை நேரங்களில் சிலுசிலுவென்ற தென்றல் காற்றை ரசித்து அனுபவித்தபடியே வயல்களின் இடையே நடப்பது வசீகரிக்கு மிகவும் பிடித்த விஷயம். அன்று பாட்டிக்குத் தேவையான எல்லா வேலைகளையும் செய்து முடித்தபோதும், வெளியே செல்லாமல் வீட்டிலேயே நடமாடினாள் அவள்.

'தொட்டதற்கு எல்லாம் குற்றம் கூறுபவன் வீட்டில் இருக்கும்போது, தான் வெளியே செல்வது சரியல்ல. நாமாக அவனுக்கு வாய்ப்பு கொடுத்தது போல் ஆகிவிடுமே' என்று கருதினாள்.

பின்னர் தோட்ட வேலைக்காவது உதவி செய்யலாமே என்று அங்கே சென்றாள். தோட்டக்காரர் துரைசாமியின் 'வாங்க

வசீகரிம்மா' என்ற உற்சாக வரவேற்பு அவளுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

செடிகளில் இருந்து பழுத்துக் கொட்டும் இலைகள், சருகுகளை எல்லாம் தினந்தோறும் கூட்டிப் பெருக்கிவிடுவதால், அந்த வீட்டுத் தோட்டம் எப்போதும் பளிச்சென்று இருக்கும்.

"உங்களுக்கு உதவியாக ஏதாவது வேலை செய்து கொடுக்கட்டுமா துரை?" என்று கேட்டாள்.

"நீங்க எதுக்கும்மா மண்ணுல கைவச்சுக்கிட்டு? அதெல்லாம் வேண்டாம் விடுங்க. இது கரடுமுரடு வேலை. முன்னே ஒரு நாள் சொல்லச் சொல்ல கேட்காமல், களைக் கொத்தியை எடுத்து மண்ணைக் கொத்தி, கையிலே நீர்கோர்த்து கொப்பளம் போட்டுவிட்டதே. எல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீங்க பேசாமல் இருங்கள்" என்று தடுத்துவிட்டு, தன் வேலையைத் தொடர்ந்தார்.

"சரி. பழைய மாதிரி முரட்டு வேலை செய்யவில்லை. நீங்கள் மண்ணைக் கொத்தி களைகளை எடுத்திருக்கும் செடிகளுக்கு, எரு போட்டு நீர் ஊற்றுகிறேன். இதையும் தடுக்காதீர்கள்" என்றுவிட்டு, வேலை செய்ய ஆயத்தமாவது போல துப்பட்டா முனைகளை இணைத்து முடிச்சிட்டாள்.

மக்கிப்போன சாண எருவைக் கொட்டி, மண்ணோடு சேர்த்துக் கலக்கிய பிறகு, பூ வாளி கொண்டு நீர் ஊற்றினாள். இந்த வேலைக்கே வியர்த்துக் கொட்ட ஆரம்பித்துவிட்டது அவளுக்கு.

ஆனால், அவளைவிட பலமடங்கு அதிகமாக வியர்த்தபோதும், அதை லட்சியமே செய்யாமல் தன்போக்கில் வேலை செய்து கொண்டே இருந்தார் துரைசாமி. அடுத்த தலைமுறையில் இதற்கு எவ்வளவு பேர் தயாராக இருக்கிறார்கள்?

"மீதியை நாளைக்குச் செய்துவிடலாம். வந்து மண்ணைக் கழுவுங்கள் வசீகரிம்மா" என்று அழைத்த குரல், அவளின் எண்ணத் தொடர்பைத் துண்டித்தது. அவ்வாறே செய்துவிட்டு– வேகமாக வீட்டுக்குச் சென்று திரும்பியவளின் கைகளிலே 'ஜில்'லென்ற



மோர் நிரம்பிய தம்ளர் இருந்தது.

"முதலில் இதைக் குடியுங்கள் துரைசாமி" என்று நீட்டினாள். மறுக்காமல் வாங்கி, ஒரே மூச்சில் குடித்து முடித்தவரின் முகத்திலே நன்றி நிறைந்திருந்தது.

"ஏன் அப்படிப் பார்க்கிறீங்க?" என்று கேட்டாள்.

"இல்லைம்மா. உங்களின் இந்தக் குணத்தைப் பார்த்து, ஒரு காலத்திலே இந்த வீட்டில் இருந்த மகராசியின் ஞாபகம் வந்துவிட்டது எனக்கு" என்று பெருமூச்சு விட்டார்.

நெஞ்சத்தில் படபடப்பு கூட, "யார் அவர்?" என்று தெரியாதவள் போல் வினவினாள்.

"அவர்கள், மகாதேவி அம்மாவின் மகளான சுகமதியம்மா. வேலைக்காரர்கள்தானே என்று அசட்டையாக நினைக்காமல், களைத்தது போல் தெரிந்தாலே இதே மாதிரிதான் குடிப்பதற்கு ஏதாவது கொடுப்பார். அன்போடு பேசுவார். வீட்டில் இருந்த அத்தனைப் பேருக்கும் செல்லப் பொண்ணு. தன் வாழ்க்கையைத் தானே முடிவு செய்துகொண்டு போய்விட்டார்.

அதை யாருமே எதிர்பார்க்காததால், பெரிய அவமானமாகிப் போயிற்றும்மா. அத்தனைப் பேருமே அவரை வெறுத்து ஒதுக்கிவிட்டார்கள்.

தகப்பனாரின் மறைவிற்கு வந்த மகளையும், மருமகனையும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாது விரட்டிவிட்டார்கள் மூத்தவரும், இளையவரும். அன்றைக்குப் போன மகராசி, இன்று வரை இந்த வீட்டு வாசலை மிதிக்கவே இல்லை.

வீட்டு மனிதர்கள் மறந்தும்கூட, அந்த மகளைப் பற்றி நினைப்பதே இல்லை. பழைய ஆட்களுக்குத்தான் இந்த விஷயம் தெரியும்மா. அது பற்றி யாராவது பேசுகிறார்கள் என்று தெரிந்தால், இப்போதும் இவர்கள் கோபத்தைக் கொட்டத்தான் செய்கிறார்கள்" என்று வருத்தமுடன் கூறிவிட்டு– "இந்த விஷயம் தெரிந்த மாதிரி யாரிடமும் காட்டிக்காதீங்கம்மா... சிக்கலாகிப்போகும்" என எச்சரித்தும் வைத்தார்.

அவர் சொல்லக் கேட்டதில் சில விஷயங்கள் வருத்தத்தை

உண்டாக்கினாலும், ஒரு காலத்தில் இந்த வீட்டின் இளவரசியாத்தான் தன் தாய் இருந்திருக்கிறார் என்ற செய்தி, அளவற்ற மகிழ்வைக் கொடுத்தது!

அந்த மனதுடனே வலம் வந்தவளை தன் அறையின் ஜன்னல் அருகே இருந்து அழைத்தார் பாட்டி. அங்கே சென்ற பிறகுதான், தேவவிரதனும் உடன் இருப்பது தெரிந்தது.

மனதின் மகிழ்ச்சி தானாகவே வடிய முற்பட்டது அவளுக்கு!

"என்னம்மா. இன்றைக்கு வெளியே போகவில்லையா... ஏன்?" என வினவினார் பாட்டி.

"ஒன்றுமில்லை பாட்டி. திடீரென்று ஏதாவது தேவைப்பட்டு, என்னைக் கூப்பிடும்போது இருக்க வேண்டும் இல்லையா?" என்று வாய்க்கு வந்த எதையோ சொல்லி சமாளிக்க முயன்றாள். ஆனால், இது நம்பத்தகுந்த சமாளிப்பு என்று அவளுக்கே தோன்றவில்லைதான்!

அதை உறுதி செய்வது போல, "கையெட்டும் தூரத்தில் மணி இருக்கிறது. அடித்தால் யாராவது வந்துவிட்டுப் போகிறார்கள். அவ்வளவுதானே விஷயம்" என்று சாதாரணமாகக் கூறினார் பாட்டி.

'நான் யார் என்ற உண்மை தெரியாமலே எனது சிறு சிறு விருப்பத்திற்கும் மதிப்பு அளிக்கிறார்கள் என்றால், அதற்கு இவர்கள் இயல்பிலேயே எவ்வளவு நல்லவர்களாக இருக்க வேண்டும்? அதனால்தான் என் அம்மா ரொம்பவும் ஆசைப்பட்டுக் கேட்டாரோ?'

"பாட்டிதான் சொல்கிறார்களே... போய் வர வேண்டியதுதானே அல்லது வாசல் வரை வந்து வழி அனுப்ப வேண்டுமா? சற்று நேரம் தாமதித்தாய் என்றால், பாட்டி அதையும் செய்வார்கள் என்று நினைக்கிறேன்" என்றான்.

அதை சாதாரணம் போல் கூறினாலும், உள்ளூர இருந்த 'பொடி'யை அவள் அறியாமல் இல்லை.

'வழி அனுப்ப வரும் அளவிற்கு பாட்டியை கைக்குள் போட்டு



வைத்திருக்கிறாய் என்பதுதானே அதன் மறைவில் இருக்கும் குற்றச்சாட்டு. குற்றம் காண வாய்ப்பு அளித்துவிடக் கூடாதென்று நினைத்தால், அதையே குற்றமாக்குவதா?' என்று மனதிற்குள் எரிச்சல் மண்டியது.

சிறு முறுவலோடு பேரனைப் பார்த்துவிட்டுத் திரும்பி, "எனக்குதான் ஆசைஇருந்தாலும் இயலாத நிலை. உனக்கு என்னம்மா? மானாட்டம் துள்ளித் திரிய வேண்டிய வயது. அதை அனுபவிப்பதை விடுத்து இங்கேயே இருப்பதா? போய் வாம்மா. இருட்டும் முன்பாகத் திரும்பிவிடு" என்று அவளை அனுப்பினார் பாட்டி.

மேலும் நின்று அவனுடைய குற்றச்சாட்டை உண்மையாக்குவதைப் போல நடந்துகொள்ளக் கூடாது என்பதற்காக தாமதிக்காது வெளியேறினாள்.

இதயத்தில் எரிச்சல் தாளாதவளாக வெகு வேகமாக நடந்தபோது, முகத்தில் வந்து இதமாக மோதி அவளைக் குளிர்வித்தது தென்றல். மறுகணம் அவளின் மெல்லிய இதழ்களில் பார்க்கத் தெவிட்டாத அழகிய புன்னகை பூத்தது!

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசுமையும், அரண் போல அமைந்திருந்த மலைக் குன்றுகளும் வார்த்தைகள் கொண்டு வர்ணிக்க இயலாத பேரழகுக் காட்சிகளாக இருந்தன. அவற்றை ரசித்தபடி நடந்தவளின் விழிகள், எதையோ பார்த்து பளிச்சிட்டன!

அது, அபூர்வ வகை ஊசித் தட்டான்கள். அதைப் பிடிக்க விரல்களை நீட்டினாள். கையுடன் உடலும் ஆவலோடு நீண்டு சென்றபோது,

"வயல் சகதியிலே விழுந்து புரள வேண்டும் என்பது ரொம்ப நாள் ஆசையோ?" என்று ஏளனமாகக் கேட்டது ஆண் குரல். திரும்பிப் பாராமலே குரலுக்குச் சொந்தக்காரன் யாரென்பது தெரியாதா என்ன?

இருந்திருந்து இவன் பார்க்க– சின்னப்பிள்ளை போல தட்டான் பிடிக்க முயன்றோமே? கடவுளே!...

தன்னைத்தானே தலையில் குட்டிக்கொள்ள வேண்டும் போல் தோன்றியது.

இருந்தாலும், இன்னும் சற்றே முன் பக்கமாகச் சென்றிருந்தாலும், தொப்பென சேற்றில் விழுந்திருப்பாள்தான்.

எனவே, "நான் இதை கவனிக்கவில்லை" என்றாள் முணுமுணுப்பாக.

என்ன நினைத்தானோ குரலில் பழைய எள்ளல் சற்று மட்டுப்பட, "கவனித்திருக்க வேண்டும். இதில் மட்டும் என்றில்லை, எந்த விஷயத்தைச் செய்யும்போதும் பின்விளைவைப் பற்றி யோசிக்க வேண்டும். ஏதோ ஆசையில் செய்யப் போய், கஷ்டத்தில் மாட்டிக்கொள்ளக் கூடாது பாரு. அதனால் சொல்கிறேன்" என்று பூடகமாகப் பொருள்படும்படி கூறினான்.

ஒருமுறை கண்களை அழுத்தமாக மூடித் திறந்த வசிகரி, "சற்று நகர்ந்து நிற்கிறீர்களா? நேரமாகிறது. நான் வீட்டுக்குச் செல்ல வேண்டும்?" என்றாள், முயன்று வரவழைத்த சாதாரணக் குரலில்.

"ம்... போகலாம். அதற்கு முன் உன்னிடம் ஒரு விஷயம் பற்றி கேட்க வேண்டியது இருக்கிறது" என்றான்.

"என்ன கேட்க வேண்டும்?"

"காலையில் பாட்டியின் அறைக்குள் வந்தபோது, உன்னிடம் வெளிப்பட்ட புன்னகைக்கான காரணம் என்ன? ஒரு சாதாரண பாராட்டுக்காக மட்டும் நீ புன்னகைக்கவில்லை என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்" என்றான்.

ஏனோ உள்ளூர வலித்தது போல் உணர்ந்தாள் வசிகரி.

எவ்வளவு உறுதியாகக் கூறுகிறான்! ஒரே பார்வையிலே கணித்து இருக்கிறான் என்றால், அவளை எந்த அளவிற்கு கவனித்திருக்க வேண்டும்?

தங்கள் இடையே நேரடி மோதலோ... வெறுப்போ? என்று எதுவுமே இல்லாமல் இருவரும் இப்படி எதிரும் புதிருமாக நிற்க நேர்ந்ததை எண்ணி முதல் தடவையாக வருத்தப்பட்டாள் அவள்!

"என் காரணத்தை நீங்கள் நம்பமாட்டீர்கள் தேவவிரதன். பிறகு, அதைச் சொல்லி மட்டும் ஆகப் போவதென்ன?" என்றாள் வெற்றுக் குரலில்.

எதுவும் கூறாது வெறுமனே பார்த்துக்கொண்டு நின்றான் அவன். சளைக்காத பார்வை!

வேறு வழியின்றி ஒரு பெருமூச்சுடன் தொடங்கினாள் வசிகரி. "என் பெற்றோரின் திருமணத்தை இரு பக்கத்தாருமே ஏற்காததால், உறவினர் என்று யாருடனுமே நாங்கள் பேசிப் பழகியதில்லை. நட்பு வட்டம் மட்டும்தான். மகிழ்ச்சியோ... வருத்தமோ? எது என்றாலும் அது எங்களின் நான்கு பேருக்கு இடையேதான். ஆனாலும் மகிழ்ச்சியும், கொண்டாட்டமும் அதிகம்.

பாட்டியைப் பற்றி என் அம்மா கூறும்போது எல்லாம், அவர்கள் நம்மிடம் நன்றாகப் பழகினால், எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்திருக்கிறேன். நீங்களும், பாட்டியும் இயல்பான கிண்டலுடன் பேசிக்கொண்டிருந்ததை எதிர்பாராமல் கேட்க நேர்ந்ததும், எனக்குள்ளே ரொம்பவும் சந்தோஷமாகி அது புன்னகையாக வெளிப்பட்டுவிட்டது. பாட்டியின் பாராட்டு, அதை மேலும் வலுவாக்கிவிட்டது போலிருக்கிறது" என்று முடித்தாள்.

சிறு மாற்றமும் இன்றி நின்றான் அவன்.

ஒரு மாதிரியான பார்வையுடன், "நம்பமாட்டீர்கள் என்பது எதிர்பார்த்ததுதானே! அதனால், எனக்கு இப்போது வருத்தம் இல்லை. என் வரையில் உண்மையான காரணத்தைத்தான் சொல்லிவிட்டேனே. இப்போதாவது நகரலாம் இல்லையா?" என்றாள்.

ஒன்றுமே இல்லாத அவளின் வெற்றுக்குரல் அவனை என்ன மாயாஜாலம் செய்ததோ?

"சாரி வசிகரி!" என்ற சொல்லை உதிர்த்துவிட்டு நகர்ந்து நின்றான்.

தன் காதில் கேட்ட வார்த்தைகள் நிஜம்தானா என்ற

பிரமிப்புடன் பார்த்தவளின் விழிகள் அகன்று, லேசாக பனித்தன!

# 4

வழியைவிட்டு அவன் நகர்ந்தபோதும், கடந்து செல்வதற்கான சிறு அறிகுறியும் இன்றி அப்படியே நின்றுவிட்டாள் வசீகரி.

'உலகம் தலைகீழாக ஏதும் சுழலுகிறதா என்ன?' என்று சந்தேகம் தோன்றியது, அவளுக்கு.

தான் கூறியதை நம்புகிறானா? அப்படியேதானா!

மனது பரபரப்பு அடைய, ஒரு வித எதிர்பார்ப்புடன் விழிகளை உயர்த்தி அவனை நோக்கினாள்.

நேருக்கு நேராக அவளை ஊடுருவியவன், ஒருகணம் கண்களை மூடித் திறந்து, "உன்னிடம் சாரி கேட்டேன் என்பதை வைத்து, இஷ்டத்திற்கு ஏதாவது கற்பனை செய்ய ஆரம்பித்துவிடாதே. இயல்பாக கிடைத்திருக்க வேண்டிய விஷயங்கள், உனக்கு கிடைக்காமல் போய்விட்டதே என்ற சாதாரண பரிவில்தான் கேட்டேன். மற்றபடி, உங்களைப் பற்றிய என் எண்ணம், துளியும் மாறாமல் அப்படியேதான் இருக்கிறது" என்று நிதானமாகக் கூறினான் தேவவிரதன்.

அவ்...வளவு எதிர்பார்ப்பும், மணலில் கொட்டிய நீர் மாதிரி காணாமல் போக, தன் வாட்டத்தை வெளிப்படுத்தக் கூடாதென்று வெகுவாக முயற்சித்து வெற்றியும் கண்டாள் வசீகரி.

சில நிமிடங்களுக்குப் பிறகு மனது சமன்படவும், "ரொம்பவும் நல்லது. எப்போதும் இப்படியே இருங்கள்" என்று அவளைப் போலவே சிறு நக்கல் இழையோடிய குரலில் கூறிவிட்டு, வேகமாக நடந்தான்.

அவனுக்குமுகம் இறுகியது. 'சரியான நெஞ்சழுத்தக்காரியாக இருக்கிறாளே? இருக்கட்டும். எல்லை மீறுவது போல்



தோன்றினால், இந்த மெல்லிடையாளை உரிய விதமாக இரண்டு தட்டுத் தட்டி வைக்க வேண்டியதுதான்' என மறுபக்கமாகத் திரும்பி நடந்தான்.

தன் குடும்பத்தின் நிம்மதி, மகிழ்ச்சியைத் துடைத்தெடுக்கத்தான் வந்திருக்கிறாள் என்று தெரிந்த பிறகும், அந்த வசீகரியின் மீது தன்னால் ஏன் முழுமையான கோபத்தை வெளிப்படுத்த இயலவில்லை என்பது அவனுக்கே புரியாத புதிராகத்தான் இருந்தது!

இந்த நிமிடம் வரை அவளிடம் காட்டி இருப்பதெல்லாம், தன் கோபத்தின் ஒரு பாதி மட்டும்தான் என்பது அவனுக்குத் தெரியுமே? ஆனாலும்... ஏன்? ஒருவேளை உறவு, ரத்த சம்பந்தம் என்பதாலா?

புருவ மத்தியில் முடிச்சு விழ யோசித்தான். ஊ...ஹூம். அதெல்லாம் கிடையாது. இவள் யார் என்ற உண்மையை வெளிப்படுத்தும் முன்பாகவே, இவளை இங்கே இருந்து வெளியே அனுப்பிவிட்டால், குடும்பத்தின் அமைதி கெடாது காத்துவிடலாமே என்ற எண்ணம் மட்டும்தான் அவனுக்குள் எழுந்தது. உறுதியான மனதுடன் வீடு திரும்பினான்.

'வாக்கிங் ஸ்டிக்' உதவியுடன் அறைக்குள் நடைபோட்டார் பாட்டியம்மா. இரண்டு தடவை மாரடைப்பு வந்த பிறகு, முதுமையில் இந்த அளவுக்கு நடக்க முடிவதே பெரிய விஷயம்தான்!

அங்கும் இங்கும் நடந்து மேற்பார்வை செய்தவர், ஒரே இடத்தில் முடங்கிக் கிடந்ததைப் பார்க்க எவ்வளவு கஷ்டமாக இருந்தது என்று நினைத்தவாறு உள்ளே சென்றான்.

பாட்டியும், பேரனுமாக குடும்ப விஷயங்கள் சிலதைப் பற்றி பேசியபோது, பண்ணை நிர்வாகி அனுமதி கேட்டு வந்தார்.

"கணக்கை எடுத்து வந்திருக்கிறீங்களா மாணிக்கம். வைத்துவிட்டுப் போங்கள். நான் பார்த்துட்டு, கொடுத்து அனுப்புகிறேன்" என்றார் எஜமானி.

"சரிங்கம்மா" என்றுவிட்டு வெளியேறினார் அவர்.





"மீண்டும் ஆரம்பித்துவிட்டீர்களா? நான்தான் இன்னும் சில மாதங்களுக்குப் பார்த்துக் கொள்வதாகச் சொன்னேனே! நன்றாக குணமாகும் முன்பே இதையெல்லாம் பார்த்து ஏன் உங்களை கஷ்டப்படுத்துகிறீர்கள் பாட்டி?" என்று கேட்டான் தேவவிரதன்.

"இதில் என்னடா கஷ்டம்! கணக்கைப் பார்க்க உதவி செய்யத்தான் இப்போது வசீகரி இருக்கிறானே. அவன் படித்துக் காட்டக் காட்ட, சரிதானா என்று பார்க்கப் போகிறேன். ஏதாவது சந்தேகமென்றால் மாணிக்கம் விளக்கம் அளிக்கப் போகிறார். கஷ்டம் என்ற வார்த்தைக்கே இடமில்லையே.

ஆனால், உனக்கு அப்படி இல்லையேப்பா. சும்மாவே வேலைச்சுமை அதிகம். எப்போதாவது கிடைக்கிற ஒன்றிரண்டு நாட்களிலும் என்னைப் பார்க்க வந்துவிடுகிறாய். இங்கேயும் அதே மாதிரி அலுவலக வேலை தொடர்ந்தால் எப்படி? உனக்கும் ஓய்வு வேண்டுமில்லையா? இப்போதுதான் என்னால் முடிகிறதே, பிறகென்ன? நீ உன் விருப்பம் போல பொழுதைப் போக்கு" என்று முறுவலோடு கூறினார் பாட்டி.

பாட்டியின் அக்கறையை நினைத்து முறுவலித்தபோதும், முழுமையாக மகிழ முடியாமல் போனான்.

'சத்தமில்லாமல் உள்ளே நுழைந்து பாலைக் குடிக்கும் திருட்டுப் பூனை மாதிரி, உதவி செய்கிறேன் பேர்வழி என்ற சாக்கில் அந்த வசீகரி வரவு- செலவு கணக்கையும் பார்க்க ஆரம்பித்துவிட்டானா? என்ன சாதுரியம்!'

இப்படியொரு வெடிகுண்டு விஷயத்தைப் பற்றி தெரிந்துகொண்ட பிறகு, அவனால் எப்படி நிம்மதியாக ஓய்வெடுத்து பொழுதைக் கழிக்க முடியும்?

'வசீகரி மீது நேரிடையாக குற்றம் குறை கூற முடியாது. பாட்டியின் பார்வையில் அவன் மிக நல்லவன். மறைமுகமாக ஏதாவது செய்து, இந்தக் கணக்கு வழக்கு பார்ப்பதில் இருந்து அவனை ஒதுக்கி வைக்க இயலுமா? முயற்சி செய்துதான் பார்க்கலாமே!'

"இது. அந்தப் பெண்ணுக்கு அதிகப்படி வேலைதானே பாட்டி அவன் ஏன் சிரமப்பட வேண்டும்? நாமே பார்த்துக்கொள்ளலாமே?" என்று, வாழைப்பழத்திலே ஊசி இறக்குவது போல் கூறினான்.

"முதலில் எனக்கும் அப்படித்தான் தோன்றியது தேவா. புதிதாக ஆள் போடலாமா என்று கூட யோசித்தேன். ஆனால், வசீகரிதான் முழு விருப்பமுடனே இந்த வேலையைச் செய்ய முன்வந்தாள். எனக்கு ஒரு தேவையென்றால், தானாகவே புரிந்துகொண்டு செய்வதில் கெட்டிக்காரி. எனக்கும் அவளுடன் பேசிக்கொண்டே வேலை செய்வதில் நேரம் போவதே தெரிவதில்லை. ஆனால், கொடுக்கும் சம்பளத்தைவிட, நாமும் அதிக வேலை வாங்கக் கூடாதில்லையா?

அதனால் மாதம் ஒரு முறை, ஏதாவது பரிசு வாங்கிக் கொடுத்துவிடலாம் என்று இருக்கிறேன். நீ என்ன சொல்கிறடா?" என்றார் பாட்டியம்மா.

இது அவனுக்குத் தேவைதானா? வெடிகுண்டோடு போய்விடும் என்று பார்த்தால், கூடவே அம்புகளும் சரம் தொடுக்கிறதே! இதில் அவனுடைய அபிப்பிராயத்தை வேறு கேட்கிறார்கள்.

அந்த மகாராணிக்கு தின்பதற்கு கரும்போடு, கூலியும் கிடைக்கும்போது . கசக்கவா போகிறது என்று கடுத்தது அவனுக்கு.

தன் அபிப்பிராயத்திற்காக பாட்டி பார்ப்பதை உணர்ந்தவனாக, "பரிசுதானே. தாராளமாகத் தரலாம். கொடுக்கும் சம்பளத்தைவிட, அதிகமான வேலை வாங்கக்கூடாது என்பது நம் விதிகளில் முக்கியமானதே" என்றான்.

பெருமையோடு பார்த்துவிட்டு பேரனின் தொழில் பற்றிப் பேசினார் மூத்தவர். பேச்சு சுவாரசியத்தில் இருந்தவர்கள், மாலை மங்கி, நிலவு வந்து மலர்கள் இதழ் விரித்து ஜன்னல் வழியே பரவிய நறுமணம் நாசியைத் தொட்ட பிறகே, சுற்றுப்புறத்தைக் கவனித்தார்கள்.

பிறகு ஆளுக்கு ஒரு தேநீர் குடித்துவிட்டு, பாட்டி டி.வி. பார்க்க- தேவா தோட்டத்தை அடைந்தான். அதைப் பார்த்தோ...



பார்க்காமலோ வேகமாகத் திரும்பி எதிர்திசையில் சென்றாள் வசீகரி.

அவளின் முகம், அந்தத் தோட்டத்துப் பூவைப் போலவே மலர்ந்திருந்தது! ஆனால், இந்த மலர்ச்சியை அவன் எதிரே காட்டுவதற்கு விருப்பமில்லாத மாதிரி வேகமாகச் சென்றாள்.

அவளின் வேகத்தை, தன் சாதாரண நடையிலே ஈடுகட்டியவன், "எதற்கு இந்த ஓட்டம்... பயமா?" என்றான்.

"பயமா? நான் எதற்காக பயப்பட வேண்டும்" என்றாள், அலட்சியமாகத் தலையசைத்து!

"உதவி செய்கிறேன் என்ற பெயரில், வரவு- செலவு கணக்கை எல்லாம் நோண்ட ஆரம்பித்திருக்கிறாயே! அது எனக்குத் தெரியவரும்போது என்ன நடக்குமோ என்பதாகக் கூட இருக்கலாம்."

"ஓ! உளவு பார்க்க ஆள் வைத்தாயிற்று போலும். வேறு என்னென்ன ரகசியத் தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள், உங்களின் நம்பிக்கைக்கு உரிய ஒற்றர்கள்?"

"சொந்த வீட்டில் நடப்பதை அறிந்துகொள்ள ஆள் வைப்பவன், எஜமானனாக இருக்கவே தகுதியற்றவன் பெண்ணே. பேச்சின் இடையே பாட்டிதான் தெரிவித்தார்."

'அப்பா! ஆள் வைத்து வேவு பார்க்கும் வேலையை இவன் செய்யவில்லை' என்று நிம்மதி அடைந்தவள், தனக்கு ஏன் இந்த உணர்வு தோன்ற வேண்டும் என ஆழமாக யோசிக்க- பயந்தோ... என்னவோ பேச்சை வேறு திசைக்கு மாற்றுவது போல, "எந்தவித உள்நோக்கத்துடனும் அந்த வேலையைச் செய்யவில்லை தேவவிரதன். நான் சொல்வதெல்லாம் உண்மை என்பது ஒருநாள் தெரியத்தானே போகிறது? அப்போது பார்க்கிறேன், இந்த முகத்தை எங்கே கொண்டு போய் வைக்கிறீர்கள் என்று" என்றாள், அலட்டாமல்.

"முதலில், குதிரைக்குக் கொம்பு முளைக்கிற கதை நடக்கட்டும்" என்று, தோள் குலுக்கினான் அவன்.

அப்போது, இருவரின் கோபதாபங்களையும் சற்று ஒதுக்கி

வைக்க வாய்ப்பளிப்பது போல, தென்றலுடன் மிதந்து வந்தது மனோ ரஞ்சிதப் பூவின் நறுமணம். அதற்கு மயங்காதவர் உண்டோ! அவர்களும் கண்களை மூடி ரசிக்கத்தான் செய்தார்கள்!

பிறகு, மணம் வரும் திசையை நோக்கி நடந்தார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக உயரத்தில் பூத்திருந்தது மனோரஞ்சிதம். அருகே சென்று பறிக்க தயக்கமாக இருந்தது அவளுக்கு.

அவன் முகத்தைப் பார்த்தவனுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. "பூ வேண்டுமென்றால் வாயைத் திறந்து கேட்க வேண்டியதுதானே?" என்றுவிட்டு, சிறு கிளையை லேசாக வளைத்து, இரண்டு பூக்களைப் பறித்தான்.

"பார்த்து, ரொம்ப அருகே போகாதீங்க. இந்த வாசனைக்கு சில நேரத்தில் பாம்புகள் கூட வரும் என்று பாட்டி சொல்லி இருக்கிறார்" என்று கவனப்படுத்தினாள்.

கையிலிருந்த பூவை அவளிடம் கொடுத்துவிட்டு, "அப்படியேதுவும் கடித்தால், அத்தை மகளான நீ பதறித் துடித்து— சினிமாவில் வர்ற மாதிரி கடித்து— ரத்தத்தை உறிஞ்சி எடுத்து என்னைக் காப்பாற்றிவிட மாட்டாயா என்ன?" என்றவன், இளம் சிரிப்பை வெளிப்படுத்தினான்.

விழிகள் விரிய நோக்கி, "எதை நினைத்து இந்தப் புன்னகை?" என்றாள்.

"இல்லை, ரத்தத்தை உறிஞ்சித் துப்பிய பிறகு, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து மெல்ல புன்னகைப்பார்கள். அந்த நிமிடமே அவர்களிடையே காதல் மலர்வது போல் காட்டுவார்கள். பின்னால் பத்து, இருபது பேர் நடனம் ஆட— பாடல் ஒன்று தொடங்குமே" என்று சொல்லி முடிக்கும் முன் கடகடவென்று சிரித்தான்.

[illegible]

"அவ்வப்போது இது என்ன பார்வை! ஏதோ நிகழாத அதிசயம் நிகழ்ந்தது போல?" என்று, மாறாத முகத்துடனே கேட்டான்.

வெளிப்படையாகப் பார்த்தால், இப்படித்தான் 'பேக்கு' மாதிரி மாட்டிக்கொள்ள நேரும் என்று தன்னைத் தானே கடிந்துகொண்டு, "ஓ...ஒன்றுமில்லை" என்று சமாளித்தான்.

புருவம் உயரப் பார்த்தபோதும், "ஓ.கே. ஒரு நல்...ல சூழ்நிலை மாற வேண்டாம் என்று நினைப்பதால், உன் 'ஒன்றுமில்லை'யை நம்புகிறேன்" என விட்டுக் கொடுப்பது போல் சொன்னான்.

மேற்கொண்டு தோண்டாமல் விட்டானே என்று நினைத்து அமைதியாக நடந்தான் அவன்.

"ஆமாம். உன் தம்பி எங்கே படிக்கிறான்?" என்று இயல்பாக பேச்சை வளர்ப்பது போல் கேட்டான்.

சட்டென சுதாரித்தான் வசீகரி.

எதற்காக கேட்கிறான்? தெரிந்துகொண்டு வார்த்தை அம்புகளால் தோலுரிக்கவா?

"அதைப் பற்றி உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை" என்றான்.

"பெரிய ராணுவ ரகசியம். தெரிந்துகொள்ளவே முடியாது பாரு. போகட்டும்... விடு. நீயாவது என்ன படித்திருக்கிறாய் என்று சொல்லேன்" என்றான்.

"இதற்கும் முன்பு சொன்ன பதில்தான்."

"அதைப்பற்றி உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை' என்று ஒரு படிப்பா?" என்றான் அப்பாவிக் குரலில்.

இதைச் சற்றும் எதிர்பாராததால், 'களீர்' என்று சிரித்துவிட்டு, சட்டென்று வாயைப் பொத்தினாள்.

"இதமாகவும், இனிமையாகவும் இருக்கிறது உன் சிரிப்பு" என்று, அவளை மீறிய பாராட்டு வந்தது.

[illegible]

நாபகம் வைக்க வேண்டியது இருக்கிறது. அவர்கள் மட்டு டிப் போகாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். நானு ன்னிடம் கோபப்பட வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது அதற்கு பதிலாக..." என்று இழுத்துவிட்டு... வார்த்தை றுத்திக்கொண்டான்.

"அதற்கு பதிலாக அப்படியென்ன நடந்திருக்குமாம்?" என்று ாதாரணமாகவே கேட்டாள்.

அவள் மீதிருந்து பார்வையை விலக்காமலே, கண்களில் ளபளப்புடன் அவன் கூறினான். "இந்நேரம் நீ என் மனைவியாகி றைந்தபட்சம் ஒரு குழந்தையாவது பிறந்திருக்கும்."

அவ்வளவுதான்! "வாயை மூடுங்கள்" என்று சீறினாள் சீகரி.

நொடிப் பொழுதில், ஆத்திரத்தில் சிவப்பேறியது அவளின் கம். அது, நிலவொளியிலும் நன்றாகவே தெரிந்தது!

## 5

"என்னிடமே இப்படிச் சொல்லுவதற்கு உங்களுக்கு வ்வளவு தைரியம் இருக்க வேண்டும். இதுமாதிரி கேவலமான ண்ணத்தோடுதான் என்னிடம் பேசுகிறீர்களா? இதுதான், நீங்கள் லகமாக உயர்வாக நினைக்கும் உங்கள் குடும்ப கவுரவத்தின் ட்சணமா?"– சூடாகக் கேட்டாள்.

மூச்சு வாங்க நின்றவளைப் பார்த்து, "பொறுமை. பொறுமை. காஞ்...சம் பொறுமையுடன் இரு பெண்ணே. உன் அம்மா ஓடிப் பாகாம இருந்திருந்தால்தான் இப்படி நடந்திருக்கும் என்றேனே விர, இப்போதும் அப்படி நடக்க வாய்ப்பு இருக்கிறது என்றா சான்னேன்? அப்படிச் சொல்ல நான் என்ன முட்டாளா?" ன்று கேட்டு ஏளனத்தோடு பார்த்தான்.

"உங்களை மணக்க, இங்கே யாரும் தவம் இருக்கவில்லை... தரிந்துகொள்ளுங்கள். பாட்டிக்குக்கூட இவ்வளவு கோபம்



இருக்கிறதா என்று தெரியவில்லை. உங்களுக்கு மட்டும் ஏன் இத்தனைக் கோபம்? அப்படியென்ன, ஊர் உலகத்திலே நடக்காத ஒன்றையா என் அம்மா செய்துவிட்டார்?"– ஆவேசமாக வாதாடினாள்.

"ஊர் உலகத்திலே அப்படி நடந்திருக்கலாம். ஆனால், சொந்த வீட்டில் நடக்கும்போதுதான் வலி தெரியும். யார் முகத்திலும் விழிக்க முடியாமல் வீட்டுக்குள் அடைந்து கிடந்தவர்களுக்குத்தானே புரியும்.

இந்த வீட்டு மனிதர்கள், அந்த நிலையை அனுபவித்தவர்கள். தலை நிமிர்ந்து கவுரவமாக வாழ்ந்தவர்களை, அவமானத்தால் நொறுங்கும்படிச் செய்துவிட்டுப் போனவருக்கு ஆதரவாக நீ பேசுகிறாயா?

அதுவும் எப்படிப்பட்ட நிலையில் போனார்கள்! விடிந்தால் திருமண நிச்சயம் என்று உறவினர்கள் எல்லாம் வந்து வீடு முழுக்க இருந்த வேளையில். அது எவ்...வளவு சுயநலம்!

தான் நினைத்தது நடந்தால் போதும், யார் எக்கேடு கெட்டு கேவலப்பட்டால் நமக்கென்ன என்ற எண்ணம்! அவர்களை ஒரு மகாராணி மாதிரி பார்த்தார்களாமே? அதற்கு நல்ல மரியாதை செய்துவிட்டார்கள்.

எவ்வளவோ காலங்களாக மனதினுள் கனன்றது இன்று உன்னிடம் வெளிப்பட்டுவிட்டது. யார் செய்தாலும் தப்பு தப்புதான்! பெற்றவர்கள் என்பதால் சரியென்று ஆகிவிடாது" என்றவன், அவளை ஒரு மாதிரியாகப் பார்த்து, "தெரிந்தே தப்பு செய்த உன் அம்மாவுக்கு இவ்வளவு பரிந்து பேசுகிறாயே, நீயும் எவனையாவது இழுத்துக்கொண்டு ஓடித்தான் போவாயோ என்னவோ?" என்றான், வெகு உதாசீனமாக.

"அப்படியே நான் செய்தாலும், அது என் சொந்த விஷயம். அது பற்றி நீங்க ஒன்றும் சொல்லத் தேவையில்லை" என்று பட்டென திருப்பிக் கொடுத்தாள்.

"எப்படிச் சொல்லாதிருக்க முடியும்? பிடிக்கிறதோ... இல்லையோ? என் உறவுக்காரப் பெண்ணாகிவிட்டாய்.

நாளைக்கு யாராவது அயோக்கியனை நம்பி, ஏதாவது சிக்கலில் மாட்டினாய் என்றால்... ஆபத்தாகும். அந்த அனுதாபத்தில்தான் சொல்கிறேன்."

"உங்களின் அனுதாப அக்கறைக்கு ரொம்...ப நன்றி. ஆனால் இது தேவை இல்லாதது. என்னை மணந்து கொள்ள அப்பாவின் நண்பர் மகன் காத்திருக்கிறான். நாளைக்கே திருமணம் என்றாலும் முழு மகிழ்ச்சியோடு என்னை ஏற்றுக்கொள்ள அந்தக் குடும்பம் காத்திருக்கிறது" என்று கர்வமுடன் மொழிந்தாள்.

ஓரிரு கணங்களுக்குப் பிறகு, "உன் அப்பாவின் நண்பர் மகனை... அவனை மணப்பதில் உனக்கும் மகிழ்ச்சிதானா?"

"பின்னே? மகிழ்ச்சி இல்லாமலா இருக்கும்! பிரியன் எவ்வளவு நல்லவர் தெரியுமா? யாரிடமும் அதிர்ந்து ஒரு வார்த்தைக்கூட பேசமாட்டார். எங்கள் பெற்றோர் மறைவுக்குப் பிறகு– எனக்கும் தம்பிக்கும் அன்பு காட்டுவது அந்தக் குடும்பம்தான். அங்கே எல்லோருமே நல்லவர்கள்"– மிடுக்குடன் கூறினாள்.

"அப்போ அங்கேயே இருக்க வேண்டியதுதானே! இங்கே வந்து, ஏன் என் நிம்மதியைக் கெடுக்கிறாய்?"– எரிச்சலுடன் கேட்டுவிட்டு வீட்டை நோக்கி வேகமாக நடந்தான்.

மூச்சு முட்டுவது போல் தோன்றவும், அங்கே இருந்த சிமெண்டு பெஞ்சில் உட்காரச் சென்றவள், கீழே கிடந்த கல்லைப் பாராமல் பட்டென்று இடித்துக்கொள்ள– மெலிதாக மேல் தோல் உரிந்து, விரலில் ரத்தம் கசிந்தது.

ஒரு 'ப்ச்' என்ற உச்சுக் கொட்டலுடன், அருகே இருந்த தண்ணீர் குழாயில், ரத்த விரலைக் கழுவிவிட்டு அமர்ந்தாள். மனம் முழுக்க லேசான அழுத்தம் பரவியதாலோ என்னவோ... காயம் பெரிதாக தெரியவேயில்லை!

இந்நேரம் தான் இந்த இடத்திற்கு வந்திருப்பதை எண்ணிப் பார்த்தாள். 'இது, தன் அம்மா பிறந்து வளர்ந்த வீடு' என்ற நினைவு மட்டுமே சற்று அமைதியைக் கொடுத்தது.

பரந்த தோட்டத்தின் நடுவே உயர்ந்து நின்ற வீட்டைப் பார்த்தாள். அதன் உள்ளேயும், வெளியேயும் செல்வச் செழிப்பு



பளிச்சென்று தெரியும்.

பெரிய அளவிலே விவசாயம் செய்யும் பண்ணைக் குடும்பம். முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே நகர் பகுதிக்குச் சென்று தொழில் தொடங்கி, இன்றைக்கு அதைப் பெரிய அளவில் வளர்த்திருந்தார்கள். சமைப்பதற்குத் தேவையான மஞ்சள் பொடியில் இருந்து மசாலாத்தூள் வரையிலான அவர்களின் தயாரிப்புக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது.

அதனால் ஏலம், முந்திரி, ஊறுகாய் என்று தயாரிப்பைக் கூட்டியவர்கள், வீட்டின் இளைய தலைமுறை யோசனையை ஏற்று இன்னும் பல புதிய ரகங்களையும் விற்பனைக்குக் கொண்டு வந்தார்கள்.

தேவவிரதன் இளம் வயதிலே தொழிலில் எவ்வளவு பெரிய வெற்றியை அடைந்திருக்கிறான் என்று, தன்னை மறந்து பாராட்டிவிட்டு திடுக்கிட்டுப் போனாள் அவள். 'என்னதான் திறமைசாலி என்றாலும், எதிரியைப் பாராட்டுவது சரியாகுமா?' என்று யோசித்தபடியே எழுந்து நடந்தாள்.

சற்று தூரமே சென்றிருந்தபோது, "ஏன் காலைச் சாய்த்து நடக்கிறாய்? அட....! அடிபட்டு ரத்தம் வந்திருக்கிறதே? உடனே மருந்து போடாமல் இங்கே உட்கார்ந்து என்ன செய்தாய்?" என்று அதட்டியவன், "ஒருவேளை கனவில் 'அந்த அவனோடு' காதல் பாட்டு பாடிக்கொண்டிருந்தாயே?" என்றான், எகத்தாளமாக.

அவளின் முகம் பார்த்தவன், பிறகு என்ன நினைத்தானோ... "இங்கேயே உட்கார். உடனே வந்துடுறேன்" என்றுவிட்டு வீடு நோக்கிச் சென்றவன், திரும்பி வந்தபோது– அவன் கையில் மருந்துகள் அடங்கிய 'முதலுதவிப் பெட்டி' இருந்தது!

அடிப்பட்ட விரலில் மருந்திட்டு சின்னதாக கட்டும் போட்டுவிட்டான்! அவளுக்கு வியப்பில் சற்றுநேரம் பேச்சு கூட வராது போயிற்று!

சில கண அமைதிக்குப் பிறகு, "என்ன, திடீரென்று எதிரி மீது அக்கறைக் காட்டுகிறீர்கள்?" என்று கேட்டேவிட்டாள்.

"பிடிக்காதவர்களாக இருந்தாலும், அடிப்பட்டிருப்பது

ஒரு பெண்ணுக்கு. உதவி செய்ய வேண்டுமென்ற சாதார... மனிதாபிமான அக்கறைதான்... வேறென்ன?" என்றுவிட்... பெட்டியோடு திரும்பிச் சென்றான்.

வேகமாக விரைந்தவனைப் பார்த்தபோது, நாகரீகம் கருதியாவது நன்றி சொல்லி இருக்கலாமே என்று தோன்றியது.

ஆனால், அப்படி நினைத்தது சில விநாடிகள்தான். இதுவரை எத்தனை தடவை அவளை வருத்தப்பட வைத்திருப்பான்... அதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது, இந்தச் சி... அக்கறை அவ்வளவு பெரிய விஷயமா?

அவன் கூறியது போலவே, சாதாரண மனிதாபிமானம் என்... எடுத்துக்கொள்ள வேண்டியதுதானே?

அதைவிடுத்து, இந்த மனது ஏன் சும்மா பரபரக்க வேண்டு... என்று தன்னையே கடிந்துகொண்டாள். மறுநாள் மாலை சுமா... நான்கு மணி அளவில், சென்னைக்குச் செல்லத் தயாரானா... தேவவிரதன்.

கிளம்பி காருக்கு வந்தவனிடம் ஒரு 'சில்வர் பாக்ஸ்' அடங்கி... பையை நீட்டினாள் வசீகரி.

"என்ன இது?" என்றான்.

"இட்லிப்பொடி. வீட்டில் தயாரித்தது உங்களுக்குப் பிடிக்குமாமே. பாட்டிதான் கொடுத்தனுப்பச் சொன்னாங்க" என்றாள்.

"வெறும் இட்லிப்பொடி மட்டும்தானா? இல்லை, வழக்கமாக கையிருப்பு வைத்திருப்பாயே... அந்த சொக்குப் பொடியையும் கலந்திருக்கிறாயா?" - புருவம் உயர கேட்டான்.

'ஆமாம். இவன் பெரிய மன்மதன். அப்படியே சொக்குப் பொடி போட்டாவது பிடித்துவிட!' என்று கறுகறுவென்று வந்ததை வெளியே காட்டாதிருக்க முயற்சித்தவளிடம், "என்ன... பதிலையே காணவில்லை?" என்றான்.

இந்த இடத்தில் மட்டும் தம்பி ரஞ்சன் இருந்திருந்தால் என்றால், 'காணவில்லை என்றால் போலீஸ் நிலையத்திற்குப்



போய் புகார் கொடுங்கள்' என்று பட்டென நக்கலாகச் சொல்லி இருப்பான் என்று தோன்ற,

"கலந்திருக்கலாம்தான். என்ன, வழியில் மயங்கிவிட்டால் என்ன செய்வீர்கள்? என்னுடையது எவ்வளவு சக்தியான சொக்குப்பொடி என்பதுதான் உங்களுக்கு நன்றாகத் தெரியுமே! அதனால்தான் பிழைத்துப் போகட்டும் என்று விட்டுவிட்டேன்" என்றாள், கிண்டலாக.

சட்டென முகம் கடுத்தது அவனுக்கு. திறந்திருந்த கதவின் வழியே, கையில் இருந்த பையை வைத்துவிட்டு நிமிர்ந்தவளிடம்,

"பிழைத்துப் போகட்டும் என்று விட்டு வைத்திருப்பது என்னவோ உண்மைதான். ஆனால், யார் யாரை விட்டு வைத்திருக்கிறார்கள் என்பதை மட்டும் எப்போதும் நினைவில் வைத்திருந்தாய் என்றால் நல்லது' என சுருக்கெனத் தைக்கும் விதமாகக் கூறிவிட்டு, காரின் கதவை அறைந்து சாத்தியபடி கிளம்பிச் சென்றான்.

பெரும் மழையில் சிக்கி தற்காலிகமாக மீண்டுவிட்டதைப் போல, பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது அவளிடம்.

## 6

அடுத்து வந்த ஓரிரு நாட்களுக்கு உள்ளூர ஏனோ உற்சாகம் இன்றியே நடமாடினாள் வசீகரி. சொல்லப்போனால், ஏதாவது சொல்லி வருத்தப்படுத்த, தேவவிரதன் கூட இப்போது இங்கு இல்லையே... அந்த ஒரு காரணம் போதுமே மகிழ்ச்சி கொள்ள!

அதைவிடுத்து எதற்கு இந்தச் சோக பாவம்? மற்றவர்கள் பார்த்து என்னவென்று கேட்கும் முன் இந்தப் பாவத்தை மாற்றியாக வேண்டும்.

ரஞ்சனோடு பேசினால் மனதிற்குக் கொஞ்சமாவது நிம்மதி கிடைக்குமே என்றெண்ணி, அவனை செல்போனில்

தொடர்புகொண்டான்.

வழக்கத்திற்கு மாறாக சகோதரி பகலில் அழைக்கவு தம்பி பதற்றம் அடைந்தவனாக, "என்னக்கா. அங்கே ஏது பிரச்சினையா?" என்று வினாவினான்.

"அப்படியெல்லாம் எதுவுமில்லைடா."

"ஹப்...பா! நீ பகலில் போன் பண்ணவும், என்னவே ஏதோவென்று ஆகிவிட்டது. சரி, அதை விடு. என்னக்கா விஷய அந்த ஒட்டகத்தை சமாளிக்க முடியவில்லையா? நீ ஒரேயடியா அடங்கிப் போக வேண்டிய அவசியமில்லைக்கா. பிடிக்கவில்லை என்றால் 'சரிதான் போடா' என்றுவிட்டுக் கிளம்பி விடு."

"அப்படியெல்லாம் எதுவும் இல்லைடா ரஞ்சி. இங்கே இப்போது அந்த தேவவிரதனே இல்லை. நேற்றே சென்னைக்கு கிளம்பிவிட்டார்."

"அதான் அந்த ஒட்டகமே அங்கில்லை என்கிறாயே பிறகு ஏன் உன் குரல் சண்டித்தனம் செய்கிறது. நம்மை யாராவது கண்டுகொள்வார்களோ என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருக்காதே. அந்த தேவவிரதனால் விஷயம் வெளிவராது. குடும்பத்திற்குள் புதுப் பிரச்சினை வேண்டாம் என்றுதானே அந்தாளும் நினைப்பார்? அதனால் எதையும் நினைத்து குழம்பாதே. அம்மாவின் ஆசைப்படி நீ பாட்டியோடு ஜாலியாக இருக்கா.அதையும் மீறி எப்படியாவது தெரிய நேர்ந்தால், அப்போது பார்க்கலாம். ஆனால், ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள் அக்கா.

அப்படி வரும்போது, அந்த தேவவிரதனைச் சும்மா விட்டுவிடாதே. நன்றாக விளாசித் தள்ளிவிடு. அப்போதுதான் என் மனம் கொஞ்சமாவது ஆறுதல் அடையும்" என்றான் ரஞ்சன், பழைய சம்பவங்களின் நினைப்பில் கோபம் துளிர்விட.

ரஞ்சனை சமாதானப்படுத்தும் முயற்சியாக, "நீ சொன்னால் சரிதான் ரஞ்சி" என ஆமோதித்தவள், "ஆனால் எனக்கொரு சந்தேகமடா. தேவவிரதனை விளாசும்போது, சும்மா கையினால் விளாசினால் போதுமா? இல்லை, பிரம்பை எடுத்துக்கட்டுமாடா?" என சாதுவாகக் கேட்டாள்.



ராணி முத்து

## சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

### வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.

"அய்யய்யோ! என்னக்கா நீ?" என்ற தம்பிக்குச் சட்டென்று சிரிப்புத் தோன்ற, எதிர்பார்த்திருந்த சகோதரியிடமும் அதுவே எதிரொலித்தது.

"ரொம்பவும் பொல்லாதவள் ஆகிவிட்டாய்.எல்லாம்இருக்கும் இடத்தில் கற்றவையாக்கும்?" என்று கேலி செய்துவிட்டு, "அம்மா தாயே! நான் சொன்ன விளாசல் வெறும் வார்த்தைகளால் மட்டுமே. ஆனால், நீ சொன்னது போலவே செய்தாலும் ஒன்றும் பாதகமில்லை.

நம்ம வீட்டிலேயே நின்று கொண்டு, 'இதுதான் சாக்கென்று வந்து ஒட்டிக்கொண்டு, ஒட்டுண்ணிகளாக வாழலாம் என்று நினைத்துவிடாதீர்கள்' என முகத்திற்கு நேராகச் சொன்னதை இந்த ஜென்மத்தில் மறந்துவிட முடியுமா? அதுவும்.." என்று, மேற்கொண்டு ஏதோ குமுறலைக் கொட்ட வந்தவன் சட்டென சுதாரித்து,

"அந்த ஆள் பற்றிய பேச்சு போதும்க்கா. நீ உன்னைப் பற்றிச் சொல்லேன். பாட்டி உன்னிடம் அன்போடு பழகுகிறார்கள் என்றாயே... அதை நினைக்கும்போது எனக்கு இங்கே, எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது தெரியுமா?" என்று தொடர்ந்தான். ரஞ்சன் பேசியது காதில் விழுந்தாலும், மனதில் பதியவில்லை அவளுக்கு.

அவளுடைய மனதின் எண்ணமெல்லாம் தம்பி சொல்லாது நிறுத்திய வார்த்தைகளில் அல்லவா உழன்றது! தங்கள் பெற்றோர்

மறைவின்போது, சூழ்நிலையைக்கூட நினைக்காமல் தேவவிரதன் கூறினானே என்று சொன்னால், பெற்றோரின் நினைவில் தமக்கை வருந்துவாள் என்றல்லவா சட்டென பேச்சை நிறுத்தினான்.

அவனுக்கும் வருத்தம், வலியென்று எல்லாமே தோன்றும்தானே? அவளுக்கு இளையவனும் கூட! அப்படியும்...

தன் வலியை மறைத்துக்கொண்டு, எவ்வளவு சாமர்த்தியமாகப் பேசி, விஷயத்தை வேறு பக்கம் கொண்டு சென்றான்.

இப்படியொரு தம்பி கிடைத்தது, எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியமோ? உடலும் உள்ளமும் பூரிக்க, தான் இங்கே மிக மகிழ்ச்சியோடு இருப்பதாகக் கூறினாள்.

கிட்டத்தட்ட அதுதானே உண்மையும் கூட! தேவா இல்லாதபோது மகிழ்ச்சிக்கு பங்கம் ஏது? ஆனந்தமாகப் பேசி முடித்தவளுக்கு, வழக்கமான உற்சாகம் ஊற்றெடுத்தது.

அந்த உற்சாகமுடனே தன்னுடைய துணிகளைத் துவைத்து உலர்த்தினாள். பிறகு, காலை உணவு முடிந்ததும் பாட்டியின் அறைக்குச் சென்று, கணக்குகளை வாசித்தாள். அமைதியாகக் கேட்டவாறு அமர்ந்திருந்த பாட்டியம்மா, ஒரு சில இடங்களில் விளக்கம் கேட்டார்.

கடைசியில் கையெழுத்து வாங்கி நோட்டை மூடினாள் வசீகரி.

"உன்னுடைய கடிகாரம் எங்கே வசு?"

"வார் அறுந்துட்டது பாட்டி. டவுனுக்குப் போகும்போதுதான் மாற்றணும்."

"அப்படியாம்மா. சரி, என்னை வராந்தாவிற்கு அழைத்துப் போம்மா. கொஞ்ச நேரம் வீட்டினுள் நடக்க வேண்டும் போலிருக்கிறது" என்றார்.

அவ்வாறே செய்தாள் சின்னவள்.

இதன்பிறகு, காலை–மாலையில் சற்று நேரமாவது அறையைவிட்டு வெளியே வந்து நடப்பதை, வழக்கமாக்கிக்கொண்டார் மகாதேவியம்மா. அப்போது, ஏதாவது பழைய விஷயம் பற்றி



தெரிவிப்பார். கேட்க ஆசையாக இருக்கும்.

அதே வேளையில், இவர்கள் தன் மகளைப் பற்றி ஒருபோதும் நினைக்கவே மாட்டாரா? என்ற ஏக்கமும், வலியும் ஒருங்கே தோன்றும்.

ஓரிரு நாட்களுக்குப் பிறகு, வீட்டுத் தோட்டத்திற்குச் சென்றார்கள். ரொம்ப நாட்களுக்குப் பிறகு பசுமைப் பக்கம் வந்ததாலோ என்னவோ பாட்டியின் முகம் புத்துணர்ச்சியோடு காணப்பட்டது. பணியாளர்களுக்கும் மகிழ்ச்சி அளித்தது.

சில நிமிடங்களுக்கு மேல் பாட்டியால் நிற்க முடியவில்லை என்பதை உணர்ந்தவளாக, வேகமாகச் சென்று மர நிழலில் நிறுத்திவிட்டு வந்த நாற்காலியைத் தள்ளிக்கொண்டு வந்தாள் வசீகரி.

இதமாகப் பார்த்து அவளின் கையைப் பற்றி அழுத்திவிட்டு, நாற்காலியில் அமர்ந்தார் பாட்டி.

"இனிமேல், இங்கே தினமும் ஒரு 'விசிட்' அடிக்க வேண்டும்" என்று ஒரே நேரத்தில் சொல்லிவிட்டு, ஒருவரையொருவர் பார்த்து முறுவலித்தார்கள்.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக பொழுதை இனிமையாகக் கழித்துவிட்டு வீடு திரும்பினார்கள். மதிய உணவுக்குப் பிறகு பாட்டி ஓய்வெடுக்க, தனக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றாள் வசீகரி.

அந்த நிமிடம், மனது லேசாகி காற்றிலே பறப்பது போல் இருக்க– பழைய இனிமையான நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன. விடுமுறை நாட்களில் மாதத்திற்கு ஒரு முறையாவது அனைவரும் சேர்ந்து சின்னதாக சுற்றுலா செல்வது அவள் வீட்டு வழக்கம். ஆட்டமும், பாட்டமுமாக எல்லோரும் கும்மாளம் அடித்து களைத்துப் போய்தான் வீடு திரும்புவார்கள்.

அவள் வீட்டில் தேவைக்கு ஏற்ற வருமானம் இருந்ததே தவிர, ஒரேயடியாக இஷ்டப்பட்டதை எல்லாம் வாங்கிவிடுகிற மாதிரிப் பணம் இருந்ததில்லை. அம்மா, அப்பாவின் வருமானத்திற்குள் செலவு செய்து, அதில் மிச்சம் வேறு பிடிக்க எங்கிருந்துதான்

கற்றார்களோ தெரியவில்லை?

இது குறித்து அப்பாவுமே அவ்வப்போது வியப்போடு கேட்... உண்டு. 'நீ வளர்ந்த விதத்திற்கும், இதற்கும் சம்பந்தமே இல்லையே, பிறகு எப்படி சுகி இதையெல்லாம் கற்றாய்?' என்று!

'இதற்கெல்லாம் டீச்சரா வைப்பார்கள். நாளைக்கு என்... எடுத்து வைத்தால்தானே, தேவைப்படும்போது பயன்படுத்... முடியும்' என்று அழகான புன்னகையுடன் பதில் வரு... அம்மாவிடம் இருந்து.

பிறகு, சம்பள உயர்வுக்காக பரீட்சை எழுதி, தன் வருமானத்தை... பெருக்கி, மனைவி- மக்களை வசதியாக வைத்துக்கொண்டா... வசீகரியின் தந்தை சந்திரன்.

புது 'பைக்' வாங்கி அதில் எல்லோருமாக கோவிலுக்கு... போனது. நான்தான் முன்னால் உட்காருவேன் என்று தம்பியுடன் சண்டை போட்டு, எதிர்திசைக் காற்றை சுவாசிக்க முடியாமல் திணறிவிட்டு, திரும்பி வந்தபோது விட்டுக் கொடுக்கும் பாவனையில், தம்பியை 'உட்கார்ந்து கொள்' என்றுவிட்டு, தன் அம்மாவின் மடியில் தஞ்சம் புகுந்தது என்று எல்லாமே... எவ்வளவு இனிமையான நாட்கள்!

எல்லாமே நேற்று நடந்ததைப் போலிருக்கிறது. ஆனால், எத்தனை ஆண்டுகள் கடந்து போய்விட்டது!

எப்போதாவது முகம் களைத்தது போல் தெரிந்தால், 'இன்றைக்கு நீ சமைக்க வேண்டாம் சுகி. ஓட்டலுக்குப் போய் சாப்பிடலாம்' என்று அம்மாவின் தலை வருடிவிடும் அப்பா.

காதலித்து கரம் பிடித்து, கடைசிவரை கருத்தொருமித்து வாழ்ந்த அன்பானவர்களுக்குப் பிள்ளைகளாகப் பிறந்தது இவர்களின் பாக்கியம் அல்லவா!

அந்த வசந்த காலம் மீண்டும் வந்துவிட்டதைப் போல உணர்ந்தவளின் கவனத்தைக் கவர்ந்தது, அடுத்தடுத்ததாக வீட்டின் முன்னே வந்து நின்ற இரண்டு பெரிய கார்கள்.

'யாராக இருக்கக்கூடும்?' என்று வேகமாக எழுந்து சென்று ஜன்னல் வழியே பார்த்தாள் வசீகரி.



அவளின் முகத்தில் சிறு படப்படப்போடு, வியர்வையும் தோன்றியது!

## 7

**கா**ரிலிருந்து இறங்கியவர்கள் தேவவிரதனின் பெற்றோரும், சித்தப்பா குடும்பத்தினரும்!

அவளால் இப்படித்தானே சொல்ல முடியும்? தாய்மாமா குடும்பத்தினர் என்று உரிமையோடு நினைப்பதற்கு அவளால் முடியாதே!

உள்ளே வந்து அமர்ந்தவர்களுக்கு பழச்சாறு கொண்டுவந்து கொடுத்தார்கள் பணியாட்கள்.

"அம்மா என்ன செய்கிறார்கள்?" என்ற விசாரிப்புடன், பானம் அருந்தும் அமர்த்தலான தோரணை, அந்த வீட்டு ஆண்களின் சிறப்போ?

வீட்டு மருமகள்கள் சாதாரணமான சேலை அணிந்திருந்தாலும், போட்டிருந்த ஒன்றிரண்டு நகைகளிலும் பளிச்சிட்டன வைரங்கள்! இதுதான், அத்தைகளின் வழக்கமான வீட்டுத் தோற்றம் என்பது நன்றாகவே தெரிந்தது.

கல்லூரியில் பயிலும் சின்ன மாமாவின் மகனும், மகளும், இன்றைய நாகரீகத்திற்கு ஏற்ற மாதிரி இருந்தார்கள். எல்லோரையும் புகைப்படத்தில் பார்த்திருந்ததால் 'இன்னார்' என சுலபமாகத் தெரிந்துகொண்டாள் வசீகரி.

ஆனால், சின்னவர்களோடு அமர்ந்திருக்கும் அந்த இன்னொரு இளம்பெண் யார்? இவர்களின் உறவுக்காரியாக இருப்பாள். இல்லையென்றால் இவ்வளவு சகஜ பாவத்துடன் உடன் வர முடியாதே என்று தோன்றியது.

எது எப்படியோ? பாட்டி விழித்த பிறகே இவர்களுடன் ஏதாவது தான் பேசும்படி நேரலாம். அதற்கு இன்னும் இடைவெளி

இருக்கிறது. தன்னைத் தயார்படுத்த இந்த அவகாசம் போதும்.

உணர்ச்சி வசப்பட்டுவிடாமல் எப்படிப் பேசுவது என்பது குறித்து முடிவு செய்தாள். பயண அலுப்புத் தீர ஓய்வெடுக்க எல்லோரும் அறைகளினுள் சென்றுவிட்டார்கள்.

மாலை நான்கு மணிக்கு விழித்த பாட்டிக்கு சத்து மாவில் செய்த சிற்றுண்டியோடு, டீயையும் கொண்டு சென்றாள் வசீகரி. சற்று நேரத்திலேயே அந்த வீட்டின் மற்ற அங்கத்தினர் அங்கே வந்தார்கள்.

பாசம் ததும்பப் பேசியபடி சில கணங்கள் கடந்து செல்ல, வசீகரியைப் பற்றிய விசாரணையும் நடந்தது. எதிர்பார்த்தே இருந்ததாலோ என்னவோ தடுமாறாமல் பதிலளிக்க முடிந்தது அவளால்.

தங்கள் மகள் இத்தனைப் பொய் சொல்ல வேண்டிய சூழ்நிலையில் இருப்பதை தெய்வமாகிவிட்ட பெற்றோர் மேலே இருந்து பார்த்து வேதனைப்படுவார்களோ?

"என்னம்மா... பெற்றோரின் நினைவு வந்துவிட்டதா?" என பரிவுடன் கேட்டார்கள்... தேவவிரதனின் தாயும், சித்தியும்.

உண்மை தெரியும்போது இந்தப் பரிவு நிலைக்குமா? நிலைக்க வாய்ப்பு இல்லைதான். அது அவளுக்குமே தெரியும்.

ஆனாலும் உள்ளூர ஏதோவொரு ஏக்கம், பேரலையாகத் தோன்றுவதை அவளால் தடுக்க முடியவில்லை.

நாகரீகத்திற்காக லேசாக முறுவலித்தாள். மேற்கொண்டு கேள்வி எழும்பாததால் ஒரு தலை அசைப்புடன் அறையைவிட்டு வெளியேறினாள்.

சில சமையல் வேலைகளைச் செய்து கொடுத்துவிட்டு வெளியே வந்தபோது, "ஹலோ வசீகரி" என்று அழைத்துப் பேசினான், சின்ன மாமாவின் மகன் கதிரவன்.

முதலில் தயக்கமாக பேசியவளை– அவனின் பண்பான கேலியும், கிண்டலும் புன்னகைக்க வைத்தன. சற்று நேரத்திலேயே இருவரும் நட்பாகிப் போனார்கள்.



தொடர்ந்து சுவாரசியம் குன்றாமல் பேசிக்கொண்டு இருந்தபோது, தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு உள்ளே வந்தார்கள் இளம் பெண்கள் இருவரும்.

"உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டுமே வசீகரி" என்றாள், கதிரவனின் தங்கை நந்தினி.

என்ன என்பது போல் இவள் பார்க்க...

"தோட்டத்தில் இருக்கும் கறிவேப்பிலையைப் பறித்து, பருப்பு வகையறாவும் சேர்த்து சட்னி தயாரிக்கும்படி சமையல் வேலையாட்களிடம் சொல்லுங்கள்.

என் மாமா பொண்ணுக்கு– அதான்... ராகவி அக்காவுக்கு வேண்டுமாம். கறிவேப்பிலையைப் பார்த்ததும்– சட்னி செய்து சாப்பிட்டால் கண்களுக்கும், தலைமுடிக்கும் நல்லது என்று படித்தது ஞாபகம் வந்துவிட்டதாம்" என்றாள்.

"சமையல்காரர்களிடம் சொன்னால் செய்துதரப் போகிறார்கள். அதை நீங்களே அவர்களிடம் சொல்வதுதானே? அதற்குக்கூடவா சோம்பேறித்தனம்?" என்றான் கதிரவன், கண்டிப்பது போல.

"ஏன்... இந்த வேலையை இவள் செய்வதால் உனக்கு என்ன வந்தது கதிர்? இனிமையான பேச்சு இடையில் தடைபடுகிறதே என்ற எரிச்சலா?" என்றாள் ராகவி.

'என்ன பேசுகிறாள் இந்த ராகவி?' என்று எண்ணிய வசீகரிக்கு, கோபம் எட்டிப் பார்த்தபோது,

"நிச்சயமாக இனிமையான பேச்சுதான். ஏனெனில், இனிய குணம் படைத்தவர்களிடம்தானே, இனிய பேச்சும் வெளிப்படும்" என்று பட்டென திருப்பிக் கொடுத்தான் கதிரவன்.

ராகவி ஆத்திரமுடன் தலை நிமிர்ந்தபோது, மேற்கொண்டு எதுவும் ரசாபாசமாகிவிட வேண்டாம் என்பது போல சட்டென இடையிட்டது வசீகரியின் குரல்.

"உங்களுக்குத் தேவையானது' நிச்சயம் கிடைக்கும் ராகவி" என்றுவிட்டு, 'பிளீஸ்... விட்டுவிடு' என்கிற மாதிரி கதிரவனைப் பார்த்தாள்.





பெருமுயற்சி செய்து, வாயை மூடிக்கொண்டு நின்ற கதிரைப் பார்க்க, புகைந்தது ராகவிக்கு. ‘ஒரு வேலைக்காரி முன்பாக, சொந்த மாமன் மகளான தன்னை மட்டம் தட்டிப் பேசுவதா? இந்த மடையனால், இதுபோல பல தடவை நடந்துவிட்டது.

இப்போது, நான் வெறும் மாமன் மகள் என்பதால்தானே அசட்டையாகப் பேசுகிறான். இருக்கட்டும். மரியாதைத் தர வேண்டிய பதவியை அடைந்து, குடும்பத்திற்குள் போகும்போது பார்க்கிறேன்... அப்போது இந்த அசட்டைப் பேச்சு தலைநீட்டிவிடுமா என்று?

தன்னைவிடப் பெரியவள் என்ற நினைப்பில்லாமல் நடந்து கொண்டதற்காக, இவனுக்கு நன்றாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அப்போது தெரியும் ராகவி யாரென்று?

பார்க்க லட்சணமாகவும், படித்தும் இருந்தாலுமே வேலைக்காரி வேலைக்காரிதானே! இவளை ஜாடைமாடையாகக்கூட திட்ட முடியாமல் போயிற்றே. போய்த் தொலையட்டும்.’

வசீகரி மரியாதையுடன் அடங்கிப் பேசுவதால் விட்டுவிடலாம் என்று தோன்றவும், அதற்கு மேல் அங்கே நிற்காமல் சென்றுவிட்டாள் ராகவி.நிழலாகப் பின் தொடர்ந்தாள் நந்தினி.

“சாரி வசீகரி. ராகவிக்கு அழகானப் பெண்களைக் கண்டாலே ஆகாது. உள்ளூர ஜுரம் வந்து, இப்படித்தான் தத்துப்பித்தென்று உளறுவாள். அவளுக்காக நான் ‘சாரி’ கேட்டுக்கிறேன்” என்றான் கதிர்.

“சாரிக்கெல்லாம் அவசியமே இல்லை கதிர்” என்றாலும், உள்ளூர சற்று நிம்மதி அடைந்தாள் அவள்.

‘பரவாயில்லை. இவன் நியாய; அநியாயம் தெரிந்தவன். இந்த நேரத்தில் இவனுடைய நட்பு கிடைத்திருப்பது நம் நல்ல நேரமே!’

சினேகமாக முறுவலித்து, “அழகானப் பெண்கள் என்றாலே பிடிக்காதபோது, உங்களின் தங்கை மட்டும் விதிவிலக்காக்கும்?” என்று கேட்டாள்.

"நல்லவேளை! இப்போது நந்து இங்கே இல்[illegible] இருந்திருந்தால், அவளை அழகியென்று நீங்கள் சொன்[illegible] நினைத்து நினைத்தே பொழுது விடிவதற்குள் இரண்டு சென்[illegible] மீட்டர் வளர்ந்திருப்பாள்" என்று கேலி செய்துவிட்டு, "நந்[illegible] விதிவிலக்கா என்று கேட்டீர்களே, கிட்டத்தட்ட அப்படித்[illegible] ஏனெனில், பல நேரங்களிலும் தனக்கு ஆதரவாக பேசும் நந்[illegible] ராகவி விட்டுக்கொடுப்பதில்லை" என்றான்.

'அப்படி அந்த ராகவியிடம் என்ன பிரேமை இந்த நந்தினிக்[illegible] என்று தோன்றியதை ஒதுக்கிவிட்டு, நடப்பிற்கு வந்த[illegible] வசீகரி.

மகன்கள் இரவு சாப்பாட்டுக்கு தாயாரை அழைத்து வந்தார்[illegible] தேவவிரதனின் திருமணம் எப்போது என்ற பேச்சு எழுந்த[illegible] பின்னணியில் விலகிச் சென்றாள் வசீகரி.

அதுதான் நாகரீகம் என்பதோடு– இரண்டு மாமாவி[illegible] தோரணையும், அத்தைகளின் பளிச்சிடும் வைரமும் அவ[illegible] வேகமாகவே செல்ல வைத்தன எனலாம்!

குடும்பத்தாருடன் இரண்டு நாட்களைக் கழித்த மகிழ்ச்சியி[illegible] அவர்கள் சென்னைக்குக் கிளம்பிய பிறகும்கூட பாட்டியிட[illegible] ஒருவித உற்சாகம் தென்பட்டது.

ஒரு வார காலம் வழக்கமான வேலைகளுடன் சென்று மறை[illegible] அன்றைக்கு காலை இளம் வெயிலில், சற்று தூரம் நடந்துவிட்[illegible] வரலாம் என்று வெளியே கிளம்பினாள் வசீகரி.

சாலையின் இரு மருங்கிலும் பசேலென்று இருந்த செடி[illegible] கொடிகளை ரசித்துக்கொண்டே நடந்தபோது– தொலைவி[illegible] வந்த கார் தேவவிரதனுடையது என்பதை உறுதி செய்தது அவள்[illegible] உள்ளம். கண்டும் காணாதது போல முகத்தை வேறு பக்கமாகத்[illegible] திருப்பியபடி நடந்தாள்.

விரல்விட்டு எண்ணக்கூடிய நாட்களுக்கு முன்பாகத்தானே[illegible] வேண்டும் மட்டும் வார்த்தைகளை வாரி இறைத்துவிட்டுப்[illegible] போனான். இவனையெல்லாம் எதற்காக கண்டு கொண்டதாகக்[illegible] காட்டிக்கொள்ள வேண்டும் என்பது அவளுக்கு எண்ணம்.



ஆனால்,. அருகே வந்த கார் அவள் எதிர்பாராத வண்ணம் நிற்க, அதிலிருந்து இறங்கி அவளை நோக்கி ஆனந்தக் கூச்சலுடன் ஓடோடி வந்தவன் பிரியன்.

எதிர்பாராத திடீர் சந்திப்பில், அவளுக்குமே அதிக மகிழ்ச்சிதான்.

வேகமாக வந்து அவளின் கைகளைப் பற்றிக்கொண்டு, "இவ்வளவு சீக்கிரம் உன்னைப் பார்த்துவிடலாம் என்று நான் நினைக்கவே இல்லை வசு" என்று குதூகலமுடன் கூறினான்.

"என்னாலும் தான் இதை நம்ப முடியவில்லை பிரியன். நீங்கள் எப்படி இங்கே?" என்றாள், புன்னகையுடன்.

"இந்தப் பக்கமாக ஒரு வேலை. அதை முடித்துவிட்டு அப்படியே உன்னையும்..." என்றவனின் பேச்சைத் தொடர முடியாமல் செய்தது, காரின் 'ஹாரன்' ஒலி.

"காரின் கண்ணாடியை இறக்கிவிட்டு, "எக்ஸ்கியூஸ்மி மிஸ்டர் பிரியன். உங்களுடைய பொருட்களை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், நான் கிளம்புவதற்கு வசதியாக இருக்கும்" என்றவன் தேவவிரதனே!

"ஒரு நிமிடம் வசு... இதோ வருகிறேன் " என்றுவிட்டு, காரில் இருந்து 'கிட்பேக்'கை எடுத்துக்கொண்டு, "எனக்கு 'லிப்ட்' கொடுத்ததற்கு நன்றி மிஸ்டர் தேவா" என்று முறுவலோடு நன்றி கூறி கதவை மூடினான் பிரியன்.

"நல்லது. சந்திக்க வந்தவரை வழியிலே பார்த்தாயிற்று போலிருக்கிறது. ஓ.கே." என்று சாதாரணமாக பிரியனிடம் பேசியவன், அவளைப் பார்த்து ஏளனமாக உதட்டை வளைத்துவிட்டுச் சென்றான் தேவவிரதன்.

உள்ளூர எரிச்சலானபோதும், அதை உடனே ஒதுக்கித் தள்ளவும் முடிந்தது அவளால். 'இந்த அகம்பாவக்காரனின் செயல்கள் புதிதா என்ன? அதை நினைத்து மனதைக் கெடுப்பதைவிடுத்து, தன்னைப் பார்க்க இவ்வளவு தூரம் தேடியலைந்து வந்திருக்கும் பிரியனோடு இனிமையாகப் பேசியவாறு பொழுதைக் கழிக்கலாமே! பாட்டி ஓய்வெடுத்து முடிக்க, இன்னும் சில மணி நேரம் இருக்கிறதே.

அப்போது வீட்டுக்குப் போனால் போதும்' என்று நினைத்த
அருகில் இருந்த புன்னை மர நிழலில் அமர்ந்தாள் வசீகரி.

பக்கத்தில் உட்கார்ந்து, "எப்படி இருக்கிறாய்? உனக்கு இங்கு வசதியாக இருக்கிறதா? பிடித்திருக்கிறதா?" என்று பிரியன் கேட்க, பல நாட்களுக்குப் பிறகு மகிழ்ச்சியில் திக்குமுக்காடி போனாள் வசீகரி.

அப்போதும் கூட, "என்னை மணப்பது குறித்து என்ன முடிவு செய்திருக்கிறாய் வசு?" என்று கடைசியாக அவன் கேட்டதற்கு, "கொஞ்சம் அவகாசம் வேண்டும் பிரியன். பிறகு பார்க்கலாம்" என்றே பதில் சொன்னாள்.

அவனும் பொறுமையோடு "சரி" என்றதைப் பார்க்க கொஞ்சம் ஒரு மாதிரியாக இருந்தாலுமே, மேற்கொண்டு அதுபற்றி பேசுவதற்கு இருவருமே முயலவில்லை.

அவளுக்குப் பிடித்த பழவகைகள் கொண்ட 'புரூட் சாலட்'டை பையில் இருந்து பிரியன் எடுத்துக் கொடுத்தபோது, கண்கள் பனித்து தொண்டை அடைத்தது. இன்னமும் கூட அவளிடம் அன்பு காட்டக்கூடிய மனிதர்கள் இருப்பதை எண்ணி, உள்ளம் பூரித்தது.

யாருடைய இடையூறும் இல்லாமல், சுத்தமான காற்றை சுவாசித்தவாறு பேசியவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை.

"சாரி பிரியன். உங்களை அந்த வீட்டிற்கு அழைக்கும் உரிமை எனக்கு இல்லை" என்றாள், வருத்தமாக.

"அதனால் என்ன வசு? உன் சூழ்நிலைதான் தெரியுமே. நீ இருக்கிற வீட்டிற்கே சென்றிருந்தாலும், இந்த அளவிற்கு மனம்விட்டுப் பேசியிருக்க முடியுமா என்பது சந்தேகம்தான். யார் என்னவென்ற கேள்விக்கு பதில் சொல்வது, உனக்கும் கஷ்டமாக இருக்கும். அப்படி நேராமல் இடையிலேயே நடந்த இந்தச் சந்திப்பு எனக்கு மகிழ்ச்சிதான் வசு" என்று சற்றும் அலட்டாமல் கூறினான் பிரியன்.

அந்த நல்ல மனம் கொண்டவனை அனுப்பி வைத்துவிட்டு,



வீட்டிற்குத் திரும்பிய வழியெல்லாம் பெரும் யோசனை ஒன்று ஓடிக்கொண்டே இருந்தது அவளுக்குள்.

எது எப்படியோ? பிரியன் கேட்டது குறித்து இப்போதைக்கு எந்த முடிவும் எடுக்க முடியாது என்பது மட்டும் உறுதி. எதிர்காலம் பற்றிய முடிவு எடுக்கக்கூடிய சூழ்நிலையிலா அவள் இருக்கிறாள்?

ஒவ்வொரு நாளையும் பிரச்சினையின்றிக் கடப்பதற்கே பெரும் பாடாக இருக்கும்போது, எங்கிருந்து எதிர்காலத்தைப் பற்றி முடிவெடுப்பது? திருமணம் என்பது எவ்...வளவு பெரிய விஷயம்?

பிரியனிடம் கூறியது போல, பிறகு பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்!

வீட்டைச் சென்றடைந்தபோது, கடுகடுவென்ற முகத்துடன் மாடியறை முன் நடைபோட்டுக் கொண்டிருந்தான் தேவவிரதன்.

## 8

வெறித்துப் பார்த்தபோதும் அவளைக் கேள்வி எதுவும் கேட்காமல் மாடியில் இருந்து இறங்கி, அலுவலக வேலைகளைப் பார்ப்பதற்காக ஒதுக்கி இருந்த அறையை நோக்கிச் சென்றான்.

எப்படியும் ஒரு வாக்குவாதத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று நினைத்தவளுக்கு லேசான நிம்மதி தோன்றியது. ஆனால், அதன் ஆயுள் மிகவும் அற்பமானது என்பதை அப்போது அவள் அறியாள்!

பாட்டிக்கான மதிய உணவை எடுத்துக்கொண்டு சென்றவள், கிட்டத்தட்ட அவர்கள் சாப்பிட்டு முடித்திருந்தபோது உள்ளே வந்த தேவவிரதனை நிமிர்ந்தும் பாராமல், காலியான பாத்திரங்களுடன் விரைந்து வெளியேறினாள்.

சாப்பாட்டிற்குப் பிறகு இஞ்சி போட்டுத் தயாரித்த கறுப்பு

டீ குடிப்பது பாட்டியின் பழக்கம். சமையலறையில் பா இல்லாததால் தானே டீ தயாரிக்கலானாள் வசீகரி.

அப்போது உள்ளே வந்த தேவிரதன், "உனக்குக் கொஞ்சமா வெட்கம் இருக்கிறதா? பட்டப்பகலிலே, நடுசாலையில் ஒரு கையைப் பற்றிக்கொண்டு இளிக்கிறாய்! யாராவது பார்த்த என்ன நினைப்பார்கள் என்ற தயக்கம் கூடவா இல்லா போய்விட்டது?" என்று கடிந்தான்.

"பார்ப்பவர்கள் என்ன நினைக்கிறார்களோ தெரியாது. ஆனா நீங்கள் மட்டும் நல்லவிதமாக நினைத்திருக்க மாட்டீர்களே என்ன புத்தியோ? ச்சே!" என்றவள், "உங்கள் விருப்பத்தி கற்பனை செய்ய வேண்டாம் தேவவிரதன். அவர்தான் என்னை மணந்துகொள்ளக் கேட்டிருப்பவர்" என்று தலை நிமிர்ந் உரைத்தாள் அவள். அதில் ஒருவித மிடுக்கு இருந்தது!

"ஓ! நீ சொன்ன அந்த அன்பா...ன குடும்பத்து பிரிய இவன்தானா? ம்... அப்ப, திருமணம் செய்யக் கேட்டு கையை பிடித்தால் ஒன்றும் சொல்லமாட்டாயாக்கும்? அடடா! இ எனக்கு முன்னரே தெரியாமல் போய்விட்டதே!" என்று கூ அவள் தோளிலே கை வைத்தவன், "சொல்லு... நாம் எப்போது திருமணம் செய்துகொள்ளலாம்?" என்று கேட்டான்.

சற்றும் எதிர்பாராத இந்தச் செயலால் திகைத்தவள், வேகமாக அவன் கையைத் தட்டிவிட்டு, விலகி நின்று உறுத்து விழித்தாள்.

"அதான் திருமணம் செய்துகொள்ளலாம் என்கிறேனே. பிறகு ஏன் விலகிப்போகிறாய்? ஒருவேளை, நான்தான் விலக்க முடியாத அளவிற்கு இறுகப் பற்றிக்கொள்ள வேண்டுமோ?" என்றபோது, அவனுடைய புருவம் வெகுவாக உயர்ந்திருந்தது!

சூழ்நிலையை மறந்து சட்டென்று சிரித்துவிட்டாள் வசீகரி.

எதுவும் கூறாமல் அவள் முகத்தையே நோக்கியவன், "இப்போது எதற்காக இந்தச் சிரிப்பு?" என்றான்.

முறுவலுடனே, "ம்... நான் சொன்னது போல் நடந்தால், வசமாக மாட்டிக்கொண்டோமே என்று கையிலே தாலியைப்



கொண்டு, நீங்கள் பேந்த விழித்தபடி நிற்பீர்களே. த்துப் பார்த்தேனா... சிரிப்பு வந்துவிட்டது" என்று த்தாள்.

ரண்டெட்டு முன்னே வந்து நின்று, அவள் கண்களை றுவி பார்த்து, "ஒருவேளை, உன் கற்பனைப்படி நான் பேந்த க்காமல், கிடைத்தது அதிர்ஷ்டமான வாய்ப்பு என்று உன் த்திலே தாலியைக் கட்டிவிட்டேன் என்றால், என்ன செய்வாய் ?" என்று தெளிவாக, நிதானமான குரலிலே கேட்டான் தேவவிரதன்.

துளியும் எதிர்பாராத இக்கேள்வியால் வசீகரியின் வசீகரச் சிரிப்பு, துணி கொண்டு துடைத்து போல காணாமல் போய்விட, திகைப்போடு அவனைப் பார்த்தாள்!

கறுப்பு நிற 'பான்ட் பெல்ட்'டில், இரு கரங்களின் கட்டை விரலையும் ஸ்டைலாக மாட்டிக்கொண்டு, தன் முழு உயரத்திற்குமாக நிமிர்ந்து நின்றிருந்தான் அவன். 'என்ன சொல்லப் போகிறாய்?' என்பது போல பார்த்தவனைக் கண்டு, மேலும் திகைப்பு கூடியதே தவிர, குறைந்த பாடில்லை அவளுக்கு.

"பேச முடியாமல், பயின்ற மொழிகள் எல்லாம் மறந்து போயிற்றா, ஹலோ!" என்று, அவள் முன்னே சொடக்குப் போட்டுக் கேட்டான்.

தலையை உலுக்கிக்கொண்டாள் அவள்.

"என்ன வசு, நான் சொன்னது போல நடந்தால், எப்படி இருக்குமென்று நினைக்கிறாயா? எனக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாதம்மா. இவ்வளவு அழகானப் பெண்ணை மணந்துகொள்ள உரிமையுள்ள ஒரு முறைப் பையனுக்குக் கசக்குமா என்ன? 'ம்' என்று நீ ஒரு வார்த்தை சொல் கண்ணே. இப்போதே தாலி கட்டுகிறேன்" என்றான், கண்களில் துளிர்விட்ட காதலுடன்.

கையிலிருந்த பீங்கான் 'டிரே' ஆட்டம் காணவும், கீழே விழுந்துவிடுமோ என்ற பயத்தில் அதை வேகமாக சமையல் மேடை மீது வைத்தாள்.

லேசாக நடுங்கும் மெல்லிய கைகளை ஒன்றன் மீது ஒன்ற
இணைத்து நிடமுறச் செய்தபடியே திரும்பியவளைக் கூர்மைய
அளவிட்டான் அவன்.

'இவன்... இவன் என்ன நினைத்துக்கொண்டு இ
மாதிரியெல்லாம் பேசுகிறான்?' என்று கேட்டுவிடும் வேகத்து
நிமிர்ந்தவளைப் பார்த்து கண் சிமிட்டிச் சிரித்தான். அந்
சிமிட்டலில் அவளுக்கு எல்லாமே பளிச்சென்று புரிந்
போயிற்று!

'ச்சூ! எல்லாமே வெறும் வேடிக்கை, வம்புப் பேச்சு' என்பல
உணர்ந்து- 'அப்பாடா' என நிம்மதியாக மூச்சு விட்ட போது
'வெறும் வேடிக்கைதானா?' என ஏமாற்றமாக ஒரு எண்ண
தோன்றி, முன்னைவிட அதிகமாகக் குலுங்க வைத்தது.

தன் எண்ணப்போக்கை நல்லவேளையாக இவன் அறி
முடியாது. இல்லையென்றால் எவ்வளவு கேவலமாகி
போயிருக்கும். கடவுளே!...

இவன் சரியான வாய்ஜாலக்காரன் என்று பாட்டி சொல்வது
நூற்றுக்கு நூறு சரிதான் போலும்! ஏதேதோ பேசி அவளையே
தடுமாற வைக்கப் பார்க்கிறானே. அவளுக்காக பிரியன்
காத்திருக்கிறான் என்று, இவனிடம்தானே பெருமையாக
கூறினாள்.

இப்போது இவனாலேயே தடுமாறுவதா? மகா மடத்தனம்!
பெண்களின் மனதைக் கரைக்கும் வித்தை அறிந்தவன்
போலிருக்கிறது.

முதலில் அவளை வம்புக்கு இழுத்து- பேச்சுக் கொடுத்து,
அழகி என்று குளிர்விக்க முயன்று- பிறகு, இவனுக்கென்னவோ
உரிமை இருக்கிறதென்று வேறு பீற்றினானே!

கடைசியாக 'ம்'மென்று சொன்னால் தாலி கட்டிவிடுவானாம்!
ஆமாம்... எப்போது எப்போது என்றுதானே அவள் கழுத்தை
நீட்டிக்கொண்டு காத்திருக்கிறாளாம்!

விளையாட்டாகத்தான் என்றாலும், இவன் பேசியதை
குடும்பத்தார் கேட்டிருக்க வேண்டும். ஜெகஜோதியாக



இருந்திருக்கும்!!

"அம்மா வெறுமனே நிற்கிறாயே. இந்த மவுனத்தை சம்மதமென்று
எடுத்துக் கொள்ளலாமா?" என்றான், அவளின் முறைப்பை
அலட்சியம் செய்து.

வேண்டுமென்றே வம்புக்கு இழுக்கும் பாணி. இவனிடம்
தர்க்கம் செய்வது காலவிரயமே அன்றி, ஒரு பயனுமில்லை.

எனவே பதிலேதும் கூறாமல், நடுக்கம் நின்றிருந்த கைகளை
நீட்டி, டீ ஊற்றிய கப்பை 'டிரே'யில் எடுத்து வைத்துக்கொண்டு,
வேகமாக வெளியே சென்றாள்.

"பார்த்துப் பார்த்து. போகிற வேகத்தில் நேராக வெளியே
சென்று, பக்கத்தில் இருக்கிற வீடுகள் எதிலாவது நுழைந்துவிடாதே"
என்று, சிறு நகையொலியுடன் கூறினான்.

இந்த இலகுவான கேலிக்கு அவளால் எப்படிச் சிரிக்காமல்
இருக்க முடியும்?

நல்லவேளையாக முதுகு காட்டிச் சென்றுகொண்டு
இருப்பதால் தெரியாது. தனக்கு ரசனையோடு தோன்றிய
புன்னகையை, அவனால் கண்டுகொள்ள முடியாது என்ற
திருப்தியுடன் விறுவிறுவென்று சென்று மறைந்தாள்.

ஆனால், சென்று மறைகிற வேகத்திலே, அவள் யோசிக்காது
விட்ட ஒன்றும் உண்டு!

சிரிக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள, நேராக
முகத்தைத்தான் பார்க்க வேண்டும் என்பது இல்லையே? 'உடல்
மொழி' என்பார்களே. அதுமாதிரி, அவளின் மெல்லிய தோள்கள்
லேசாகக் குலுங்கியதே, அவள் ரசித்துச் சிரிக்கிறாள் என்பதைப்
புரிந்துகொள்ள அவனுக்குப் போதுமானதாக இருந்ததென்பது,
அவளுக்குத் தெரியாது போனது!

கறுப்பு இஞ்சி டீயை வாங்கிக்கொண்டு, அவளிடம் ஒரு சின்ன
வெல்வெட் பெட்டியைக் கொடுத்தார் பாட்டியம்மா.

"எ... என்ன பாட்டி இது?"

"திறந்து பார்த்தால் தெரிந்துவிட்டுப் போகிறது."

அப்போது உள்ளே வந்த தேவவிரதன், அவளுக்கு வெகு

அருகே கிடந்த சோபாவில் அமரும் முன்பாக– "தைரியமாகத் திறந்து பார் வசு. நீ பயப்படும் அளவிற்கு உள்ளே மஞ்சள் கயிறு எதுவுமில்லை" என்று, அவளுக்கு மட்டுமே கேட்கும்படி ரகசியக் குரலில் கூறினான்.

பாட்டியின் எதிரில் இருந்துகொண்டு, அவர்களுக்குத் தெரியாமல் கேலியாக்கும்?

'இவனால் நானல்லவா மாட்டிக்கொள்வேன் போலிருக்கிறது?' என்று வியர்த்தபோதும், உள்ளூர இதமான உணர்வு ஒன்று தோன்றத்தான் செய்தது!

பெட்டியில் இருந்த அழகான வளையல் கடிகாரத்தைப் பார்த்து ஒரு நிமிடம் அவளுக்குப் பேச்சே எழவில்லை.

"உனக்காகத்தான் வாங்கி வரச் சொன்னேன் வசும்மா. பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார் பாட்டி.

"ம்.,, ரொம்பவே அழகாக இருக்கிறது பாட்டி. ஆனால், என்னிடம் கடிகாரம் இருக்கும்போது இது எதற்காக?" என்றாள்.

"ஒன்று இருந்தால், இன்னொன்று வாங்கக் கூடாதென்று இல்லையே? நீ, நந்தினியின் கடிகாரம், செருப்பு சேகரிப்புகளைப் பார்த்திருந்தால் இப்படி கேட்டிருக்கவே மாட்டாய் வசு. அவ்வளவு வைத்திருக்கிறாள்."

"நந்தினி பெரிய குடும்பத்தின் ஒரே பெண். எவ்வளவு வாங்கினாலும் தாங்கும். ஆனால், நாங்கள் தேவைக்கு அதிகமாக எதுவும் வாங்காமல், எங்கள் அப்பாவின் சம்பளத்திற்குள் வாழப் பழகியவர்கள். 'நம்முடைய உழைப்பு இல்லாமல் கிடைக்கும் எதையும் பெற்றுக்கொள்ளக் கூடாது' என்பார்கள் எங்கள் அம்மா" என்று மெல்லிய குரலில் கூறினாள் வசீகரி.

ஒரு கணம் பாட்டியும், பேரனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"தயவு செய்து தவறாக எடுத்துக்காதீர்கள் பாட்டி. இந்தக் கடிகாரத்தின் விலையை, என் சம்பளத்தில் பிடித்துக்கொண்டீர்கள் என்றால், நான் இதை வாங்கிக்கிறேன்" என்றாள் தெளிவாக.



முகத்திலே அழகிய மென்முறுவல் ஒன்று தோன்ற, "பா... ...ம்தான் அந்தப் பையன்" என்றார் பாட்டி.

'யாரைச் சொல்கிறார்கள்?' என்பது போல அவள் பார்க்க.

"உன்னை மணந்துக்கப் போகிற பையனைத்தான் சொன்னேன் வசு. மறுக்கவே முடியாதபடி நீ பேசும்போது, பாவம் பெருவாரியான நேரங்களில் அவன் மவுனவிரதம்தானே மேற்கொள்ள நேரிடும்" என கேலி செய்தவர்,

"நீ என்ன வாங்குகிற சம்பளத்திற்கு மட்டுமா வேலை செய்கிறாய்? பல வேலைகளையும் முன்வந்து செய்யவில்லை! உன் அதிகப்படி உழைப்பிற்காக, தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம். சரியா? கையிலே அணிந்து காட்டு பார்க்கலாம்" என்றார்.

நியாயமான காரணம் இருக்கிறது என்பதாலோ என்னவோ அதற்கு மேல் மறுக்காமல் அணிந்துகொண்டாள் வசீகரி.

"ம்... அழகாக இருப்பதோடு, அளவும் சரியாக இருக்கிறதே! இதற்காகத்தான் தேவாவிடம் ஒரு வேலையை ஒப்படைப்பது" என்றார் பாட்டி, பெருமையோடு.

'சும்மாவே தப்பு கண்டுபிடிக்கிற தேவா, இப்போது இன்னும் என்னவெல்லாம் நினைக்கிறானோ?' என தயக்கமுடன்தான் பார்த்தாள் வசீகரி. ஆனால்... அவன் முகத்திலே இருந்த இயல்பைக் கண்டு, அவள்தான் சற்று குழப்பிப் போனாள்!

தனியாகச் சந்திக்க நேர்ந்தபோது, "ஒரு சாதாரண கடிகாரம். அதை வேண்டாம் என்று மறுப்பதற்காக எப்படியெல்லாம் வாதாடுகிறாய். கொடுப்பது பாட்டி என்பதற்காகவாவது, வாங்கிக்கொள்வதுதானே வசீகரி" என்றான் தேவவிரதன்.

இவனால் எப்படி இவ்வளவு சாதாரணமாகச் சொல்ல முடிகிறது? அல்லது, கொடுத்தால் வாங்கிக்கொள்கிறாளா என்று சோதிக்கிறானா? என உள்ளூர ஆத்திரம் தோன்ற,

"உங்களுக்கு காது கேட்பதில் ஒன்றும் பிரச்சினை இல்லையே? இருந்தால்... நல்ல டாக்டரிடம் காட்டுங்கள்" என்றாள்.

அவளுடைய ஆத்திரம் புரிந்தது போல சில கண மவுனத்தின் பிறகு, "இந்த நேரத்தில் உன்னிடம் ஒரு விஷயத்தைத்

தெளிவுபடுத்தலாம் என்றிருக்கிறேன் வசிகரி. நீ ஒரு நிமிடம் என்னுடைய சூழ்நிலையில் இருந்து யோசித்துப் பார்.

உன் அம்மா சொன்னார்கள் என்பதற்காக மற்ற எதையும் யோசிக்காமல், உங்களை வெறுத்து ஒதுக்கி மறந்தே போயிருக்கிற இடத்திற்கு திடீரென்று வந்து நிற்கிறாய். உண்மை தெரிந்த எனக்கு எப்படி இருக்கும்? குடும்பத்தாரிடம் மறைக்கிறோமே என்ற குற்ற உணர்ச்சியில், சில வேளைகளில் அலுவலக வேலையைக்கூட அமைதியாகப் பார்க்க முடிவதில்லை. எல்லாம் உன்னால்தானே என்கிற கோபம். இந்த நிலையில் நான் எப்படி உன்னை நம்ப முடியும் சொல்லு" என்றான், அவன்.

மீண்டும் ஒரு அமைதி நிலவியது அங்கே! ஒரு நெடுமூச்சின் பிறகு, "புரிகிறது" என்றாள். கனத்தக் குரலில் வெளிப்பட்ட அந்த ஒற்றை வார்த்தை, அவனைச் சட்டென பார்க்க வைத்தது!

"இன்னும் நான்கைந்து மாதம் மட்டும்தான் தேவவிரதன். ரஞ்சனின் படிப்பு முடிந்ததும், நான் இங்கிருந்து சென்றுவிடுவேன். வந்த சுவடே தெரியாமல் போய்விட வேண்டும் என்பதுதான் எனக்கும். அதுவரை நான் முழுகவனத்தோடு இருந்துக்கிறேன். கடைசிவரை உங்களைத் தவிர வேறு யாருக்குமே உண்மைத் தெரியாது" என அமைதியாக மொழிந்தாள்.

தாங்கள் யாரென்ற ரகசியம் வெளிப்பட வாய்ப்பே இல்லை என்ற நம்பிக்கையில்தான் அப்படிச் சொன்னாள்.

ஆனால், உண்மையின் பலமான சக்தியே, அது எப்படியும் வெளிப்பட்டுவிடும் என்பதுதானே!

## 9

"என்ன தேவவிரதன், இப்போதும் நம்புவதற்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறதா? 'போய்ச்சேர்' என்று ரெயிலேற்றி விட்ட பிறகுதான் ஒத்துக்குவீர்களா?" என உணர்ச்சியற்ற



குரலிலே கேட்டாள்.

"உன் வார்த்தைகளுக்குப் பின்னால் மறைந்திருக்கிற வலியை, உணர்ந்துகொள்ள முடியாத அளவிற்கு நான் கல்லோ... மரமோ அல்ல வசிகரி. ஆனால்... இந்த நிலை, நீயாகவே தேடிக்கொண்டது. வருவதை எல்லாம் எதிர்கொண்டுதானே ஆக வேண்டும்" என்றவன்... தொடர்ந்து,

"உங்களின் விஷயத்தில், நான் மட்டுமாக எந்த முடிவும் எடுக்க முடியாது. இதைத் தவிர வேறு வழியில்லை" என்று, அமைதியாகக் கூறி கைகளை விரித்தான்.

தேவவிரதனின் கோபமும், எரிச்சலுமான குரலையே அதிகமாகக் கேட்டிருந்தவளுக்கு, உணர்வுகள் அடங்கிய இந்த அமைதியானக் குரல்– மனதை என்னவோ செய்வது போலிருந்தது!

அதன்பிறகு வந்த நாட்களில் இருவரும் எதிரிகள் போல் பார்ப்பதைத் தவிர்த்து, முடிந்த வரை நல்லவிதமாகப் பேசவே முயன்றார்கள்.

பேரனை அடிக்கடிப் பார்க்கிற மகிழ்ச்சியில், பாட்டியின் நடக்கும் பயிற்சியில் நல்ல முன்னேற்றம் உண்டானது. நாட்கள் வேகமாகக் கடந்து செல்ல, அந்த வீட்டில் மேலும் சில முக்கியமான விஷயங்கள் நடந்தன.

தேவவிரதனின் குடும்பத்தார் வந்த ஒவ்வொரு தடவையுமே, முடிந்த வரை முன்னே வருவதைத் தவிர்த்து ஒதுங்கிப் போனாள் வசிகரி. ஒரு முறை இதை நேரிலேயே காண நேர்ந்த தேவவிரதனின் புருவங்கள் நெறிந்தன!

அன்று காலை நேரத்திலே கண்கள் விழித்துக்கொள்ள– பால்கனியில் நின்று சுற்றியும் பார்வையை ஓட்டினாள் நந்தினி.

பூத்துக் குலுங்கிய மலர்களுடன் தோட்டம் அழகாக இருந்தது. பனித்துளிகளைத் தாங்கியபடி தெரிந்த பூவை நீளக் காம்புகளுடன் பறித்து, அதை ரசனையோடு வருடிக்கொண்டு வந்தான்.

"உங்களின் தங்கை பிரமாதமான அழகி கதிர்" என்றான்

வசிகரி.

அவனின் பார்வையைத் தொடர்ந்தவனின் முகம் முறுவலித்தபோதும், "இருந்து என்ன செய்வது? மற்றவரைப் பார்த்து கண்டபடி 'மேக் அப்' செய்துகொண்டு- இயற்கையான அழகைக் கெடுத்துக்கிறாள் என்பதுதான் என் அம்மாவின் பெரிய புலம்பல். அதையெல்லாம் இவள் எங்கே காதில் வாங்கிக்கிறாள்" என்று எரிச்சல் வெளிப்படக் கூறினான்.

நந்தினி அருகே வரவும், "உங்கள் கையில் இருக்கும் பூவை முகத்தின் அருகே பார்க்கும்போது- எது முகம், எது பூ என்று கண்டு பிடிக்க முடியாத அளவிற்கு அவ்வளவு அழகாக இருக்கிறீர்கள் நந்தினி. முகம் இப்படி பூ மாதிரித் தெரியும்படி, எப்படித்தான் 'மேக் அப்' போட்டீர்களோ?! விலை உயர்ந்த 'ஸ்பெஷல் கிரீம்' ஏதாவது போட்டீர்களா?" என்று வியப்புடன் வினவினாள் வசிகரி.

"ஹய்...யோ! நி... நிஜமாகத்தான் சொல்கிறீர்களா?" என பளீரென்ற புன்னகையோடு துள்ளிக் குதித்துக் கேட்டுவிட்டு, "நான் இன்றைக்கு 'மேக் அப்' எதுவுமே போடவில்லையே! வெறும் சோப்பை மட்டும் போட்டு முகம் கழுவிவிட்டு உடனே இங்கே வந்துவிட்டேன். ஆனால், நீங்கள் இந்த முகத்தை பூ போல் இருக்கிறது என்கிறீர்களே! உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை" என்று பரபரப்போடு கூறினாள் நந்தினி.

"ஒரு பூவே, இன்னொரு பூவைப் பாராட்டுகிறது என்று கூட சொல்லலாமே நந்தும்மா" என்று எடுத்துக் கொடுத்து கண் சிமிட்டினான் கதிர்.

கலீரென்ற சிரிப்புடன் "ம்... பிரமாதம் அண்ணா" என்றுரைத்தாள் தங்கை. கன்னங்களில் சிவப்பு நிறப் பூக்கள் மலர, வசிகரியும் பாராட்டை ஏற்றுக்கொண்டவளாக அவர்களுடன் கலகலத்தாள்.

சிரித்து முடித்துவிட்டு, "இனி, நீங்கள் என்னை ஒருமையில் அழைத்துப் பேசுங்கள். உங்களைவிட நான் சின்னவள்தானே!"



என்றுவிட்டு ஓடிப் போனாள் நந்தினி.

தங்கையின் மாற்றத்தை நம்ப முடியாதவன் போல் பார்த்து, "கடவுளே! நந்துவின் மூளை எப்போதும் இப்படி நல்ல விஷயங்களைப் புரிந்துகொள்ளட்டும்" என்றவன், "நன்றி வசிகரி. உங்களின் சாதுரியமானப் பேச்சால், என் அம்மாவின் புலம்பல் இனி நின்றுவிடும் என்று நினைக்கிறேன்" என்று விசிலடித்துச் சென்றான் கதிரவன்.

மெல்ல ஓடிக்கொண்டிருந்த தேவவிரதனின் காதுகளில், இந்த வார்த்தைகள் அனைத்துமே விழுந்தன.

'இது மகிழக்கூடிய இனிய நிகழ்வல்லவா?' என்று நினைத்துக்கொண்டே, இருவாட்சி பூவைப் பறிக்கத் திரும்பிய வசிகரி, ஒரு கணம் அப்படியே நின்றுவிட்டாள்.

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக்கொண்டு, முகத்திலே இளநகை மின்ன- இலகுவான பாவனையுடன் நின்றிருந்தான் தேவவிரதன்.

"என் தம்பி, தங்கை இருவரும் உன்னிடம் நன்றாகப் பழக ஆரம்பித்துவிட்டார்கள் போலிருக்கிறதே வசிகரி" என்றான்.

'ஆமாம்' என்பது போல, தலையை அசைத்தாள் அவள்.

மேலும் ஏதோ பேசியபடி நடந்தவனிடம், "எனக்கு உங்களிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டுமே!" என்றாள்!

"கேள்" என்றான், ஒற்றை வார்த்தையில்.

"என் அம்மா குழந்தையாக இங்கே இருந்தது முதல் எடுத்த 'போட்டோ ஆல்பம்' உண்டாமே! அதெல்லாம் இப்போது எங்கே இருக்கிறது. இ... இருக்கிறதா அல்லது..." என்று தயங்கி நிறுத்தினாள்.

"இருக்கிறது. அவர்களின் பொருட்கள் அனைத்துமே அவர்களுடைய அறையில்தான் இருக்கிறது."

"எனக்கு அதை, அந்த அறையை ஒரே ஒரு முறைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது தேவவிரதன். இன்னும் சில நாட்கள்தானே இங்கே இருக்கப் போகிறேன். அதற்குள் ஒரு

முறைக் காட்டுகிறீர்களா? பிளீஸ்."

"இன்று வரை சொன்னது போலவே நடந்து வருகிறாய் என்பதால், நிச்சயமாகக் காட்டுகிறேன் வசிகரி"

"தேங்க்ஸ், தேங்க்ஸ் தேவவிரதன்" என ஆனந்தம் பொங்க கூறினாள்.

முறுவலோடு தலை அசைத்துவிட்டு, 'ஜாகிங்'கைத் தொடர்ந்தான் அவன்.

குடும்ப நபர்கள் சென்னைக்குச் சென்ற பிறகு, யாருக்கும் தெரியாதவாறு வசிகரியை அழைத்துக்கொண்டு, அந்த வீட்டின் உட்புறம் இருக்கும் அமைதியான பகுதிக்குச் சென்று, ஒரு பெரிய அறையின் கதவைத் திறந்தான் தேவவிரதன். உள்ளம் படபடக்க உள்ளே சென்றாள் வசிகரி.

பயன்படுத்தாத அறை என்பதால் அவ்வப்போது ஒட்டடை அடித்து பெருக்குவதற்கு மேல் பராமரிப்பு இல்லாத அறையில், லேசாக தூசி படர்ந்திருந்தது.

சுவரோடு பதிக்கப்பட்டிருந்த நான்கு கதவு அலமாரியில், பளிச்சிடும் வண்ணங்களில் இருந்த துணிமணிகளைத் தொட்டுப் பார்த்தபோது, அம்மாவையே தொடுவது போல இருந்தது அவளுக்கு.

அவள் ஆசைப்பட்ட மாதிரி ஆல்பமும் கிடைத்தது. அதை ஆசைத் திரப் பார்த்துவிட்டு, மனம் இல்லாமலே திருப்பிக் கொடுத்தாள்.

அவளையே பார்த்திருந்தவன், "இதை நீயே வைத்துக்கொள். ஆனால் கவனம்" என்று எச்சரித்தும் வைத்தான்.

"நிஜமாகவா... நிஜமாகவா?" என நம்பமாட்டாது இரு முறை கேட்டு தெளிவுபடுத்தி, ஆல்பத்தை நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள்.

சட்டென்று அந்த அறையின் ஜன்னல்களைத் திறந்துவிட்டான் அவன். மனோரஞ்சிதம் பூவின் சுகந்த மணம் வேகமாக உள்ளே நுழைந்தது.





அந்த விசாலமான அறையில் இருந்த எல்லாவற்றையும், மீண்டும் ஒருமுறைப் பார்த்துவிட்டு வெளியேறினாள். அதன்பிறகு, தன் அம்மாவின் ஆல்பத்துடன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பேசலானாள்.

ரஞ்சனின் பரிட்சைகள் தொடங்குவதற்கு இன்னும் ஓரிரு நாட்கள் மட்டுமே இருந்த நிலையில், பாட்டியம்மா– நீண்டநாள் நேர்த்திக்கடன் செலுத்த என்று மூன்று, நான்கு நாள் பயணமாக திருப்பதி கிளம்பினார்.

அவரது உடல்நிலை பயணம் மேற்கொள்ளும் அளவிற்கு முழுமையாக குணமாகிவிட, இரண்டு பணியாட்களுடன் கிளம்புவதாக முடிவாயிற்று.

வசீகரி அப்போதுதான் ஒரு பெரிய காய்ச்சலில் விழுந்து சரியாகி இருக்க, "ரொம்பவும் களைத்துத் தெரிகிறாய் வசு. அதனால் நீ வர வேண்டாம்" என்று முடிவு செய்தார் பாட்டி.

அவளுக்குமே இதுதான் சரியாகப்பட்டது. இந்தப் பயணத்தால் மீண்டும் காய்ச்சல் வந்தால், நிம்மதியாக சுவாமி தரிசனம் செய்ய முடியாமல் பாட்டிக்கு அல்லவா தொல்லையாகும்.

எனவே, அன்று மதியத்திற்கு மேல் கிளம்புவதாக இருந்த பாட்டியை வழி அனுப்பும் நோக்கில், முன்தினமே சென்னையில் இருந்து கிளம்பி வந்திருந்தார்கள் குடும்பத்தினர்.

தேவவிரதனுக்கு அவசர வேலை வந்துவிட்டதால், 'நான் ரெயில் நிலையம் சென்று பாட்டியைப் பார்த்துக்கிறேன்' என்று கூறிவிட்டான்.

எல்லோரையும் பார்த்து தலையசைத்துவிட்டுக் கிளம்பினார் பாட்டி.

ஏனோ மனதினுள் அழுத்தம் உண்டாக, தன்னுடைய அறைக்குச் சென்றுவிட்ட வசீகரி– தன் அம்மாவின் படத்தை எடுத்து வைத்துக்கொண்டு, அன்றைய மனநிலையை மெல்லியக் குரலில் உரைக்கலானாள்.

"அம்மா... நீங்கள் பிறந்து வளர்ந்த இந்த வீட்டையும், இங்கே நான் வசிக்க நேர்ந்த சில மாதங்களையும், வாழ்நாள்



முழுவதற்கும் என்னால் மறக்க முடியாது தெரியுமா? உங்களின் ஆசைப்படி பாட்டிக்குப் பணிவிடைகள் செய்து– அவர்களின் அன்பையும், ஆசியையும் பெற்றுவிட்டேன். இப்போது உங்களுக்கு சந்தோஷம்தானேம்மா?" என்று கேட்டுவிட்டு, ஒரு பெருமூச்சோடு அதை மூடி பைக்குள் வைத்துவிடத் திரும்பியபோது, "வசீகரி ஒரு நிமிடம் இங்கே வந்துவிட்டுப் போம்மா" என்று அழைத்தது வீட்டு மருமகளின் குரல்.

கதிரவனின் அம்மா சொன்ன சின்ன வேலையை முடித்துக் கொடுத்துவிட்டு தன் அறைக்குப் பக்கத்தில் வந்தவள், அப்படியே பேயறைந்த மாதிரி திகைத்து நின்றாள். ஏனெனில்...

கண்களிலே கடும் சீற்றமுடன், தன் கையில் இருந்த படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார் தேவவிரதனின் தந்தை சிவநாதன்.

குப்பென்று வியர்த்துக் கொட்ட, கால்கள் வெடவெடத்தன வசீகரிக்கு.

'கடவுளே! என்ன மடத்தனம் செய்துவிட்டேன்! வெளியே செல்லும்போது கதவை மூட எப்படி மறந்து போனேன்? அவர் கையில் இருப்பது ஆல்பத்தில் பார்த்த படம்தான்.

வசீகரி எப்படியோ கீழே தவறவிட்ட படத்தைப் பார்க்காமல் சென்றுவிட, காற்றில் மெல்ல மெல்ல நகர்ந்து, அது அறையின் வெளியே வந்திருக்கிறது!

படபடக்கும் மனதுடன் நின்றவளுக்கு, மயக்கமே வந்துவிடும் போலானது!

"இது எப்படி உன்னிடம் வந்தது?" என்று உறுமலுடன் கேட்டவரின் முகம், ஒரு கணத்தில் சட்டென்று கறுத்து, "யார் நீ. உண்மையைச் சொல்" என்று சீறியது.

"அது..." என்றவளுக்கு, நாக்கு மேலே ஒட்டிக்கொண்டு பேச்சே எழவில்லை.

"ஒரு வார்த்தைக்கூட பொய் இருக்கக் கூடாது. உனக்கும், இந்தப் படத்திற்கும் என்ன சம்பந்தம்?" என்று மீண்டும் சீறினார்.

"அது, அவர்கள் என்... என் அம்மா" என்று திக்கித் திணறிக்

கூறினாள்.

ஒரு நிமிடம் அங்கே பேரமைதி! ஆனால், மறு நிமிடமே வெடித்துச் சிதறியது!

"எவ்வளவு துணிச்சல் உனக்கு? என்ன தைரியம் இருந்தால் இங்கே வந்திருப்பாய்? இந்தக் குடும்பத்தின் நிம்மதியை, சந்தோஷத்தை வழி வழியாகக் கெடுக்கவென்று சங்கல்பம் ஏதாவது செய்திருக்கிறீர்களா என்ன?

இனிமேல் இங்கே இருக்க உனக்கு அனுமதியில்லை. உன் பொருட்களை எடுத்துக்கொண்டு இப்போதே வெளியே போய்விடு" என்று வெறுப்புடன் கூறி, வாசலைக் கை காட்டினார் சிவநாதன்.

கன்னங்களில் வழிந்த கண்ணீருடன், தன் பையை எடுத்துக்கொண்டு வந்தவள், அனைவரையும் ஒரு முறைப் பார்த்துவிட்டுத் திரும்பி நடக்க முற்பட்டபோது– வாயில்புறம் வந்து நின்ற காரில் இருந்து இறங்கித் தன் வேக நடையுடன் வந்தான் தேவவிரதன்.

கண்ணீரும், பையுமாக நின்றவளைப் பார்த்து– வலியுடன் கூடிய விவரிக்க இயலாத உணர்வு உண்டானது அவனுக்கு! ஒரு பெரும் வாக்குவாதத்திற்குத் தயாராவதைப் போல, ஆழ மூச்சிழுத்தான்.

"வாடா தேவா. நீயும் சரியான நேரத்தில்தான் வந்திருக்கிறாய். நம்ம வீட்டில், நமக்குத் தெரியாமல் எவ்வளவு பெரிய சதி வேலையெல்லாம் நடந்திருக்கிறது தெரியுமா? நினைத்தாலே கொதிக்கிறது. வெறும் பொய்யான தகவலைக் கொடுத்து நம்மை முட்டாளாக்கிவிட்டாள் இந்தப் பெண். இவள் யார் தெரியுமா...?" என்று அவர் முடிப்பதற்குள்,

"தெரியும்ப்பா" என்றவன், வசீகரியை நோக்கித் தன் இரு வலிய கரங்களையும் விரித்துக் காட்ட– நம்பமுடியாமல் திகைத்து, பிறகு, ஓடி வந்து ஒரு விசும்பலுடன் அவனுடைய கைகளுக்குள் சரணடைந்தாள் வசீகரி!



# 10

ஹாலில் இருந்த அத்தனைப் பேருமே வெகுவாக அதிர்ந்து நிற்க, "உஷ். முதலில் இந்தக் கண்ணீரை நிறுத்து வசும்மா. அதான் வந்துட்டேன் இல்லையா? இனி நான் பார்த்துக்கிறேன்" என்று கண்ணீரைத் துடைத்து, தைரியமூட்டினான்.

"தேவா!" என்று மிகக் கடுமையாகச் சத்தமிட்டார் பெற்றவர்.

முகத்தில் ஆத்திரமும், அதிர்ச்சியும் தாண்டவமாட– "இந்தப் பெண்ணுடன் சேர்ந்து, நீயும் இவ்வளவு நாளாக எல்லோரையும் ஏமாற்றினாயா? இவள் அப்பா இந்த வீட்டுப் பெண்ணை மயக்கிய மாதிரி, இவள் உன்னை வசப்படுத்திவிட்டாளா?" என்று தணலைக் கொட்டினார்.

"வாயைத் திறந்து பதில் சொல்லடா" என்று, இப்போது சித்தப்பாவும் கடிந்தார்.

"இதெல்லாம் என்ன தேவா! நீயா இப்படி? என்னால் நம்பவே முடியவில்லையேடா. எல்லோரையும்விட நீதானே அந்தக் குடும்பத்தின் மேல் கோபமாக இருந்தாய்? இப்போது எப்படியடா இது மாதிரியெல்லாம்?" என்று, வேகமாக ஆரம்பித்து வருத்தமுடன் கேட்டாள் பெற்றவள் தமயந்தி.

"அம்மா பிளீஸ். நான் சொல்வதை எல்லோரும் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்க" என்று, வசீகரியின் கையை இறுகப் பற்றிக்கொண்டு, "நான் வசீகரியை விரும்புகிறேன். உங்கள் எல்லோரின் சம்மதத்துடனும் திருமணம் செய்துக்கவும் முடிவு செய்திருக்கிறேன்" என்று பிசிர் தட்டாத குரலில் சொன்னான்.

மற்றவர்களைப் போலவே வசீகரியும் அதிர்ந்துதான் போனாள்.

இந்தச் செய்தி அவளுக்குமே புதிதுதானே!

அதிர்ச்சி வெறுப்பாக மாற, "நினைத்தேன்... இந்தப் பெண் உன்னை இது மாதிரிதான் பேச வைப்பாள் என்று. இவள்

அம்மாவை யாரும் அறியாமல் இழுத்துக்கொண்டு ஓடிப் போனதால், நகை- தொகை என்று எதுவும் கிடைக்காமல் போய்விட்டது. குறைத்துப் பார்த்தாலும் எவ்வளவோ கிடைத்திருக்குமே? அதையெல்லாம் வட்டியும், முதலுமாகச் சேர்த்து பாதிச் சொத்தாகவே பெற்றுவிடலாம் என்றுதான், இவள் உன்னைத் தன் வசப்படுத்தி இருக்கிறாள் என்பது என் எண்ணம் தேவா.

புத்தி இருந்தால் புரிந்து சுதாரித்துக்கொண்டு, இவளை ஒதுக்கித் தள்ளிவிடு. ஏமாந்துவிடாதே! மீறினாய் என்றால் நான் கடுமையான முடிவு எடுக்கவேண்டியது இருக்கும்" என்று மிரட்டலாக எச்சரித்தார் பெற்றவர்.

இதைக் கேட்டதும், இப்படியொரு சூழ்நிலையிலும் தேவவிரதனின் முகத்தில் ஒருவித திருப்தி உண்டானது. வெகு அருகில் நின்றிருந்ததாலோ என்னவோ வசிகரியால் அதை முழுமையாகக் காண முடிந்தது.

'எதை நினைத்து இந்தத் திருப்தி?' என யோசிக்கும் முன்பே முகமாற்றம்!

"நீங்கள் இப்போது கூறினீர்களே, இதே மாதிரியான வார்த்தைகளால் முன்பெல்லாம் நானுமே வசிகரியை இகழ்ந்து பேசி இருக்கிறேன்ப்பா" என்று ஒரு வருத்தமான முறுவலுடன் கூறி, பற்றி இருந்த அவளின் கையை மெல்ல... மிக மெல்ல அழுத்தினான் தேவவிரதன்- அப்படிப் பேசியதற்காக மன்னிப்பு வேண்டுவது போல!

"ஓ! அப்போதெல்லாம் புத்தி தெளிவாகத்தான் வேலை செய்திருக்கிறது போல?" என ஏளனமாகக் கேட்டார் சிவநாதன்.

'புத்தி தெளிவா?'- என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு, "அப்போதுநான் வசிகரியைப் பற்றி சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் உண்மைப்பா."

"உன் அம்மாவின் பங்கு சொத்திற்காகத்தான் திட்டமிட்டு நீ இங்கே நுழைந்திருக்கிறாய் என்று வாய்ப்பு கிடைக்கும்போதும்,



கிடைக்காதபோதும் பலமுறை திட்டி இருக்கிறேன். அவள் பொறுக்கமாட்டாமல், 'இந்தச் சொத்தில் இருந்து அநாவசியமாக ஒரு ரூபாயைக் கூட வாங்கிக்கொள்ள மாட்டோம்' என்றாள். அவள்வரையில் அவை முழுமையாக உணர்ந்து சொன்ன சத்திய வார்த்தைகள் என்பதை நான் அப்போது நம்பவில்லை. பிறகு, வசிகரியின் நடவடிக்கைகளை அருகே இருந்து பார்க்கப் பார்க்கத்தான், அவள் மனதில் சொத்து பற்றிய எண்ணமே துளியும் இல்லை என்பது புரிந்தது" என்றான் மகன்.

"இதோ பாரடா தேவா. ஒரு அழகானப் பெண்ணின் மேல் கொண்ட மயக்கத்தில் நீ உளறுகிறாய் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அதைக் காதல் என்று தவறாகப் புரிந்திருக்கிறாய். அவசரப்பட்டு பெரிதாக எந்த முடிவும் எடுக்காதே. அப்புறம், நீ விரும்பினாலும் வெளியே வர முடியாமல் பலவித சிக்கல்கள் உண்டாகிவிடும்" என்று மீண்டும் அதே குரலில் கூறினார் சிவநாதன்.

பெற்றவர் தன் காதலை வேண்டும் என்றே 'மயக்கம்' என்று குறிப்பிட்டதை நினைத்து உள்ளூர வருத்தமாக இருந்தபோதும் காட்டிக்கொள்ளாமல், "ஐந்தாறு ஆண்டுகளாகத் தனியே தொழிலை கவனித்து, அதில் பெரிய அளவில் வளர்ச்சியும் கண்டிருக்கிறேன். நீங்கள் பாராட்டி மகிழும் அளவிற்கு. அந்த வளர்ச்சிக்கெல்லாம் காரணமான, நல்ல முடிவுகளை எடுக்க வைத்த என் மனதிற்கும், உள்ளுணர்விற்கும் தெரியாதாப்பா, இது காதலா... மயக்கமா என்று?" எனத் தெளிவாகக் கேட்டான்.

மகனை ஆழ நோக்கியபடி, "அப்படியென்றால் எங்கள் எல்லோரையும் எதிர்த்தாவது, இந்தப் பெண்ணை மணக்கத்தான் போகிறாயா?"- முடிவாகக் கேட்டார்.

"நீங்கள் சம்மதித்தால் எதிர்க்கத் தேவை இல்லையேப்பா. ஏன் எதிர்மறையாகவே பேசுகிறீர்கள்? வசிகரி உங்களின் தங்கை மகள் என்று ஒரு தடவை நினைத்துப் பாருங்களேன். நிச்சயம் அன்பு தோன்றும். பிளீஸ்..." என்றான் கெஞ்சலும், மன்றாடலுமாக.

முன்பைவிட அதிகமாக வலித்தது வசிகரிக்கு. 'கடவுளே! இந்த

விரிசல் என்னால் அல்லவா நேர்ந்திருக்கிறது. முடிந்தவரை
சரி செய்ய வேண்டிய பொறுப்பும் எனக்கு இருக்கிறது

அதற்கான முயற்சியைச் செய்வதை விடுத்து, இப்படி
கலங்கித் தவிப்பதால் என்ன நன்மை நடந்துவிடப் போகிற
தன் தாய்க்கு இந்த வீட்டில் கிடைக்காமல் போன
இப்போது தேவாவிற்கும் அல்லவா கிட்டாது போய்விடு
போலிருக்கிறது.

அது எவ்வளவு கொடுமையானது என்பது அவள் அறியாத
அதற்கு இந்தக் காதல்தானே காரணம்.

காதல்! உண்மைதான். எப்படி? எப்போதென்று தெரியாமல்
அவள் மனதிலும் தேவா இடம் பெற்றுவிட்டான்! பிரியனிடம்
உடனே பதில் அளிக்க முடியாமல் போனபோதே, அவள்
ஆழமாக யோசித்திருக்க வேண்டும்.

ஆனால் தேவா ஓரிரு நேரம் கிண்டலடித்து
வெறுப்பேற்றிப் பேசினானே தவிர, 'உன்னை விரும்புகிறேன்'
என்று சொன்னதில்லையே? தன் மனதிற்குள் ஆழமாகப்
பதிந்துவிட்டவனின் மனதில், தானும் இடம் பெற்றிருப்பது-
அதுவும் குடும்பத்தாரிடம் தன் காதலுக்காக இந்தளவு வாதாடும்
அளவிற்கு உறுதியாக இருப்பது குறித்து அளவிட முடியாத
இன்பம்தான். ஆனால், இந்தக் காதல் எல்லோரின் நிம்மதியையும்
தொலைத்துவிடும் போலிருக்கிறதே!

பெரிய காதல்! பொல்லாதக் காதல்! சில மாதங்கள் மட்டுமே
பார்த்துப் பழகிய ஒருத்தியை மறப்பது ஒன்றும் அவ்வளவு பெரிய
விஷயமில்லையே?. தேவவிரதன் அப்படியே செய்யட்டும்.

மறக்கவே இயலாதவாறு நாங்கள் என்ன காதல் மொழிகளா
பேசித் திரிந்தோம். முயன்றால் அவனால் முடியும். 'என்னால்
முடியுமா?' என்று தன்னைத்தானே கேட்டவளின் கண்களில்
இருந்து சட்டென்று உருண்டு விழுந்தன நீர்மணிகள்.

தான் பற்றி இருந்த கையில் நீர்படவும், அவளைப் பார்த்து
முகம் வாட, "அதான் நான் பார்த்துக்குவதாகச் சொன்னேனே.
மீண்டும் ஏன் வசு இப்படி?" என்று லேசாகக் கண்டித்தபடி,



அவனின் முகம் நோக்கிக் கையை உயர்த்தினான்.

அதை அனுமதிக்காமல் இரண்டெட்டு பின்னோக்கி நகர்ந்தபடி,
"வேண்டாம் தேவா" என்றாள் வசீகரி.

"என்ன வேண்டாம்?" என்றவனின் கண்கள் இடுங்கின.

"எ...எதுவுமே! இதெல்லாம் சரி வராது தேவா. பழைய
பிரச்சினைகளே தீராதபோது, இப்போது புதிதாக ஒன்று தோன்ற
வேண்டாம். நாங்கள் எப்போதுமே இந்தக் குடும்பத்திற்கு
வேண்டாதவர்கள்தானே?" என்றபோது தொண்டையை
அடைக்க- சரி செய்ய முயன்று தோற்றவளாக, "இடையில் வந்த
நான், இடையிலேயே விலகிப் போய்விடுகிறேன்" என்றாள்.

கண்களை இறுக மூடித் திறந்து, "இந்த உளறலை இத்துடன்
நிறுத்து வசீகரி. பிரச்சினையைத் தீர்ப்பதை விடுத்து, விலகி
ஓடுவதால் என்ன பயன்?"

"பிளீஸ் தேவா"- என மன்றாடலாக அவள் கேட்டபோது,

"பிரமாதம்" என்று எள்ளல் தெறிக்கக் கூறினார் சிவநாதன்.

"சூழ்நிலைக்குத் தகுந்தவாறு எவ்வளவு திறமையானப் பேச்சு.
உன்னைப் பற்றி தெரியாதவர்கள் இதைப் பார்க்கவோ, கேட்கவோ
நேர்ந்திருந்தால்... உண்மை என்றுதான் நினைத்திருப்பார்கள்.
அவ்வளவு உருக்கமான, தத்ரூப முகவெளிப்பாடு. ஆனால், உன்
நடிப்பை நம்புவதற்கு நாங்கள் தயாரில்லை... தெரிந்துகொள்"
என கடுங்குரலில் சொன்னார்.

துடித்தாற் போல் அவரைப் பார்த்தாள் வசீகரி.

தானும் அவளின் துடிப்பை உணர்ந்தவனாக, "இவளின்
உண்மையான வேதனையைக்கூட, உங்களின் கோபம்
அலட்சியமாக ஒதுக்கித் தள்ளுகிறதுப்பா. இது நிச்சயம் ஒருநாள்
உங்களுக்குப் புரியும். யாருக்காகவும், எதற்காகவும் என்னால்
வசீகரியை விட்டுவிட முடியாது. இதுதான் என் இறுதி முடிவு"
என்று தலையை நிமிர்த்தி கூறினான் தேவா.

வெளியே சுற்றிவிட்டு அப்போதுதான் உள்ளே நுழைந்த
கதிரும், நந்தினியும்- நடப்பதை திகைப்புடன் பார்த்துக்கொண்டு

நின்றபோதும், மூத்த தலைமுறையினரைப் போல அவர்களின் முகம் மாறவில்லை. மாறாக, மற்றவர் அறியாமல் அண்ணனும், தங்கையும் கண்களாலே தங்களின் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டார்கள்!

"ஆல் ரைட். உன் சொந்த வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் அமைத்துக்கொள்கிற முழு உரிமையும் உனக்கு இருக்கிறது. ஆனால், நீ எப்போது இந்தப் பெண்ணை மணந்துகொள்கிறாயோ... அந்த நிமிடத்தில் இருந்து உனக்கும், இந்தக் குடும்பத்திற்கும் உள்ள உறவு முறிந்துவிட்டது என்பதை மட்டும் நினைவில் வைத்துக்கொள்" என உறுதியாக பேசினார் தந்தை.

'பெற்ற பிள்ளை, அதுவும் ஒரே பிள்ளையிடம் எப்படி இது மாதிரி இவரால் கூற முடிந்தது? மற்றவர்களின் அமைதியைப் பார்த்தால், அவர்களும் இதை ஆமோதிக்கிறார்களா?' என்று திகைப்போடு பார்த்தாள் வசீகரி.

இது மாதிரியான பேச்சை ஓரளவிற்கு எதிர்பார்த்திருந்த முகபாவனையுடன் நின்றிருந்தான் மகன்.

"இந்தப் பெண் இருக்கும் வரை, இந்த இடத்தில் இருக்க நம்மால் முடியாது. உடனே சென்னைக்குச் செல்ல வேண்டும், தயாராகுங்கள்" என்று கடுகடுத்தார் சிவநாதன்.

உள்ளூர விருப்பமின்றித் தயங்கியபடியே, தங்களின் அறைக்குச் சென்றார்கள் சின்னவர்கள். அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் எல்லோரும் வீட்டைவிட்டு வெளியே சென்றார்கள்.

வாயிலைக் கடக்கும் முன்பாக நின்று திரும்பிய சித்தப்பா, "திடீரென்று ஞானோதயம் ஏதும் தோன்றினால், எப்படி வருவதென்று கவுரவம் பார்க்க வேண்டாம். நம்ம வீட்டுக் கதவு உனக்காக திறந்துதான் இருக்கும்... நீ எங்கள் பிள்ளையாக மட்டும் வரும்போது" என்றுவிட்டுப் போனார்.

கலங்கிய கண்களுடன் இருவரையும் பார்த்துவிட்டுச் சென்றாள் தாய்.

'நல்லவேளையாக பாட்டி இல்லை. இருந்திருந்தால் அவர்



மனது மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும்' என்று நினைத்தான் தேவவிரதன்.

"மன்னித்துவிடுங்கள் தேவா. இப்படி நடக்குமென்று ஒருபோதும் நான் நினைக்கவில்லை" என்று வேதனையுடன் கூறினாள் வசீகரி.

"நடந்ததை மாற்ற முடியாது வசு. அதை விட்டுவிட்டு கொஞ்சம் அமைதிப்படுத்த முயற்சி செய்" என்றான்.

அமைதியா? இனி எங்கிருந்து வரும் அது? அவளால் எத்தனைப் பேர் மனவேதனையும், கண்ணீருமாக இருக்கிறார்கள்.

'ஒருவரின் ஆசியைப் பெற வந்து, பலரின் மகிழ்ச்சி-நிம்மதியைக் கெடுத்துவிட்டேனே, நான் பாவி!' என்று தன்னைத்தானே வெறுத்தாள். இடைவிடாமல் வழிந்த அவளின் கண்ணீரைப் பார்த்து, அடுத்து என்ன செய்வது என்று தீவிரமாக யோசித்தான்.

அவனுள் பல விஷயங்கள் முடிவாயிற்று! அதன்படி, "மிக முக்கியமான வேலையைப் பாதியில் விட்டுவிட்டு வந்திருக்கிறேன் வசு. இந்த நிலையில், உன்னைத் தனியே விட்டுப் போவதில் எனக்கு விருப்பம் இல்லைதான். ஆனால் எனக்கு வேறு வழி இல்லைம்மா. போயாகத்தான் வேண்டும். வேலை முடிந்ததும் உடனே திரும்பிவிடுகிறேன். மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதை, நான் வந்த பிறகு பேசலாம்... சரியா? அதுவரை நீ தைரியமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் என்னுடனே சென்னைக்கு வந்துவிடு" என்றான்.

"நான் தைரியமாக இருக்கிறேன் தேவா. நீங்கள் வேலையை முடித்துவிட்டு சீக்கிரமாக வந்துவிடுங்கள். நான் காத்திருப்பேன்" என்றவளின் கையைத் தட்டிக் கொடுத்தவன், மறுநாள் காலையில் சென்னையில் இருந்தான்.

கடற்கரை சாலையில் இருந்த அந்தப் பெரிய வீட்டில், என்றும் இல்லாத அமைதி நிலவியது! ஏதாவது பேசியபடியே சமையல் செய்யும் அத்தைகள், தொழிலைப் பற்றி விவாதிக்கும் மாமன்கள், பார்த்த உடனே நொடியும் தாமதிக்காமல் ஓடிவந்து கையைப்

பற்றி அழைத்துப் போகிற நந்தினி.

இவர்கள் யாரும் உரிய இடத்தில் இல்லையே! தேவாவின் காரைத் தவிர மற்றதெல்லாம் வெளியே நிற்கிறது. நேரத்திலே அலுவலகம் கிளம்பிவிட்டானா?– என்று பலவித கேள்விகள் தோன்ற– நின்றிருந்தவளை, "வாம்மா ராகவி" என சுரத்தே இல்லாமல் அழைத்தது பெரிய அத்தையின் குரல்.

"என்ன அத்தை, முகம் இப்படி வாடிக் கிடக்கிறது? உடம்புக்கு முடியாமல் படுத்திருந்தீர்களா? அடடா! தெரியாமல் நான் வந்து தொல்லை செய்துவிட்டேனா?" என்றாள் ராகவி.

"உடம்புக்கு ஒன்றும் இல்லையம்மா" என்று காதிலேயே விழாத ஒரு குரலில் கூறினார் அவர்.

"பிறகு ஏன் அத்தை...?" என்ற ராகவியின் குரல், 'கேட்'டுக்குள் நுழைந்த தேவாவின் காரை பார்த்து தடைபட்டது.

'அட! இவன் முகமும் இப்படித்தான் இருக்கிறது! இந்த வீட்டில் இருப்பவர்களுக்கு என்ன ஆனது?' என்ற யோசனை ஓடியது.

"அப்பா, சித்தப்பா எங்கேம்மா? உங்கள் எல்லோரிடமும் நான் பேச வேண்டும்" என்றான் தேவா.

விருப்பம் இருக்கிறதோ... இல்லையோ? எல்லோருமாக அந்தப் பெரிய அறைக்கு வந்தார்கள்.

தேவவிரதன் தன் கருத்தை எதிரே இருப்பவர்களுக்குப் புரியும் விதமாக, ஏற்ற இறக்கத்துடன் எடுத்துரைப்பதைக் கேட்டபோது, ராகவிக்கு அப்படியே தீப்பிடித்தது போல பற்றிக்கொண்டு வந்தது!

'எவ்வளவு தைரியம் இருந்தால், அந்த ஓடுகாலி பெற்ற கழுதை தேவாவை மயக்கிப் பிடித்திருப்பாள். மயக்குவதற்குத் தோதாகத்தான் கடவுள், அந்தப் பாழாய்ப் போகிறவளை மூக்கும், முழியுமாகப் படைத்து இருக்கிறாரோ!

அவள்தான் மயக்கினாள் என்றால், தன்னை உள்ளூர சாமியார் என்று கிண்டலடித்துக்கொண்டிருந்த இந்தத் தேவாவுக்கு புத்தி



...போயிற்று? மினுமினுப்பான பொன்னிறத் தோலைப் ...த்ததும், அப்படியே விழுந்துவிட்டானோ?

...அப்படித்தான் இருக்க வேண்டும். மற்றபடி தேவாவாவது... ஒரு ...ன்னை லட்சியம் செய்து பார்ப்பதாவது? அப்படி பார்க்கக் ...வனாக இருந்திருந்தால், அவளே இந்நேரம் அவனைத் தன் ...க்குள் கொண்டு வந்திருப்பாளே!

ஆனால், அவளிடம் தோழி என்பதற்கு மேல், இவன் வேறெந்த ...னைப்போடும் பழகியதில்லையே!

...தாலும் அந்த வசிகரிக்கு ஒன்றும் இளைத்தவள் இல்லையே! ...ப்படி இருக்கையில் வலியச் சென்று பழகும் தன்னைவிடுத்து, ...வன் எப்படி அவளை மணக்கிறேன் என்று உளறுகிறான்? ...றுதியாக வேறு உளறுகிறானே?'

## 11

"இது தானாக உளறுவது அல்ல. அவள்தான் ஏதாவது செய்திருக்க வேண்டும். வசிகரி என்ற பெயரை வைத்திருப்பவளுக்கு, அதைச் செய்யத் தெரியாமல் இருக்குமா என்ன? சரியான ...காரியாக இருப்பாள் போலிருக்கிறதே! உண்மையை மறைத்து, ஒன்றும் தெரியாதவள் மாதிரி இருந்திருக்கிறாள்.

தேவா ஒருநாள் கிடைத்தாலும் பாட்டி வீட்டிற்கு ஓடி ஓடிப் போனபோதே நான் சுதாரித்திருக்க வேண்டும். அந்தப் பக்கமாக புது கிளையொன்று தொடங்கலாம் என்றிருக்கிறேன் என்று கூறியதை நம்பி இருக்கக் கூடாது.

வெறும் வேலைக்காரி. என்ன... படித்த நாகரீகமான வேலைக்காரி என்று அலட்சியமாக நினைத்து, அசட்டையாக விட்டது இன்று பூதமாக வளர்ந்து நிற்கிறதே'– மனதிற்குள் புலம்பினாள் ராகவி.

'முதலில் இந்த வசிகரியை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும். முடியாது போனால் இந்த உலகத்திலிருந்தே! அதுதான்

அவளுக்குச் சரியான தண்டனை. ஆண்டுக்கணக்கில், [illegible] கட்டி வைத்திருந்த ஆசைக் கோட்டையை, இடையில் வந்த [illegible] தகர்க்க விட்டுவிட, நான் வக்கற்றவள் கிடையாது. என்னை [illegible] முட்டாள் என்று நினைத்தார்களா? ஆக்குகிறேன், அந்த [illegible] பேரையுமே முட்டாளாக்குகிறேன்' என்று மனதிற்குள் [illegible] திட்டம் தீட்டினாள் அவள். தனக்கு உதவியாக மேலும் இருவரை சேர்த்துக்கொண்டாள்.

இனி செயலில் இறங்குவதுதான் பாக்கி என்று நினைத்துக்கொண்டே, காரை வேகமாகச் செலுத்தினான் அவன். உடன் இரு அடியாட்களும் வந்தனர்.

மாலைக்குள் வசிகரியை வீட்டில் இருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும் என முடிவு செய்தது அந்த மூவர் கும்பல். [illegible] சில மணி நேரத்திலேயே, மதுரைக்கு விமானம் ஏறினார்கள். பிறகு, மதுரையில் அவர்களுக்காகத் தயாராக இருந்த காரில் ஏறி விரைந்தார்கள்.

வழியில் இருந்த ஒரு 'டெலிபோன் பூத்'தில் நுழைந்து தேவவிரதனின் பாட்டி வீட்டுக்கு போன் செய்து வசிகரியை அழைத்து- தேவாவின் கார் விபத்திற்கு உள்ளாகிவிட்டதாகவும், அவனுக்கு நினைவு தப்பும் முன்பாக இந்த போன் நம்பரை கொடுத்துவிட்டு 'வசு... வசு' என்ற பெயரைச் சொல்லிக்கொண்டே மயங்கிவிட்டதாகவும் கூறினார்கள்.

இதைக் கேட்டதும் வசிகரிக்கு சட்டென் கண்கள் இருண்டன.

சமாளித்துக்கொண்டு, "அவரின் உயிருக்கு ஆபத்தில்லையே, ப்ளீஸ்... உங்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கிறேன். தயவுசெய்து உடனே அவரை ஆஸ்பத்திரியில்..." என்றவளை இடைமறித்த, "இதோ பாரும்மா. இது விபத்து வழக்கு. எந்த வண்டிக்காரன் அடித்துவிட்டுப் போனானோ? ஏதோ அரை மயக்கத்திலே, ரத்தம் சிந்தக் கிடக்கும் ஆள் என்பதால்தான், இவ்வளவு தூரம் ஓடிவந்து போன் செய்தேன். இதற்கு மேல் உன்பாடு அவன்பாடு" என்று கூறியவன், கார் எந்த இடத்தில் அடிபட்டு நிற்கிறது



என்ற அடையாளத்தைக் கூறிவிட்டு, பட்டென்று தொடர்பைத் துண்டித்தான்.

பயத்தில் மடிந்த கால்களைப் பிடிவாதமாக நிறுத்தி அவசரமாகத் தண்ணீரைக் குடித்துவிட்டு- பணத்தை எடுத்துக்கொண்டு வீட்டில் இருந்து ஓடினாள் வசிகரி.

அவளின் முகத்தைப் பார்த்து, "ஏம்மா அழறீங்க. என்னாச்சு?" என்று கேட்ட தோட்டக்காரரிடம், தேவாவிற்கு அடிபட்டுவிட்டதாகவும், மேலும் இருவரை அழைத்துக்கொண்டு [illegible] இணைறு சாலைக்கு வரும்படியும் கூறிவிட்டு மின்னலாக விரைந்தாள்.

அடுத்த சில நிமிடங்களிலேயே அந்த முகம் தெரியாதவன் சொன்ன இடத்தையும் அடைந்துவிட்டாள். அதோ, அங்கே தேவா உடையதைப் போலவே ஒரு கார் ஓரமாக நிற்கிறதே... கடவுளே! அவன் என்ன நிலையில் இருக்கிறானோ? நீதான் காப்பாற்ற வேண்டும்' என்ற வேண்டுதலுடன் வேகமாக ஓடினாள்.

'வீட்டிலேயே ஆம்புலன்சுக்கு போன் செய்திருக்க வேண்டும்' என்ற எண்ணம் காலம் கடந்து தோன்றியது!

அவசரத்தில் அவளும் செல்போனை மறந்துவிட்டாளே! தேவாவின் செல் உடைந்து, பழுதடைந்துவிட்டதோ? இல்லையென்றால்...

அதோ கதவு பாதியாகத் திறந்திருக்கும் காரில் இருந்து ரத்தக் கறையுடன் ஒரு கை தெரிகிறதே! இது அதிக போக்குவரத்து இல்லாத சாலை என்பதால், இதுவரை மற்றவர் கண்களுக்குத் தெரியாமல் போயிற்றோ? நல்லவேளை, போன் செய்த அந்த ஆளாவது இந்தப் பக்கமாக வந்தாரே!' என்று நினைத்தவாறு, அருகே சென்றபோது, அவளின் கண்கள் அதிர்ச்சியில் விரிந்தன.

இது தேவாவின் கை அல்ல! அவன் என்றைக்கு இப்படி மூன்று விரலில் மோதிரமும், மணிக்கட்டில் இவ்வளவு பட்டையான 'பிரேஸ்லெட்'டும் அணிந்தான் என துணுக்குற்றது நெஞ்சம்.

ஏதோ தவறு நடந்திருக்கிறதா அல்லது இனிமேல் நடக்கப்

போகிறதா? என்று நினைத்ததுதான் தாமதம்.

அவளின் நாசியை, மருந்தின் நெடியுடைய துணியொன்று அழுந்த மூடியது!

முடிந்த வரை மூச்சிழுப்பதைத் தவிர்த்து, யாரென்று பார்க்க முயன்றாள்.

முடியவில்லை. முகத்தைக் கறுப்புத் துணி கொண்டு கட்டி மறைத்திருந்தவன், அவள் கண்கள் மயங்கிச் சொருகும்வரை முன்னால் வரவில்லை.

வசீகரியை காருக்குள் இழுத்துப் போட்டுக்கொண்டு கிளம்பினார்கள்... அந்த இரு ஆண்களும். ஒரே காரில் செல்வது ஆபத்து என்பதால், தனித் தனியாக வாடகைக்குத்தான் காரை ஏற்பாடு செய்திருந்தாள் ராகவி.

தன் ஆட்களிடம் கேட்கும் கேள்விக்கு, 'எஸ்... நோ' என்று மட்டும் பதில் சொல்லுங்கள் என்று முன்பே கூறி இருந்ததால், அவர்களும் அப்படியே நடந்துகொண்டார்கள்.

ஆனால், ராகவி அறியாத ஒன்றும் இருந்தது.

அதுதான் தேவவிரதனின் பாட்டி வீட்டு வருகை!

அவனுக்குத் தன் வசுவை உடனே பார்த்தாக வேண்டும் போல் ஒரு வேகம் தோன்றியது.

நாளைவரை காத்திருக்க இயலாதவனாக, குடும்பத்தினரிடம் சொல்லிக்கொண்டு– அவர்களின் கேலி, கிண்டலை ரசித்தபடியே விசிலடித்தவாறு காரைக் கிளப்பினான்.

'திருமணத்திற்கு எல்லோரிடமும் சம்மதம் வாங்கிவிட்டதைப் பற்றி நேரில் சென்று வசுவைக் கைப்பிடிக்குள் நிறுத்தித்தான் சொல்ல வேண்டும்' என்று நினைத்தான்.

தேவாவின் கார் வர, அதில் இருந்து அவனே இறங்கவும் திகைத்துப் போனார்கள் வீட்டு வேலையாட்கள். அவர்களின் முகத்தைப் பார்த்துவிட்டு, என்னவென்று கேட்டவன் அதிர்ந்தான்.

ஒரு கணம் உடலும், உள்ளமும் ஆடிப்போனது.

'இப்போது வசு எங்கே... எப்படி இருக்கிறாளோ?' என்ற



தவிப்பில் கலங்கியவன், 'காலர் ஐடி'யில் பதிவாகி இருந்த போன் நம்பரைக் குறித்துக்கொண்டு, மறுகணமே செயலில் இறங்கினான்.

அது ஒரு பொது தொலைபேசி எண் என்று தெரிந்த பிறகு, காவல்துறையினருடன் அங்கே விரைந்தான். தேவையான சில தகவல்கள் கிடைத்தன. சில மணி நேரத்திற்கு முன்பாக, இதே நிற காரில் இருந்து ஒரு ஆண் வந்து பேசியதாகச் சென்னார் 'பூத்'காரர்.

தன்னுடைய காரைப் போலவேவா! எதற்காக... வசுவை நம்ப வைப்பதற்காகவா? அவர்களிடம் மாட்டிக்கொண்டு அவள் என்ன கஷ்டப்படுகிறாளோ என்று துடித்தது அவனுக்கு.

காரின் மாடல், நிற விவரம் கூறி, சோதனைச் சாவடிகளுக்கு தகவல் தரப்பட்டது.

"உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் இருந்தால் சொல்லுங்கள் தேவவிரதன். சிறிய அளவிலே இருந்தாலும் தயங்காமல் தெரிவியுங்கள்" என்றார் அதிகாரி.

யோசித்த போது, சந்தேகிக்கும்படி எதுவும் நடந்திருக்கவில்லை என்றே தோன்றியது அவனுக்கு.

"ஓ.கே. தேவவிரதன். அவர்கள் பகலிலே அதிக தூரம் சென்றிருக்க வாய்ப்பில்லை. எப்படியும் ஏதாவதொரு 'செக் போஸ்டில்' மாட்டிக்க வாய்ப்புள்ளது. காட்டுப் பகுதிகளையும் பார்க்கச் சொல்லி இருக்கிறேன். தைரியமாக இருங்கள்" என்று தன் ஏற்பாடுகளைப் பற்றி கூறினார்.

நேரம் செல்லச் செல்ல– எந்த இடத்தில் இருந்தும் தகவல் இன்றிப் போகவும், தேவாவின் மனவலி கூடியது.

இவ்வளவு திட்டமிட்டுச் செய்தவர்கள், வசுவின் உயிருக்கு ஏதாவது... ஆபத்தை உண்டாக்கி இருந்தால்?

தான் வந்துகொண்டிருப்பது குறித்து முன்பே அவளிடம் தெரிவித்திருந்தால், ஒருவேளை இப்படியொரு பயங்கரத் திட்டத்தில் மாட்டி இருக்கமாட்டாளோ?

இல்லை. அவனுக்கு ஆபத்து எனும்போது, உடனே அங்கே ஓடத்தான் நினைத்திருப்பாள். அது அவர்களின் திட்டத்திற்கு சாதகமாகிப் போய்விட்டது.

ஏதாவது கடுகளவு சந்தேகம் இருந்தாலும், அவன் 'செல்'லுக்குத் தொடர்புகொண்டிருப்பாளே!

ஏதாவது தகவல் கிடைத்ததா? என்று குடும்பத்தினர் கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

மகனிடம் தைரியம் கூறிவிட்டு– கிடைத்த விமான டிக்கெட்டில் மூத்த ஆண்கள் விரைந்து வர, மற்றவர்கள் காரில் கிளம்பி வந்தார்கள்.

சொல்ல முடியாத வேதனையுடன் இருந்த மகனைப் பற்றிக்கொண்டு, "என்னை மன்னித்துவிடப்பா. நடந்த விஷயத்திற்கு நானும் காரணமாகிவிட்டேன். நேற்று நான் கொஞ்சம் அமைதியாக நடந்திருந்தால், வசிகரி தனியாக இருந்திருக்க வேண்டிய நிலை வந்திருக்காது. அதனால்தானே சுலபமாக ஏமாந்துவிட்டாள். சின்னப் பெண்... பாவம்! என்ன கஷ்டப்படுகிறாளோ?" என்று வருத்தமுடன் கூறினார் தந்தை.

ஆறுதலாக அவரின் கையைப் பற்றிய தேவாவின் நெற்றி சுருங்கியது.

'பணியாட்கள் தவிர குடும்பத்தினர் வேறு யாருமின்றி, வசிகரி தனியாகத்தான் இருக்கிறாள் என்பது சர்வ நிச்சயமாக அந்த கடத்தல் கும்பலுக்குத் தெரிந்திருக்கிறதே எப்படி? வேலையாட்கள் அனைவருமே விசுவாசம் உள்ளவர்கள். எந்த விஷயமும் வெளியே சொல்ல வாய்ப்பில்லை. பிறகு எப்படி...?' என்று யோசித்தான்.

அந்தப் பாவிகளிடம் இருந்து குறைந்தபட்சம் ஒரு போன்கூட வரவில்லையே?

வசுவின் குரலை ஒரு முறை கேட்டாலாவது, வெடித்துவிடும் போலிருக்கும் இந்த நெஞ்சின் வலி குறையுமே என்று தவித்தான்.

அப்போது ஒரு அழைப்பு வந்தது. அது 'டிராவல்ஸ்



...யில் இருந்து... "சார்... இன்று காலையில் உங்களின் ...ர் ராகவி மேடம், மதுரைக்குச் செல்லும் விமானத்தில் ... டிக்கெட் வேண்டும்... அவசரம் என்றார். ஏற்பாடு ...கொடுத்தோம். பிறகு உங்களின் தந்தையும், வழக்கமாக ...மிடத்தில் கிடைக்கவில்லையென்று, நம்மிடம் கேட்டார். ...வாங்கிக் கொடுத்தோம். உங்களின் வாடிக்கை எங்களுக்குத் ...ர்ந்து கிடைக்க வேண்டும் சார். நன்றி" என்றார்.

...ட்டென மனம் துணுக்குற்றது, தேவாவிற்கு.

...காலையில் சென்னை வீட்டில் பார்த்தபோதுகூட, 'நாளைக்கு பெங்களூரில் பார்க்கலாம்' என்று யாரிடமோ 'செல்'லில் ...றினாள் என்பது லேசாக நினைவுக்கு வந்தது.

பெங்களூருக்குப் போகிறவளுக்கு மதுரை டிக்கெட் எதற்கு? அதுவும் அவசரமாக மூன்று வேண்டும் என்றாளாமே?

எல்லோருமாகச் சேர்ந்து பேசியபோது ராகவி மீதான சந்தேகம் உறுதியானது. காவல் அதிகாரியிடம் விஷயத்தை வேகமாகத் தெரிவித்தார்கள்.

அதன்படி, ராகவியின் செல்போன் தொடர்பு, காவல் துறையால் கண்காணிக்கப்பட்டது. விமான டிக்கெட்டை வேறு இடத்தில் வாங்க வேண்டும் என்று யோசித்த ராகவி, தன் சிம்கார்டை மாற்றி– வேறு 'கார்டு' பயன்படுத்த வேண்டுமென்று நினைக்கவில்லை போலும்? அல்லது தன் திட்டத்தை அவ்வளவு சுலபத்தில் யாராலும் கண்டுபிடிக்க இயலாது என்ற இறுமாப்பா? அப்படித்தான் இருக்க வேண்டும். ஏஜென்ஸி ஆள் அழைக்கவில்லை என்றால், இவள் மீது சுலபத்தில் சந்தேகம் வந்திருக்காதே!

முன்னெச்சரிக்கை மாதிரி ஓரிரு வார்த்தைகளுடன் பேச்சை முடித்துக்கொள்ள, 'சிக்னல்' கிடைக்காததால் இடத்தைக் கண்டு பிடிக்கச் சற்று நேரம் தாமதமானது.

ஆள் நடமாட்டம் இல்லாமல் ஒதுக்குப்புறமாக இருந்த பழைய மண்டபத்தைச் சுற்றி இருந்த புதர் மறைவில் காரை நிறுத்திவிட்டு, நினைவின்றி இருந்த வசிகரியை மண்டபத்தின் உள்ளே தூக்கிச்

சென்றார்கள் இரு ஆண்கள்.

வேறு ஒரு காரிலிருந்து இறங்கி உள்ளே சென்றாள் ராகவி. அவர்களின் ஒப்பந்தத்திலே சில உரசல்கள் நேர்ந்தது. பேசியபடி இரண்டு லட்சத்தை வாங்கிக்கொண்டு, இவள் கதையை முடித்துவிடுங்கள் என்ற ராகவியின் வார்த்தையை அவர்கள் மறுத்தார்கள்.

"அட... என்ன மேடம். 'டிரெண்டு' தெரியாம முடிக்க சொல்றீங்களே! பொண்ணைப் பார்த்தா லட்டு மாதிரி இருக்கு. எவ்வளவு கேட்டாலும் கொடுத்துட்டு லபக்குன்னு கொத்திட்டுப் போறதுக்கு நம்மகிட்ட ஆள் இருக்கு.

நீங்க கொடுக்கிற ரெண்டு லட்சத்துக்காக மட்டுமா இம்மாம் பெரிய 'ரிஸ்க்' எடுத்தோம். இவள வச்சி நாங்களும் நாலு காசு பார்த்துக்குவோம்ல. அதை ஏன் கெடுக்கறீங்க?" என்று, கதி ஏறக் கூறினார்கள் அவர்கள்.

"விஷயம் புரியாமல் பேசறீங்களே. இவ உயிரோடு இருந்தால் எனக்குதான் பிரச்சினை." என்றாள் ராகவி.

"அந்த ஷேக்கோட கோட்டைக்குள்ளே போன பிறகு, இவள் வெளியே வர முடியாது. கவலையை விடுங்க" என்றார்கள் ஆண்கள்.

சற்று யோசித்தாள் ராகவி. என்னதான் பணம் கொடுத்தாலும், உயிருக்குத் துணிந்துதான் அவளுக்கு இந்த உதவியைச் செய்கிறார்கள். இவர்கள் இஷ்டப்படிதான் நடக்கட்டுமே. இவளால் வெளியே வரமுடியாது என்ற உறுதியே போதும்.

அதுவுமில்லாமல் என்னதான் சொன்னாலும், கொலை மாதிரிப் பெரிய விஷயமெல்லாம் செய்துவிட்டு நிம்மதியாகத் தூங்க முடியுமோ என்னவோ?

போலீசார் ஆறு மாதங்கள் என்ன... ஆறு ஆண்டுகள் கழித்துக்கூட குற்றங்களைக் கண்டுபிடித்து விடுகிறார்களே. எதற்குத் தொல்லை என நினைத்து அவர்களிடம் 'சரி' என்றாள்.

அப்போதுதான் கொஞ்சம் மயக்கம் தெளிய ஆரம்பித்திருந்த வசிகரிக்கு– மறு பக்கம் இருந்து கேட்ட பேச்சுக்குரல், நடுங்கி



...ந்து வைத்தது.

...சொல்லாத பாவிகளா! ஒரு பெண்ணின் வாழ்க்கையை எவ்வளவு சாதாரணமாக அழிக்க நினைக்கிறீர்கள்! உங்களை எல்லாம் நடுத்தெருவில் வைத்து தூக்கில் போட வேண்டும்' என்று கொதித்தது.

சில கணத்திலேயே தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு, இங்கிருந்து எப்படித் தப்பிச் செல்வது என்று யோசித்தாள் வசிகரி.

சத்தம் போட இயலாமல் வாயை அடைத்து, கைகளை பின்பக்கமாக இணைத்துக் கட்டி இருந்தவர்கள், எங்கே ஓடிவிடுவாள் என்ற அலட்சியத்தாலோ என்னவோ, கால்களைக் கட்டாமலே விட்டிருந்தார்கள்.

மருந்தின் தாக்கம் குறைய ஆரம்பிக்கவும், நூல் அளவே இமைகளைத் திறந்து நோட்டம்விட்டாள் வசிகரி. உடலை அசைத்தால், மீண்டும் மயக்கமடைய வைத்துவிடுவார்களே என்று மிகவும் கவனமாகவே நடந்துகொண்டாள்.

ஏதோ உடைந்து, சிதைந்து போன இடத்தில் இருப்பது புரிந்தது. மீண்டும் மறுபக்கம் இருந்து மெல்லக் கேட்டது பேச்சுக் குரல். யாருடனோ பேரம் நடத்தினார்கள். விலை படிந்துவிட்டதோ?

இதற்கிடையில், "நான் போகிறேன். நீங்கள் இவளை கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கிளம்பினாள் ராகவி. அவள் கார் சீறிக்கொண்டு சென்றது.

வழியில் 'பெட்ரோல் டேங்'கை நிரப்பிவிட்டு, உணவு வாங்கிக்கொண்டு காருக்கு வந்தபோது, தலையிலே இடி விழுந்தது போல அதிர்ந்து போனாள்.

கண்களை இருட்டிக்கொண்டு வந்ததில், கையில் இருந்த பொருட்கள் கீழே விழுந்தன!

கொலை வெறி என்பார்களே... அதை, இன்று தன் முன்னே வந்து நின்ற தேவவிரதனின் முகத்திலே கண்டாள் ராகவி!





# 12

பாவி! சாரியாக மோப்பம் பிடித்துவிட்டானே! எப்படி முடிந்தது? அவள் எவ்வளவு கவனமாக இருந்தா... ஆனால், சமாளித்துவிட முடியாதா என்ன? முயற்சி செய்துதான் பார்க்கலாமே? முடிந்தா... நழுவிக்கொள்ளலாம். இல்லையென்றாலும் அவளை என்... கையும் களவுமாகவா பிடித்துவிட்டார்கள்.

"எ...என்ன தேவா. ஏதாவது முக்கியமான விஷயமா? இந்... நேரத்தில் இங்கே கிராமத்திற்கு வந்திருக்கிறீர்கள்? காலையில்... கூட சென்னையில் இருந்தீர்களே?" என்று சாதாரணம் போ... பேச முயன்றாள்.

முயற்சி மட்டும்தான். வார்த்தைகள் இழுத்தன.

"சொந்த ஊருக்கு வருவதற்கு முக்கியமான விஷயம் இருக்... வேண்டுமா என்ன? நினைத்தால் கிளம்பி வர வேண்டியது தானே" என்றவன், "ஆமாம்... இந்த இருளடைந்த நேரத்திலே நீ இங்கே என்ன செய்கிறாய்? அலுவலக வேலையாக பெங்களூருக்கு செல்வதாகச் சொன்னாயே?" என்று கொக்கி போட்டான்.

"அ... அது... அந்த வேலையை உடனே செய்ய வேண்டு... என்ற அவசியமில்லை என்பதால், இங்கே பக்கத்தில் இருக்கு... அருவிக்கு ஒரு 'டிரிப்' அடித்து, 'ரிலாக்ஸ்' பண்ணலாம் என்று வந்தேன். நீங்கள் இங்கே வருவது தெரிந்திருந்தால்..." என்றவளை இடையிட்டு,

"தெரிந்திருந்தால்...?" என்று கேட்டான்.

"இருவரும் இணைந்தே வந்திருக்கலாம்" என்றாள்.

"அதனாலென்ன. இப்போதுதான் சந்தித்துவிட்டோமே. இனிமேல் இணைந்தே போனால் போயிற்று. எதிர்பாரா... என்னைப் பார்த்த இன்ப அதிர்ச்சியில், கையில் இருந்ததை கீழே போட்டுவிட்டாயே?" என்றபடியே பையை எடுத்தான்.

உள்ளே இருந்த உணவு வகைகளைப் பார்த்தான்.

“உடம்பு ‘வெயிட்’ போட்டுவிடும் என்று அளவோடு சாப்பிடுகிறவளுக்கு எதற்கு இத்தனை பரோட்டா ராகவி? ஒருவேளை இது மாதிரி ‘டிரிப்’ அடிக்கும்போது மட்டும், கட்டுப்பாடுகளைத் தளர்த்தி இஷ்டத்திற்கு மொக்கிக்கொள்வாயோ?” என்றான் ஏளனமாக.

வியர்த்துக் கொட்டியது அவளுக்கு.

“இடையிலேயே இப்படி மாட்டிக்குவோம் என்று எதிர்பார்க்கவில்லை போலும்?” என்றான், புருவம் உயர.

“என்ன சொல்கிறீர்கள்...?” என பசப்ப முயன்றவளுக்கு, ‘சுரீர்’ என்று ஒரு அறை விட்டு, “ஏய்... இதற்கு மேலும் நடித்தாய் என்றால் தொலைத்துவிடுவேன் தெரிந்துகொள். ச்சீ! எவ்வளவு கேவலமான புத்தி உனக்கு? இவ்வளவு பெரிய விஷயத்தைச் செய்துவிட்டு, அதை மறைத்துவிடலாம் என முயற்சிக்கிறாயே... பாதகி.

உன் ‘கிரிமினல்’ வேலையை உன்னுடைய செல்லை வைத்தே கண்டுபிடித்தாயிற்று. வசீகரி, உன் வசம் அடைத்து வைக்கப்பட்டு இருக்கிறாள் என்பது வரை எங்களுக்குத் தெரியும். ம்... அந்த இடத்திற்கு காரை ஓட்டு” என்று கடுங்கோபமுடன் கூறினான்.

போலீஸ் ஜீப் பின்தொடர, காரை ஓட்டினாள் ராகவி.

இப்போதும் கூட அதிர்ச்சியில் இருந்து வெளிவர முடியவில்லை அவனால்.

ஒரு பெண்ணின் வாழ்வையே அழிக்கத் துணிந்த, அந்தக் கல் நெஞ்சக்காரியின் முகத்தில் தன் திட்டம் புஸ்வாணமாகிப் போன திகைப்பு அப்பட்டமாகத் தெரிந்தது.

வசுவை நேரில் பார்க்கிற வரை, இந்த வலி குறையாதென்று தோன்ற, “வேகமாகப் போ” என்று உத்தரவிட்டான்.

ஆனால், என்னதான் வேகமாகவே சென்றபோதும், இவர்கள் அந்த இடிந்த மண்டபத்தை அடைந்தபோது— அங்கே வசீகரியைக் காணாமல், அந்தத் தடியன்கள் இருவருமே தேடிக்கொண்டுதான்



இருந்தார்கள்.

“அப்போதே சொன்னேனே... காலையும் கட்டித்தொலை என்று! மடையன் மாதிரி ‘தேவையில்லை’ என்றாய். இப்போது பார், திருட்டுப் பூனை மாதிரி ஓசை படாமல் ஓடிவிட்டாள். ராகவி வருவதற்குள் தேடிப் பிடித்துவிட வேண்டும். இல்லையென்றால், அவள் பிசாசாக மாறிக் கத்துவாள்” என்றான், ஒருவன்.

“கையிலே சிக்கட்டும் அவள். நையப்புடைக்கிறேன். லேசில் மெயின் ரோட்டுக்குக் போய்விட முடியாது. முள்ளும், புதருமாக மண்டிக் கிடப்பதால் மெதுவாதான் போக முடியும். ஸ்ஸ்... இந்த முள், நம்மையே பதம் பார்க்கிறதே! அவள் எம்மாத்திரம்? வெளிச்சம் அதிகம் இல்லாத இருட்டிலே, இது மாதிரி முள் ஏதாவது அவள் முகத்திலே கிழித்துவிட்டால் அவ்வளவுதான். பாதிப் பணத்தையே குறைத்துவிடுவான் அந்த ஷேக் சண்டாளன். அப்படி எதுவும் நடக்கும் முன் பிடிக்க வேண்டும் சீக்கிரம்” என்றான் மற்றவன்.

“இவ்வளவு அடர்ந்த காட்டிலே காட்டு நாய், நரியென்று என்னென்ன இருக்குமோ? அப்படி எதனிடமாவது மாட்டி, அவள் மண்டையைப் போட்டுவிட்டால் அவ்வளவுதான். அந்தப் பாதியுமே...” என்றவனின் பேச்சு இடையிலேயே நின்று போக,

“என்னடா?” என்றான் இன்னொருவன்.

“எல்லாம் நாசமாகிப் போயிற்று. நம்மைச் சுற்றி வளைத்துவிட்டார்கள். நிற்காமல் ஓடி வா” என்றுவிட்டு ஓட்டம் பிடித்தான்.

ஆனால், அடுத்த ஓரிரு நிமிடங்களிலேயே காவலர்களின் கைகளிலே சிக்கி, நன்றா...க கவனிக்கப்பட்டார்கள்.

கையிலே டார்ச்சுடன் வேகமாகக் காட்டினுள்ளே சென்று, “வசு... வசு எங்கே இருக்கிறாய்?” என்று சத்தமாகக் கத்தியபடியே தேடினான் தேவவிரதன்.

மனதைக் கசக்கிப் பிழிந்த அந்த நிமிடங்களை, வார்த்தைகள் கொண்டு விளக்கிட இயலாது. உட்புறமாகச் சென்று கொண்டே இருந்தவனின் தேடல், முடிவிற்கு வந்தது.

அடர்ந்த மூங்கில் புதருக்குள்ளே, பொந்து மாதிரி இருந்த இடத்திலே உடலைக் குறுக்கி, பதுங்கியவாறு அமர்ந்திருந்தாள் வசிகரி.

கவனமாகப் பார்த்தால் தவிர, அவள் இருப்பது தெரிய வாய்ப்பில்லை!

'டார்ச்'சின் ஒளியைத் தொடர்ந்து, தேவாவின் குரலும் கேட்கவேதான், அந்த இடத்தைவிட்டு வெளியே வர முயன்றாள்.

முயற்சியின் வேகத்திலே, சில கீறல்கள் விழுந்தன. வலியில் முனகியவளின் மெல்லிய சத்தத்தைக் கொண்டே, அங்கே விரைந்தான் தேவா.

அவளைக் கண்டுவிட்டோம் என்பதில் மகிழ்ச்சியும், அவள் இருந்த நிலையைப் பார்த்து வேதனையும் உண்டாக, "வசும்மா" என்றபடி போனவன், மேற்கொண்டு சிறு கீறல் கூட விழாதபடி அவளை வெளியே இழுத்து, வாயில் ஒட்டி இருந்த பிளாஸ்டரை எடுத்துவிட்டு, அவளை வாரி அணைத்துக்கொண்டான்.

"தேவா" என குரல் தழுதழுக்க அழைத்து, அவன் தோளிலே பாதுகாப்புடன் சாய்ந்தாள் வசிகரி.

'நடப்பதெல்லாம் நிஜம்தானா?' என்ற சந்தேகத்தைப் போக்கின அவனுடைய இறுகிய அணைப்பு, "என்னால் எவ்வளவு கஷ்டப்பட்டுவிட்டாய். மன்னித்துவிடு கண்ணம்மா" என்று குரல் கரகரக்கக் கூறியபடி அவனுடைய வருடலும்!

அணைப்பை விலக்காமலேயே அவளின் கையைக் கட்டி இருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டு, மிக மென்மையாக தடவிக் கொடுத்தான்.

அங்கும் இங்குமாகத் தெரிந்த கீறல்கள் வெளிப்படுத்திய சிவப்புக் கோடுகள், அந்த ஆண்மகனின் தொண்டையை இறுக்கி, கண்களைப் பனிக்க வைத்தன.

செருமிக்கொண்டு, "அவள் நடந்தே வருகிறேன் தேவா" என்று கூறியதை மறுத்துவிட்டு, "இதைப் பிடி" என்று டார்ச்சை அவளிடம் கொடுத்துவிட்டு, அவளைக் கைகளிலே ஏந்திக்கொண்டு



வந்தான்.

இருவரையும் பார்த்த ராகவியின் முகம் கறுத்தது.

இறக்கிய பிறகும் அவளைக் கைப்பிடியிலே நிறுத்திய தேவவிரதன்- ராகவியைப் பார்த்து, "ஒருவரை, அதுவும் ஒரு பெண்ணை இவ்வளவு அருவருப்புடன் நான் பார்க்கக்கூடும் என்று ஒருபோதும் நினைத்ததில்லை.

கொஞ்சமும் உறுத்தலின்றி எந்த அளவிற்குத் துணிந்திருக்கிறாய்? மாமா மாதிரியொரு மனிதருக்குப் போய் இப்படியொரு பெண். சேச்சே...! விஷயம் தெரிந்தால் மனிதர் நொறுங்கிவிட மாட்டாரா? மாமாவின் கவுரவத்திற்காக இப்போது உன்னை வெறும் எச்சரிக்கையோடு விடுகிறேன். இதற்கு மேல் கோணல் எண்ணத்துடன் என் வீட்டுப் பக்கம் வந்துவிடாதே" என்று கடுமையாகக் கூறினான்.

பிறகு காவல் அதிகாரியிடம் விளக்கி நன்றி கூறிவிட்டு, இருவருமாக வீட்டுக்குக் கிளம்பினார்கள்.

ராகவியை மிரட்டலோடு அனுப்பி வைத்துவிட்டு, இரு தடியன்களையும் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு கிளம்பிச் சென்றார்கள் காவலர்கள்.

இதை அடுத்து- பாட்டி வீட்டில் கிடைத்த வரவேற்பில் திக்குமுக்காடிப் போனாள் வசிகரி.

"வசும்மா" என்ற அழைப்புடன் பெரிய மாமா கை நீட்ட- கண்ணீரும், புன்னகையுமாக ஓடிச் சென்று பற்றிக்கொண்டாள்.

மற்றவர்கள் அன்பும், வாஞ்சையுமாக அவளின் தலையை, முதுகை, கையை இதமாக வருடிக் கொடுப்பதை உணர்ந்தபோதும்... முழுமையாக நம்புவதற்கு சிரமமாகவே இருந்தது!

தங்களின் பேச்சுக்காக வருத்தப்பட்டவர்களை, கடைசியாக அவள்தான் இதமாகப் பேசி தேற்றும்படி ஆனது.

சுடுதண்ணியைத் திறந்துவிட்டு, தலைக்கு ஊற்றி வரச் சொன்ன அத்தைகள், தலையைத் துவட்டிக்கொள்ளம்மா என்று துண்டைக்

கொடுத்துவிட்டு- காயங்களுக்கு மருந்திட்டார்கள்.

வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத அந்தத் தருணத்தை, ஆழ்ந்து அனுபவிப்பவன் போல அதே அறையில் சற்று தொலைவில் இருந்த சோபாவில் அமர்ந்து பார்த்தான் தேவவிரதன்.

"இன்னும் எவ்வளவு நேரம்தான் பழைய விஷயங்களையே பேசிக்கொண்டு இருப்பீர்கள்? இனிமேல் நடக்க வேண்டிய பெரிய காரியங்களைப் பற்றி முடிவெடுக்க வேண்டாமா? குறைந்தபட்சமாக இப்போதைக்கு நாமெல்லாம் இந்த அறையைவிட்டு வெளியேறவாவது வேண்டும். அருமை அண்ணன், நாமெல்லாம் எப்போது இடத்தைக் காலி செய்வோம் என்று எதிர்பார்த்து, மிகவும் பொறுமையாக வசு அண்ணியுடன் கண் ஜாடையில் பேசுகிறார்.

பொறுமை ஒரேயடியாகத் தீர்ந்து,'எல்லோரும் கிளம்புகிறீர்களா?' என்று கேட்டு விரட்டும் முன்பு, நாமாகக் கிளம்பிவிடலாம் என்பது சின்னவனின் தாழ்மையான அபிப்பிராயம்" என்றுவிட்டு, "என்னண்ணா... நான் சொன்னது சரிதானே?" என்று கேட்டு கண் சிமிட்டினான் இளையவன்.

"வேலை கற்றுக்கொள்ள என்று அலுவலகத்திற்கு தினமும் ஒரு மணி நேரம் வந்ததில் இருந்தே, உன் மூளை மிக நன்றாக வேலை செய்கிறதடா தம்பி" என்று முறுவலோடு கூறினான் அண்ணன்.

இறுக்கம் குறைய- அனைவருமே முழு மனதுடன் சிரித்தனர். புது ஜோடி முகத்தில் இன்னும் உற்சாக பூரிப்பு.

எல்லோரும் சென்ற பிறகு, அவளின் அருகே அமர்ந்து, "நம் காதலால், பிரிந்திருந்த உறவுகள் ஒன்றாகிவிட்டது. பாட்டி மிகவும் மகிழ்ந்து போவார்கள்" என்றவன்,

"வசு, ரஞ்சனிடமும் நான் நல்லவிதமாக நடக்கவில்லையே! நம் திருமணத்திற்கு முழுமனதுடன் சம்மதிப்பானா?" என பரபரப்பான குரலிலே கேட்டான்.

"நிச்சயம் ஒத்துக் கொள்வான்" என்றாள் மர்மப் புன்னகையுடன்.



"எப்படி, இவ்...வளவு உறுதியாகச் சொல்கிறாய் வசு?"

"ரஞ்சிதான், நான் இங்கே வரும்போதே, 'அந்த தேவவிரதன் நம்மை எவ்வளவு கடுமையாகப் பேசியிருக்கிறார். வாய்ப்புக் கிடைத்தது என்றால் விட்டுவிடாமல், அந்தமனிதரை நன்றா...கப் பழி வாங்கி விடக்கா என்றிருக்கிறானே.' அதற்காகவும் தானே மறுக்காமல் திருமணத்திற்கு சரியென்று இருக்கிறேன்." என பாவனையுடன் கூறிவிட்டு, கிண்கிணியாகச் சிரித்தாள் வசீகரி.

வெண்பற்கள் தந்தமாக ஒளிவீச, தானும் 'பளிச்'சென்று புன்னகைத்து, அவள் நெற்றியிலே முத்தமிட்டான் தேவவிரதன்.

**(முற்றும்)**



## கரைந்த இரவு

பத்தே மணி நேரம்தான்
நாம் பேசிக்கொண்டிருந்தோம்-
அதற்குள் எப்படித்தான்
வந்ததோ இருள்!

நீ பவுர்ணமி என்பதால்
அன்று சுகமாக வீடு
சென்றோம்!

உந்தன் பாதம் படும் பூமியில்
மலரும் பூக்களில்
படுத்துக்கொள்ள ஆசையுடன்
உன் நினைவில் கரைந்தது
அன்றைய இரவும்!

*- என். சுரேஷ், சென்னை.*